# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (16.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 324




09 சிறுவரைப் பாதுகாப்போம்



13 மரணம் விரைவில் வரும்



33 தீவுகளின் கையில் தொடர்

# அரசு - கூட்டமைப்பு பேச்சுக்கு புதிய திகதி இன்னும் இல்லை

## தாம் அனுப்பி வைத்த கடிதத்துக்கு பதிலில்லை என்கிறார் சுரேஷ் எம்.பி.

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

அரசு - கூட்டமைப்பு இடையே ஒத்திவைக்கப்பட்ட பேச்சு மீண்டும் எப்போது நடக்கும் என்பதற்கான திகதி எதுவும் இதுவரை குறிக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். கடந்த 3ஆம் திகதி நடைபெறுவதாக இருந்து பின்னர் ஒத்தி வைக்கப்பட்ட பேச்சு இன்று நடைபெறும் என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால் பேச்சு இன்று நடக்கும் சாத்தியங்கள் எதுவும் இல்லை என்று சுரேஷ் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அரசு - கூட்டமைப்புப் பேச்சு கடந்த ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகியது. பத்துச் சுற்றுக்களின் பின்னர் அது தடைப்பட்டது. பேச்சில் எந்த முன்னேற்றமும் இல்லை என்று குற்றஞ்சாட்டிய கூட்டமைப்பு, தீர்வு குறித்து அரசு தீர்க்கமான முடிவை அறிவிக்காத வரையில் பேச்சைத் தொடர முடியாது என்று தெரிவித்தது.

செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்த சந்திப்பைத் தொடர்ந்து, பேச்சு மீண்டும் ஆரம்பமானது. செப்ரெம்பர் 16ஆம் திகதி 11ஆவது சுற்றுப் பேச்சு இடம்பெற்றது.

தொடர்ந்து 12ஆவது சுற்றுப் பேச்சு இந்த மாதம் 3ஆம் திகதி இடம்பெறும் என்று இரு

பக் 35

## அமைச்சர் பீரிஸ் பிரான்ஸில்

கொழும்பு, ஒக். 16

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உத்தியோகபூர்வ பயணமாக பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் அலென் யூபேவைச் சந்தித்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிரான்ஸ் அரசுத் தலைவரின் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கான ஆலோசகரையும் சந்தித்தார். இராஜதந்திர உயர்நிலை மாநாடொன்றிலும் அவர் பங்கெடுத்தார்.

பிரான்ஸில் உள்ள தமிழர்கள் எதிர்ப்புக் காட்டலாம் என்ற அச்சம் காரணமாக பீரிஸின் வருகை குறித்து எந்தவிதமான முன்னறிவிப்பையும் கொழும்பு வெளியிடவில்லை என்று பாரிஸிலுள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

பீரிஸின் பயணம் பற்றித் தகவல் அறிந்த நாடுகடந்த தமிழீழ அரசு அதற்கான தனது எதிர்ப்பை பிரான்ஸ் வெளிவிகார அமைச்சிடம் பதிவு செய்துள்ளது. (உ)

## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அமைச்சர் நிமல் - சொல்ஹெய்ம் பேச்சு

### ஒஸ்லோவில் வெளிவிவகார அதிகாரிகளுடனும் சந்திப்பு

கொழும்பு, ஒக். 16

அரச தரப்பு பேச்சுக்குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா நேற்றுமுன்தினம் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

தற்போது ஒஸ்லோவில் தங்கியுள்ள அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா மற்றும் அமைச்சர் சொல்ஹெய்ம் ஆகியோருக்கிடையிலான பேச்சில் கடந்த காலத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை தொடர்பாகவும் அதன் பின்னரான பேச்சுத் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக நோர்வே வெளிவிவ

பக் 35

## ஆஸியில் காத்திருக்கிறது இலங்கைக்கு நெருக்கடி

கொழும்பு, ஒக். 16

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் (கொமன்வெல்த்) தலைவர்கள் உச்சி மாநாட்டில், கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாபரினால் இலங்கை அரசு கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று எதிர்வு கூறப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த விவகாரத்தை இந்த மாநாட்டில் எழுப்ப ஹாபர் உறுதியாக இருப்பதனால் கொமன்வெல்த் மாநாட் டில் பிளவுகள் ஏற்படலாம் என்று கனடாவில் இருந்து வெளியாகும் 'தி கசட்' என்ற பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளில் இலங்கை அரசு முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும் என்று தான் கொடுத்து வரும் அழுத்தத்தைத்

பக் 35

## வட மாகாண சபைக்கு பெப்ரவரியில் தேர்தல்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டு வருவதாகக் கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதின் பின்னர் கிழக்கு மாகாணத்துக்குத் தேர்தல் நடத்தப்பட்ட போதும் வடக்கு மாகாணத்துக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை. இந்தத் தேர்தலை விரைவில் நடத்தும்படி இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

வடமாகாண சபைத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்தில் நடத்த அரசு திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே அறிவித்திருந்தார். இந்நிலையில் தேர்தலைப் பெப்ரவரியில் நடத்தத் அரசு திட்டமிட்டு வருவதாகச் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் இந்தத் திட்டத்தின் பின்னணியில் வேறு காரணங்கள் இருப்பதாகக் கூட்டமைப்புக் குற்றஞ்சாட்டுகிறது. மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் இடம்பெற உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை

பக் 35

## மஹிந்தவுக்கு 'தமிழ்நெற்' மூலம் அழைப்பாணை

கொழும்பு, ஒக்.16

அமெரிக்காவின் கொலம்பியா நீதிமன்றத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணையை அவர் தொடர்ந்து ஏற்க மறுத்ததால், அதனை 'தமிழ்நெற்' இணையத்தில் வெளியிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் மகிந்த ராஜபக்ஷ மீது பல்வேறு போர்க் குற்ற வழக்குகள் தொடரப்

பக் 35

## 25 பவுண் நகைகளை அபகரித்தவர்கள் கடலில் தள்ளி வீழ்த்தினர் பெண்ணை

### அழைத்துச் சென்றவரும் படகோட்டியும் கைது

யாழ்ப்பாணம்,ஒக் .16

திருமணம் செய்வதாகக் கூறி அழைத்துச் சென்ற பெண்ணைக் கடலில் தள்ளி வீழ்த்திவிட்டு 25 பவுண் நகைகளை அபகரித்துச் சென்றதாகக் கூறப்படும் நபரையும் படகோட்டியையும் நேற்று நெடுந்தீவுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நெடுந்தீவுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணை கடற்றொழிலாளர்களின் உதவியுடன் மீட்டு வந்த கடற்படையினர் நெடுந்தீவு பொலிஸாரிடம் நேற்று அதிகாலை ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

பக் 35


உங்கள் வியாபார நிலையங்களிலும், வீடுகளிலும் இடையூறுறின்றி தொடர்ச்சியான மின்சாரத்தைப் பெற்றிட

SINGER POWER ஜெனரேட்டர்கள்

இன்றே விரையுங்கள்



Power 900
சக்தி : 900 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

Power 2000
சக்தி : 2000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 6.5/3600RPM

Power 3000D
சக்தி : 3000 W
DC உள்ளீடு : 12V/8.3A
என்ஜின் வகை : Air Cooled/4 ஸ்ட்ரோக் OHV 2.4/3600RPM

சங்கானை 077 2208232

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389

சுன்னாகம். 021 224 0555

நெல்லியடி. 021 226 4937

மானிப்பாய். 021 225 5343

சாவகச்சேரி 021 227 0197

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி: news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழைக்கான சாத்தியம்

# பொதுமக்களுக்காக சேவைகளை வழங்க பொலிஸார் ஆவலுடன் காத்திருக்கின்றனர்

## யாழ். வேம்படியில் நடந்த நடமாடும் சேவையில் நீல் தளுவத்த



யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த உரையாற்றுகிறார். நடமாடும் சேவைக்கு வந்த மக்களின் ஒரு பகுதியினரும் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், ஒக். 16

பொது மக்களின் நன்மை கருதிப் பொலிஸார் மேலும் பல சேவைகளை வழங்கத் தயாராக இருக்கின்றனர் எனத் தெரிவித்தார் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் பொது மக்களுக்காக நடத்தப்பட்ட நடமாடும் சேவை நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தளுவத்த மேலும் தெரிவித்தவை வருமாறு:

அரச நிறுவனங்களுடன் இணைந்து ஏற்கனவே நாம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடமாடும் சேவைகளை நடத்தியிருக்கிறோம். இவற்றின் மூலம் பெரும் எண்ணிக்கையான மக்கள் பயனடைந்திருக்கின்றனர்.

வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா, யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா, யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா ஆகியோர் இணைந்து இந்த நடமாடும் சேவைகளை நடத்தி வருகின்றனர்.

தொடர்ந்தும் பல்வேறு சேவைகளை பொது மக்களுக்காக வழங்க ஆவலுடன் காத்திருக்கின்றோம். கிராமங்கள் தோறும் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைத்தும் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம்.

கடந்த மாதம் 15ஆம் திகதி தொடக்கம் இன்று வரையும் பொது மக்களின் நலன்களுக்காக பொலிஸாரால் 2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த நிதி பொலிஸ் உத்தியோகத்தர்களதும் ஐ.நா. முகவர் அமைப்புகளிடம் இருந்தும் பெறப்பட்டதாகும். பொலிஸ் நிலையங்களின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வுகள் இந்த முறை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது.

பொது மக்கள் பிரச்சினை ஏற்படும்போது மட்டும் கடவுளை நினைக்கின்றனர். பொலிஸாரின் உதவியை நாடுகின்றனர். ஏனைய சந்தர்ப்பங்களில் மறந்து விடுகின்றனர். ஆனால் நாம் மக்களுக்கு தொடர்ச்சியாகச் சேவைகளை வழங்கி வருகின்றோம்.

மேலும் நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் எமது பண்பாடுகளை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வு யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி சமன்சிகேரா தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள். இராணுவத்தின் 51ஆவது படையணியின் பிரிகேடியர் உள்ளிட்டவர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

நடமாடும் சேவையில் நேற்று மதியம் வரையும் சுமார் முன்னூறுக்கும் அதிகமான பொதுமக்கள் பங்கேற்றிருந்தனர். (ஒ-14)

# பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த யாழ். செயலகத்தில் விரைவில் புதிய அலுவலகம்

## தயக்கமின்றி எவரும் முறையிடலாம் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வரும் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடு செய்யவும் முற்றிலுமாக கட்டுப்படுத்தும் நோக்குடனும் யாழ். மாவட்ட செயலகத்தில் விரைவில் புதிய அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அரச அதிபர் மேலும் கூறியதாவது;

தற்போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் பெரும் எண்ணிக்கையில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகி வருகின்றனர். அவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இன்னும் ஓரிரு வாரங்களில் இப்புதிய அலுவலகம் யாழ். மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வருடத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 114 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும், 175 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றதாக பதிவாகியுள்ளது. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு அதிகளவான சுதந்திரம் கொடுப்பது ஒரு காரணமாக அமைகிறது. முன்னைய காலத்தில் கட்டுப்பாட்டுடன் வளர்ந்த இளைஞர்கள், யுவதிகள், பெண்கள் இன்றைய காலத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றனர். இதுவும் அதிகளவான துஷ்பிரயோகங்களுக்கு காரணமாகவுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்களுக்கு அதிகளவான தண்டனை வழங்கப்படவேண்டும். தண்டனை குறைக்கப்படுவதால் இவர்கள் அணி, அணியாக சமூகத்தில் நடமாடி வருகின்றனர். பெண்களை சிறுவர்களை பாலியல் நுகர்வுப் பொருளாக பார்க்கும் துஷ்பிரயோகம் செய்யும் நபர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்காகவும், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் பொருட்டுமே இந்த அலுவலகம் செயற்படவுள்ளது. இந்த அலுவலகத்தில் பெண்கள் அல்லது பாதிக்கப்பட்ட நபர்கள் யாராக இருந்தாலும் தயக்கமின்றி வந்து முறைப்பாடு செய்யலாம் - என்றார். (ஒ-311)

## சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி

திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலய சமூகமும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து நடத்தும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் அன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் கண்காட்சி இடம்பெறும்.

இதன்போது, பாடசாலை மாணவர்கள் பங்கேற்கும் சுகாதார விழிப்புணர்வு நாடகங்கள், தெருக்கூத்துக்கள் பேச்சு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தரினால் போசாக்கு இளவயது கர்ப்பம், இனப்பெருக்க சுகாதாரம், கருச்சிதைவு, டெங்கு நோய் கட்டுப்பாடு போன்றவை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-14)

# மிதிவெடியில் சிக்கிய கிளிநொச்சி வாசி படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 16

தடிவெட்டக் காட்டுக்குச் சென்ற குடும்பஸ்தர் அங்கிருந்த மிதிவெடி வெடித்ததில் கால் பாதத்தில் படுகாயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்தப் பிரதேசம் மிதிவெடி இருப்பது பற்றி அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி முறிகண்டியில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த சின்னராசா இந்திரன் (வயது 38) என்பவரே காலில் படுகாயமடைந்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதி கழிவு வாய்க்கால் கட்டட புனரமைப்புப் பணியில் இவர் உள்ளிட்ட குழுவினர் வேலையில் ஈடுபட்டிருந்தனர். மழை என்பதனால் சிறிய கொட்டில் ஒன்று போடுவதற்காக தடிகள் வெட்டும்பொருட்டு காட்டுக்குச் சென்றபோது சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

(ஒ-4-319-78)

# நிகழ்வுகள்

**கவிதைத் தொகுப்பு வெளியீடு**

குரும்பையூர் தம்பித்துரை ஐங்கரனின் அமாவாசை நிலவு கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு சட்டத்தரணி சு.சிவபாதம் தலைமையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-55)

**கருத்தாடல் நிகழ்வு**

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் ''நவ - தாரண்மை வாதமும் ஜே.வி.பி. பிளவும்'' ஒரு கருத்தாடல் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள தனியார் கல்வியகத்தில் நடைபெறும். ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ-313)

**இலவச வைத்தியசேவை ஆண்டு விழா**

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நடத்திவரும் இலவச வைத்தியசேவையின் 10 ஆம் ஆண்டு விழா இன்று காலை 10 மணிக்கு ஆச்சிரம வைத்தியசேவை புதிய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் ஆரம்பம் முதல் இன்று வரை பணியாற்றிய, தற்போது பணியாற்றும் வைத்தியர்கள் அனைவரும் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (ஒ-236)

**நூல் வெளியீட்டு விழா**

மட்டுவில் தெற்கு, வேரக்கேணி இந்து சாமி ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் பண்டிதர் செ.சிவலிங்கத்தின் ''கந்தபுராணம் சுருக்கம்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.துரைரத்தினம் தலைமையில் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார். (ஒ-207)

***

வெற்றி துஷ்யந்தனின் 2 ஆவது கவிதைத் தொகுப்பாக 'மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள், எனும் நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.15 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. எழுத்தாளர் தொணியன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-311)

**மானச சஞ்சாரம்**

உலக உளநல தினத்தை முன்னிட்டு மானச சஞ்சாரம் எனும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் உலக சுகாதார நிறுவனத்துக்கான பிரதிநிதி டாக்டர் பிலிடொலிஸ்ரஸ்டம் மெத்தா பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வார். (ஒ-311)

**பரிசளிப்பு விழா**

அன்பொளி கல்வியகத்தின் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் துரைராசா இளங்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-311)

**ஆசிரியர் தின விழா**

மட்டுவில் தெற்கு வளர்மதி கல்விக் கழகத்தின் ஆசிரியர் தினவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வே.கந்தையா கலந்து கொள்வார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி கலாசாலை விவகாரத்துக்கு விரைவாகத் தீர்வு காண வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 16

பலாலி ஆசிரியர் கலாசாலையின் கற்றல் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் எழுந்துள்ள பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட பலாலி ஆசிரிய கலாசாலை தொடர்பாக தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வெளிவருகின்ற செய்திகள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளன.

எமது சங்கத்தையும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. சிறந்த கல்வியாளர்களால் ஆயிரக் கணக்கான ஆசிரியர்களை உருவாக்கி நாட்டுக்கு அர்ப்பணித்த கலாசாலையின் பெருமையை காற்றில் பறக்க விடுவது அநாகரிகமான செயலாகும்.

கல்வி அமைச்சிலிருந்து வருகை தந்த உயர் அதிகாரிகள் இது தொடர்பாக கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் போன்றோரோடு கலந்துரையாடலை நடத்தியிருப்பதாக நாம் அறிகிறோம்.

ஆசிரிய கலாசாலைக்குப் பொறுப்பாகவுள்ள கல்வி அமைச்சும், அதன் கீழுள்ள அதிகாரிகளும் விரைந்து இதற்கான தீர்வைக் காண வேண்டும். ஏற்கனவே கற்றல் காலங்களைக் குறைவாகக் கொண்டுள்ள இந்த வருட வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்களில் பயிற்சி நெறி முழுமையாக நிறைவடைய ஒத்துழைக்க வேண்டும் - என்றுள்ளது. (ஒ-14)

# வல்வெட்டியில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம், ஒக்16

வல்வெட்டித்துறை இராணுவ முகாம் வாசலுக்கு அருகில் விகாரை ஒன்று அமைக்கப் படுவதாக வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்த குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்று பலாலி இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. எனினும், இராணுவ முகாம் வாசலுக்கு அருகில் முகாம் மதிற்சுவர் நடுவே வளர்ந்திருக்கும் அரச மரத்தின் கீழ் சுமார் இரண்டு அடி நீள அகலத்தில் மதிற் சுவருடன் சேர்ந்து இரண்டு அடி உயரத்தில் இரண்டு அல்லது மூன்று அடி நீளத்தில் நான்கு நிரைக்கு கொங்கிறீற் கற்கள் வைத்துக் கட்டப்பட்டுள்ளன என்று அங்கு நேரில் சென்று பார்த்த எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கட்டுமானம் திடீரென ஏன் அங்கு மேற்கொள்ளப்பட்டது என்று விளக்கப்படவில்லை என்கிறார்கள் வல்வெட்டித்துறை நகர சபையினர். இது குறித்துத் தெளிவுபடுத்துமாறு அந்தப் பகுதி இராணுவத்தினரிடம் கேட்டபோதும் விளக்கம் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இராணுவ முகாமும் அதன் வாசலும் வல்வெட்டித்துறை - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளன. அங்கு ஏற்படுத்தப் பட்ட கட்டுமானமே புத்தர் சிலை வைப்பதற்கான முன்னேற்பாடு என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக நகர சபையினர் தெரிவித்தனர். ஆனால் இராணுவத்தினர் அப்படி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று பலாலி இராணுவத் தலைமையகத்தின் ஊடக அதிகாரி மேஜர் மல்லவராச்சி தெரிவித்தார். (உ)

# சோடிக்கப்பட்ட கருத்தை வெளியிட்டு விடயத்தை திசை திருப்புகிறார் அதிபர்

## அரச அதிபர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றன. இதற்கெதிரான நடவடிக்கை எடுக்கு முகமாகவே, பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவிகள் பாலியல் நுகர்பொருளாகப் பார்க்கப்படுவதாக எனக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தேன். இதனை கலாசாலையின் அதிபர் திசை திருப்புகின்றார். இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் இடம் பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் காட்டிலும் யாழ்ப்பாணத்தில் அதிகளவில் இடம் பெறுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான வன்முறைகளுக்குக் கடுமையான தண்டனைகளை உடனடியாக வழங்கினார்கள். ஆனால் இப்போது அவ்வாறில்லை. அதனால் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே ஊடகங்களும் என் மீது குற்றஞ்சாட்டுகின்றன. இவை அதிகரித்துச் செல்கின்ற போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்தே இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுவோர் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தேன். இதன் பின்னர் எனக்கு முறைப்பாடுகள் குறைவாகவே கிடைத்தன. இவ்வாறு கிடைத்த முறைப்பாடுகளில் ஒன்றே பலாலி ஆசிரியர் கலாசாலை தொடர்பானது.

நான் தெரிவித்த கருத்தை பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர், பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிப்பது சோடிக்கப்பட்ட ஒன்று. இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அவர் தூண்டி விடுகின்றார்.

அதிபர் என்னை பகிரங்கமாக மன்னிப்பு கேட்குமாறு தெரிவிப்பது தவறு. நான்' செய்யாத குற்றத்திற்காக மன்னிப்பு கேட்குமாறு சொல்ல முடியாது. அத்துடன் மாவட்ட செயலகத்தில் உள்ள பெண்கள் தொலை பேசி மூலமாக அச்சுறுத்தப்பட் டுள்ளனர். மேலும் கலாசாலை அதிபர் பகிஷ்கரிப்புக்கு தான் கல்வித் திணைக் களத்திடம் அனுமதி பெற்றிருப்பதாக தெரிவித்திருக்கின்றார். ஆனால் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் இ. இளங்கோவன் அதனை மறுத்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயன்றுவருவதாக தெரிவித்தார்.

(ஒ-15)

## திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
## (T.Y.M.H.A)
## நூற்றாண்டு விழா

மேற்படி சங்கத்தின் நூற்றாண்டு விழா (1911-2011) சிறப்புற நடத்துவது பற்றிய கூட்டம் எதிர்வரும் (22.10.2011) சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்க ஆர்வலர்கள், நலன்விரும்பிகள், முன்னாள் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கு.மோகன்
தலைவர்.

இ.பாஸ்கரன்
செயலாளர்.

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில்

# இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிப்பு

## வலைகள் நாசமாவதால் பல லட்சம் நஷ்டம்

வடமராட்சி, ஒக். 16

தொண்டமானாறு முதல் முனை வரையான வடமராட்சி வடக்குப் பிரதேச கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறலால் வடமராட்சி வடக்கு மீனவர்கள் நாளாந்தம் பல லட்சம் ரூபா பெறுதியான மீன்பிடிவலை உபகரணங்களை இழந்து வருகின்றனர்.

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் தொழில் புரிந்துவரும் இடம் பெயர்ந்த மயிலிட்டித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு. யோகராசா இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் தற்போது அதிகளவு மீன் பிடிக்கக் கூடிய வாய்ப்பு உள்ள நிலையில் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் வடமராட்சி வடக்கு கடற்கரையை அண்மித்து கடந்த சில தினங்களாக மீன்பிடித்து வருகின்றன.

இவ்வாறு வரும் இந்திய இழுவைப் படகுகள், உள்ளூர் மீனவர்களின் மீன்பிடிவலைகளை சின்னாபின்னமாக அறுத்து சேதமாக்கி விடுகின்றன.

இதன் காரணமாக உள்ளூர் மீனவர்கள் பலர் நாளாந்தம் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை இழப்பதோடு தொழில் வாய்ப்புகளையும் இழந்து விடுகின்றனர் என்று யோகராசா கூறினார்.

இதேவேளை இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புத் தொடர்பாக உள்ளூர் மீனவர்கள் போராட்டம் ஒன்றை நடத்த ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-236)

## விரைவான பிரித்தானிய பட்டப்படிப்பு




CTH
CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Hotel Management
Tourism Management

O/L → Foundation (4 Months) → A/L → Diploma (9 Months) → Advanced Diploma (9 Months) → BSc (Hons) Degree (12 Months)

Postgraduate Diploma in Hospitality & Tourism Management
Qualification leads to MSc or MBA, Recognition in the Industry & Migration Opportunity

தொ. எண்: Prashanth - 0773 211 266

UCB · Les Roches · Heriot Watt University · ECU · University of Sunderland · Hotel School Sydney · Middlesex University · TVU London

Thames College
153 1/1, High Level Road, Nugegoda
0[illegible] / 011 2825895
info@thamescollege.lk
www.thamescollege.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி இராஜரட்ணம் இராஜேஸ்வரி



யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியைப்பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இராஜரட்ணம் 07.10.2011 வெள்ளிக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சுவாமிநாதன் தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சுந்தரம் தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற சு.இராஜரட்ணத்தின் (C.T.B) அன்பு மனைவியும், தவதேவி (இலங்கை), ரஞ்சினிதேவி (Holland), ஜெயந்திரன், ஷாலினி, விமல் (ரஞ்சன்-Denmark) ஆகியோரின் அன்புத் தாயும், கந்தசாமி (Holland), கௌசலா (Denmark), ஆகியோரின் அன்பு மாமியும், புவிந்திரதாஸ், ஜெயந்தி (Denmark), ஷாருஜன் (இலங்கை), ஷாரா (Holland), ஷருன், ஷஜித், ஷாலினி (Denmark) ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.10.2011 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணியளவில் "KIRKEGAAD" Mariagervej, 9500 Hobro என்னுமிடத்தில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
திரு. திருமதி தவதேவி (மகள்),
இ.விமல் (மகன் - டென்மார்க்).

## விபத்தில் காயமுற்றவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

கடந்த மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் தலையில் காயமடைந்து சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் மரணமானார்.

சம்பவத்தில் முத்துக்கிருஷ்ணன் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். குணநேசன் (வயது-49) என்பவரே சிகிச்சை பயனளிக்காது மரணமானவர்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-4)

## The Home Builders

உங்கள் விருப்பத்திற் கேற்ப வாஸ்த்து முறைப்படி
தரமான மனைகளை அமைப்பதற்கு
இப்போதே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



நீங்கள் தொடர்பு கொள்ளவிரும்பினால்:
பியங்கனி : 0779253305
மார்க் : 0789595380

**இலவச சலுகைகள்:**

- உங்கள் கனவு இல்லங்களின் மாதிரி வடிவங்களை இலவசமாக பெற்றுத்தருவோம்
- உங்கள் கனவு இல்லத்திற்கான அனைத்து துறைகளின் அனுமதிகளை பெற்றுத்தருவோம்

உங்கள் இடத்திற்கே வந்து அவசியமான விபரங்களைப் பெற்றுத்தருவோம்

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



அமரர்
வேலாயுதர் கந்தையா
(ஓய்வு பெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்)
கைதடி, அளவெட்டி.

மண்ணில்: 11.09.1934
விண்ணில்: 29.09.1999

இறந்தால் மறுபடி பிறப்பு பிறந்தால் மறுபடி இறப்பு
உண்மை உணரப்பட்டால் உலக வாழ்வின் இரகசியம் புரியும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றென்றும் உங்கள் நினைவில்

பிள்ளையார் வீதி முகப்பு,
அளவெட்டி.

பாசமிகு மனைவி
கந்தையா விக்னேஸ்வரி.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் 2 பரப்புக் (கிணற்றுடன்) காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779239334

## வீடுகள்/ கட்டட வேலைகள்

வீடுகள்/ கட்டடங்கள் அனைத்து வேலைகளும் மிகவும் விரைவாக செய்துகொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0778550491

# மரண அறிவித்தல்

## முருகேசு குருசாமி



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குருசாமி நேற்று (15.10.2011) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, வாசல லேன்,
தெகிவளை.

தகவல்:
குடும்பத்தினர்.

## வீடுவாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில், சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:0772487854

## வேலையாள் தேவை

03 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு தங்கி நின்று வேலை செய்வதற்குப் பெண் ஒருவர் தேவை. தொடர்பு: 0776277332

## வகுப்புகள்

தரம்:6,7,8,9 மாணவர்களுக்கு கணிதம் ,தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி மூலம் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு: 0779883678

# சேவை

## பணத்தினை கொடுத்து ஏமாறாதீர்கள்!

நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்!

**Student Visa / Visit Visa / Tourist Visa / Business Visa / Dependent Visa / Settlement Visa / Visa refused**

ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமுள்ள ஆலோசகர்கள், சட்டத்தரனிகளால் ஆலோசனைகள் வழங்கப்படும். மாணவர்கள் இயலுமானவரை பெற்றோர்களுடன் வாருங்கள்.

**Worldwide Educational Consultants**
# 527, Galle Road, Colombo - 06. Sri Lanka
Mobile : 0771 953 366 / 0778 526 178
Tel : 0112 361 951

# கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தின் சிரேஷ்ட
தொழில்நுட்ப உத்தி யோகத்தர்
T. சிவானந்தம் அவர்களின்
பாசமிகு தாய்

## தில்லையம்பலம் மங்கையர்க்கரசி

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்ப உறவுகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கமநல சேவை திணைக்களம்,*
*யாழ்ப்பாணம்.*

*கமநல அபிவிருத்தி*
*நலன்புரி சமூகம்.*

# விற்பனைக்கு

Lathe machine ( 2'-8'), power press,
Sheet cutting machine, new stock
Available, manufactured
By balgaria, chechoslovekia,
England, japan, china & thaiwan
ரீ கண்டிசன் நல்ல விலையும் உத்தரவாத காலமும்

பாத்தியா ரேடிங் கம்பனி பிரைவட் லிமிட்டட்
இல : 7, கட்டுகுருந்த ரோட்
இரட்மலானை

071 6246123

# மரண அறிவித்தல்

## நல்லலிங்கம் ஜெயராமலிங்கம்

(வருமான வரிப்பரிசோதகர்- RI, நகரசபை வவுனியா)



செம்மலையைப் பிறப்பிடமாகவும், 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைப் வசிப்பிடமாகவும் நகரசபை வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நல்லலிங்கம் ஜெயராமலிங்கம் 14-10-2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லலிங்கம்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், இராசசிங்கம்-காலஞ்சென்ற செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், நிறஞ்சனா (லண்டன்), ருதர்சா(ஆசிரியர், புது-ஸ்ரீசுப்பிரமணியவித்தியாசாலை), அனுசியா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகாம்பிகை (ஈச்சங்குளம்), கனகமணி, செல்வராணி, மகேசலிங்கம் (மலேரியாத்தடை உத்தியோகத்தர்), ஜோதிமலர், ஜோதிலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச்சகோதரனும், ரவிச்சந்திரன் (லண்டன்), இந்திரன் (ஆசிரியர்), வினோதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், தனபாலசிங்கம், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் பொன்னுச்சாமி, கிருதரதேவி, ஞானசேகரம், இராஜினி (ஆசிரியை), சோதிலட்சுமி (கூட்டுறவுச் சங்கம்), கருணாகரன் (லண்டன்), உலகேந்திரராசா, அன்னலட்ச்சுமி (ஆசிரியர்), கெங்காதரன் (அதிபர்), காலஞ்சென்ற உதயகுமார் (ஆசிரியர்) மற்றும் ஜோகலட்ச்சுமி ஆகியோரின் மைத்துனரும், டினோத், டக்சிகா, ஆர்த்திகா (லண்டன்), ரதுசா, திலோஜன் (புதுக்குடியிருப்பு), துவாரகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நகரசபை விடுதியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நகரசபை விடுதி,*
*வவுனியா.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

# கண்ணீர் அஞ்சலி



கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின்
இலிகிதர் திருஞானசம்பந்தமூர்த்தி
அவர்களின் பாசமிகு தாய்

## நடராசா அன்னபூரணம்

அவர்களின் மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்ப உறவுகளுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கமநல சேவை திணைக்களம்,*
*யாழ்ப்பாணம்.*

*கமநல அபிவிருத்தி*
*நலன்புரி சமூகம்.*

# விற்பனைக்கு

Plastic injection maulding
Machine, new stock
available ஜப்பானில் தயாரித்த
ரீ கண்டிசன். நல்ல விலையிலும்
உத்தரவாத காலமும்

071 6246123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றால் இளசுகள் எக்குழியில் விழுவரோ!

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்கள் அனுபவித்த அவலங்கள், இன்னல்கள், உண்டான குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உற்றாரின் இழப்புகள், வாழ்வாதார இழப்புகள், சொத்தழிவுகள், உணர்வுகளை உள்விழுங்கிக் கண்ட கோரக் காட்சிகள், அவற்றால் உண்டான உளநலக் கெடுதல்கள் என்று பல வகையறாக்களில் தாழ்வுற்று நிற்கிறது ஈழத் தமிழ்ச் சமூகம்.

பல பத்தாண்டுகள் சென்றாலும் மேற்கூறப்பட்ட பாதிப்புகளில் இருந்து எமது மக்கள் மீளமுடியுமா என்று சமூக ஆர்வலர்களும் மக்கள் மேம்பாட்டில் அக்கறை உள்ளோரும் வெதும்பி நிற்கும் வேளையில்-

மற்றொரு பேரிடி முகிழ்த்து எழுந்து, எதிர்காலம் என்னவாகப் போகிறதோ என்று பலத்த உறுமலுடன் எச்சரிக்கிறது. அதுதான் வடக்கில் மலிந்து போயுள்ள, எமது இளம் மக்கள் குழுமத்தை மலினப்படுத்தும் சமூகச் சீர்கேடுகள்.

அரச மற்றும் தனியார் அமைப்புகளால், அவற்றின் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், யாழ்ப்பாணத்தின் பாரம்பரியம், பண்பாடு, கலாசாரம் ஆகிய அலகுகளில் நினைத்துப் பார்க்க முடியாத, சகித்துக்கொள்ள முடியாத, அளவுக்குச் சமூகச் சீர்கேடுகள் பல வகைகளில், பல்கிப் பெருகி வருகின்றன.

போரின் தாக்கத்திலிருந்து விடுபட்டுவிட்டோம், அதனால் எமது பிரதேசங்களை முந்திய நிலைக்கேனும் சீரமைத்து, பல துறைகளிலும் வளங்களைப் பெருக்கியும், இப்போதைய இளவயதினர் வருங்காலச் சந்ததியினர் பழைமைகளைப் பேணியும் புதுமைகளைப் படைத்தும் முன்னணி நிலைக்கு வரவேண்டும் என்ற வேணவா பெரியவர்களிடம் ஓங்கி நிற்கிறது.

ஆனால், இளம் சமுதாயம் வேறுதிசை நோக்கிச் செல்வது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. போர்ச் சூழலில் கட்டுப்பாடும், பாதுகாப்பும் சரியான வழிகாட்டலும் இல்லாமற்போனதே அதற்குக் காரணங்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் இளவயதுக் கர்ப்பங்கள், போதைப் பொருள் பாவனை அதிகரிப்பு, கலாசாரச் சீர்கேடுகள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகளால் ஏற்படும் விபரீதங்கள், குடும்ப வன்முறைகள்,பாடசாலை செல்லும் வயதில் வறுமை காரணமாக மாற்றார் வீடுகளிலும் கடைகளிலும் சிறுதொழில்களிலும் அமர்த்தப்பட்டுத் துன்புறுத்தப்படுதல், போன்ற சீர்கேடுகள் மலிந்து வருவது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் கடந்த ஓகஸ்ட் மாதம் வரை, யாழ்ப்பாண மாவட்டத்தில் 175 இளவயதினர் கர்ப்பவதிகள் ஆகியிருக்கின்றனர் என்ற புள்ளி விவரமும் அவர்களில் மிகப் பலர் பாடசாலை மாணவிகள் என்பதும் எமது கலாசார சீர்கேட்டின் வரைபு எவ்வளவு உயர்ந்து நிற்கிறது என்பதற்கு நல்ல உதாரணம்.

அதே போன்று, இன்றைய யாழ். இளைஞர் சமூகத்தில் எந்தக் காலத்துடனும் ஒப்பிட முடியாத அளவுக்கு மதுபோதைக்கு அடிமையாதலும், பெற்றோரை மதித்து அவர்களுக்கு அடங்காது, மதிப்பளிக்காது அடாவடித்தனங்களில் கட்டின்றி ஈடுபடுதல், கோஷ்டி மோதல்களில் ஈடுபடுதல் போன்ற சமூகப் பிறழ்வான போக்கும், பெற்றோரை மதிக்காது அவர்களைப் புறந்தள்ளி நடத்தலும், எமது இளம் சந்ததி பாதாளத்தில் விழப்போகிறது என்று சமிக்ஞை காட்டி நிற்கின்றன.

இத்தகைய சமுதாயச் சீர்கேடுகள் தடுப்பார் இன்றியும், பாதிப்புறுவோர் அவற்றில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு உரிய வழிவகைகள் இன்றியும் தொடர்ந்தால் சமூகக் கட்டமைப்புகளும் பெறுமானங்களும் தேய்ந்து போய்விடும்.

மேற்கூறிய சீர்கேடுகளால் வருங்கால தமிழர் சமுதாயம் தனக்குரிய சிறப்புக் கட்டுமானங்களை, இழந்து விடுவது மட்டுமன்றி, சமூக வெறுமைக்குள் தள்ளப்படும் ஆபத்து, அதற்கான புறநிலை மிக வேகமாக எங்கள் மக்கள் கூட்டத்தை நெருங்கி வருகிறது.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற பாதகமான போக்குக் குறித்து எம்மவர் ஒவ்வொருவரும் அசட்டையாகவும் அசமந்தமாகவும், தான் உண்டு தன்வழி, தன்பாடு உண்டு என்று இருந்துவிட்டால், சமூகப் பிறழ்வுகள் மலையெனக் குவிந்து எமது இளம் சமுதாயத்தை தீக்குழிக்குள் வீழ்த்திப் பொசுக்கிவிடும்.

குடாநாட்டில் நாளுக்கு நாள் கெட்டுவரும் கலாசாரமும் பண்பாடும் தடுக்கப்பட வேண்டும் என்று வெகு எளிதாகச் சொல்லி விடலாம். வெறும் வாய்ச்சொல் வினைத்திறன் அற்றது. ஆகையால் இளம் சமுதாயம், தான் செல்லும் வழி தப்பானது, அவ்வழி செல்வதால் தனது வாழ்க்கை சீர்கெட்டு விடும் என்பதனை அவர்களுக்கு உணர்த்த வேண்டியது - மிகவும் இன்றி அமையாததாகும்.

எமது சமூகத்தின் பெறுமானத்தையும் தனித்துவத்தையும், பிரதிமையையும் (Image) கெடுத்து, வருங்கால சமுதாயத்தின் கலாசார, பண்பாடு, சமூகப் பெறுமானங்களை அழித்தொழிப்பதில் அதீத அக்கறை உள்ள மறைமுக சக்தி ஒன்று பல வடிவங்களில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. எமது கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டுவது அவற்றில் ஆகக் கூடியது பத்து வீதமாகவே இருக்கிறது எனலாம்.

மிகுதியானவை வெளிப்படுத்தப்படாதவையாக, உள்ளூறிச் செய்யப்படுகின்றன. மிகப் பெரும் உள்நோக்கங்களுடனும் வேரறுக்கும் இலக்குகளுடனும் உள்ளந்தரங்கமாக செய்வினைகள் ஒப்பேறுகின்றன.

இத்தகைய சூழமைவில், எமது இளம் சமுதாயம் படுகுழிக்குள் விழாமல் தடுப்பதில் உடன் அக்கறையும் உகந்த செயற்பாடுகளும் அவசியம்.

இந்த வழியில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் கலாசார, சமூகச் சீர்கேடுகளின் விபரீதங்களை எடுத்து விளக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வை 'நிழல்களின் மாற்றம்' என்ற மகுடத்துடன் நடத்தும் முயற்சி வரவேற்கத்தக்கது. கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் அனுசரணையுடன் நாளை முதல் பாடசாலைகளிலும், வேறு மண்டபங்களிலும் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளுக்காக விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது உரிய பலனைத் தந்து எமது இளைய சமுதாயம் கலாசாரச் சீர்கேடுகளில் நின்று தூர விலகி நிற்கத் துணைபுரியட்டும். அது போன்ற வேறு பலவும் முன்னெடுக்கப்பட்டால் அவையே மாற்றத்துக்குரிய புதிய பலத்தைத் தரும் என நம்பலாம்.

# இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு; பதவி விலகினார் லியாம் பொக்ஸ்

## பிரிட்டன் நாடாளுமன்றில் வலுத்தது எதிர்ப்பு

லண்டன், ஒக்.16

பிரிட்டனின் பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸ் தமது பதவியை விட்டு விலகியுள்ளார். இதனை அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது இலங்கை உட்பட்ட நாடுகளுக்கு செல்லும் போதும் பேச்சுவார்த்தைகளின் போதும் தமது நண்பரான அடம் வெரிட்டியையும் அழைத்து சென்றார் என்ற குற்றச்சாட்டு பொக்ஸ் மீது சுமத்தப்பட்டிருந்தது. இதற்காக பல காணொளி ஆதாரங்களும் சனல் 4 தொலைக்காட்சியினால் காண்பிக்கப்பட்டன.

இந்தநிலையில் இறுதியாக இலங்கை ஜனாதிபதி லண்டனுக்கு சென்ற போதும் லியாம் பொக்ஸ் தமது நண்பருடன் சென்று அவரைச் சந்தித்துள்ளார். குறித்த நண்பரின் ஊடாக லியாம் பொக்ஸ் இலங்கைக்கு ஆயுதங்களை பெற்றுக்கொடுக்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது. இந்த விடயம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருந்தது.

நாடுகளின் பாதுகாப்பு விடயங்கள் குறித்து பேசும்போது அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சில் எவ்வித பதவிகளையும் கொண்டிருக்காத நண்பரையும் லியாம் பொக்ஸ் இணைத்துக் கொண்டமை நாட்டின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக பிரித்தானிய எதிர்க்கட்சி விமர்சனம் வெளியிட்டிருந்தது.

பாதுகாப்புச் செயலர் தனது நண்பரை அலுவலக விடயங்களில் குறுக்கீடுகளை செய்ய அனுமதித்துள்ளார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அமைச்சரும் அவரின் நண்பரும் பல முறை இலங்கை சென்றுள்ளனர். இந்தப் பயணங்களுக்கு யார் பணம் கொடுத்தது என்ற சர்ச்சையும் எழுந்துள்ளது.சர்ச்சையில் சிக்கியுள்ள இந்த இருவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய சந்திப்பு குறித்த தொலைக்காட்சிப் படங்களும் ஊடகங்களில் வெளிவந்துள்ளன.

வெரிட்டியால் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனத்துக்கு செல்வந்தர்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பவுண்டுகளை அளித்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. பொக்ஸ் விளக்கம் இந்த சர்சை குறித்து திங்கட்கிழமையன்று நாடாளுமன்றத்தில் பேசிய லியம் பொக்ஸ், இலங்கையில் மீள் இணக்கப்பாட்டைக் கொண்டுவரத் தான் ஸ்ரீலங்கா டெவலப்மெண்ட் டிரஸ்ட் என்ற அமைப்பை 2009 இல் உருவாக்கியதாகத் தெரிவித்தார்.

ஆனால் இந்த அமைப்பு இவரின் இலங்கைப் பயணத்துக்கு பணம் அளித்ததைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை என பிரிட்டிஷ் ஊடகங்கள் குற்றம்சாட்டுகின்றன.

ஸ்ரீலங்கா டெவலப்மெண்ட் டிரஸ்ட் என்ற பெயரில் வியாபார நிறுவனமோ, அரசு சாரா நிறுவனமோ பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்று பிபிசியின் கொழும்பு செய்தியாளர் சார்ல்ஸ் ஹவிலண்ட் தெரிவிக்கிறார்.

அமைச்சர் பொக்ஸ் தனது பதவியை முறைகேடாக பயன்படுத்தினாரா என்பதைக் கண்டறிய, பிரிட்டிஷ் அமைச்சரவைச் செயலர் தலைமையில் ஒரு விசாரணை நடக்கிறது.

லியாம் பொக்ஸால் உருவாக்கப்பட்டுள்ள டிரஸ்டில் "Sri Lanka Infrastructure Development Fund" ,"Sri Lanka Charitable Fund" என இரு நிதியங்கள் உள்ளன.

பிரிட்டனில் இலங்கை அரசின் ஊடக விவகாரங்களை கடந்த டிசம்பர் மாதம் வரை கவனித்துவந்த பெல் பாட்டின்ஜர் என்ற நிறுவனம் இந்த இரு நிதியங்களுமே இயங்கவில்லை என்று தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா டெவலப்மெண்ட் டிரஸ்ட் என்ற அமைப்பு ஐக்கிய ராஜ்ஜியத்தில் ஒரு தொண்டு நிறுவனமாகவோ அல்லது ஒரு வர்த்தக நிறுவனமாகவோ பதிவுசெய்யப்படவில்லை என்றும் பெல் பாட்டின்ஜர் தெரிவித்துள்ளது.

(த)

# நண்பர் வெரிட்டியுடன் பொக்ஸ் 18 வெளிநாட்டுப் பயணங்கள்

லண்டன், ஒக்.16

இஸ்ரேலுடன் தொடர்புடைய நிதியாளர்கள் மற்றும் தனியார் புலனாய்வு நிறுவனம் என்பனவே பிரிட்டனின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் லியாம் பொக்ஸின் நண்பர் எடெம் வெரிட்டிக்கான பயணச் செலவுகளை வழங்கி வந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெரிட்டியால் ஆரம்பிக்கப்பட்ட இந்த தனியார் பாதுகாப்பு நிறுவனத்தினால், லியாம் பொக்ஸ் உடன் வெளிநாட்டு விடயங்களை மேற்கொள்வதற்கு 157 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெரிட்டியின் தனியார் பாதுகாப்பு நிறுவனம், இலங்கை மற்றும் இஸ்ரேலின் சொத்து முதலீட்டாளர்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்தமை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள் ளன.

லியாம் பொக்ஸ் உத்தியோகபூவமாகவோ, உத்தியோகப்பற்றற்ற ரீதியிலோ அவரது நண்பரை எந்தப் பதவியிலும் நியமிக்கவில்லை. எனினும் நண்பரான வெரிட்டி தமது சொந்த தொடர்பு அட்டையில் லியாம் பொக்ஸின் ஆலோசகர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் லியாம் பொக்ஸ் உடன் சுமார் 18 வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் கடந்த வருடம் லியாம் பொக்ஸ்சும் அவரது நண்பரும் லண்டன் மன்டாரியன் ஒரியன்டல் ஹோட்டலில் இடம்பெற்ற நிதிச் சேகரிப்பு இரவு போசன நிகழ்வு ஒன்றில் அதிதிகளாக பங்கேற்ற தாக டெய்லி டெலிகிராப் தெரிவித்துள்ளது. (த)

# புதிய பாதுகாப்புச் செயலராக பிலிப் ஹேமண்ட் நியமனம்

பிரிட்டனின் பாதுகாப்புச் செயலாளரான லியம் பொக்ஸ் பதவி விலகியதை அடுத்து புதிய செயலாளராக 55 வயதாகும் பிலிப் ஹேமண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2010ஆம் ஆண்டு மே மாதம் கூட்டணி கட்சிகளின் சார்பில் போக்குவரத்துத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். கடந்த 97இல் முதல் முறையாக பிரித்தானிய நாடாளுமன்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து வர்த்தகத்துறை, உற்பத்தித்துறை மற்றும் இயற்கை எண்ணெய், எரிவாயு, நிர்மாணப் பணிகள் துறைகளில் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



செஞ்சொற் செல்வர்,
கலாநிதி ஆறு.திருமுருகன்

அவர்கள் நலமுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து
அவரது சமூகப்பணியும், கல்விச் சேவையும்
ஆன்மிகத்தொண்டும் மேன்மையுற
அருள் மிகு ஸ்ரீ துர்க்காதேவியின்
ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்

45, பேரம்பலம் வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

திரு.திருமதி ந.சொக்கலிங்கம்,
மக்கள், மருமக்கள்

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் இராசதுரை (சின்ராசு)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசதுரை 15.10.2011 நேற்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- செல்வநாயகி தம்பதியரின் மருமகனும் ஜெயலட்சுமி (ஜெயம்) அவர்களின் அன்புக்கணவரும் நவதீபன் (இலண்டன்) ரதீபன் (கொமர்ஷல் வங்கி - கிருலப்பனை), அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவரஞ்சினியின் மாமனும் தம்பித்துரை, செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (சிவா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மகிந்த மலர்சாலை கல்கிசையில் காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (17.10.2011) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

21 A, 2/3 ,வண்டவற்பிளேஸ்,
தெகிவளை (9156)

தகவல்:
DR.A. சிவபாதம்
மல்லாகம் (சகலன்)

## சாவகச்சேரி நகர வீதி விளக்குகளுக்கு தன்னியக்க 'பல்பு'கள்

தென்மராட்சி ,ஒக் .16

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள வீதி விளக்குகளுக்கு தன்னியக்க இலத்திரனியல் பல்புகள் பொருத்தப்படவுள்ளன.

நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை இலத்திரனியல் பல்புகள் பொருத்த நிதி வழங்கியுள்ளார்.

இதேவேளை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அடிக்கடி பழுதடையும் வீதி விளக்குகளை மின்சார சபை ஊழியர்கள் மூலம் திருத்தி அந் தந்த இடங்களில் பொருத்தும் பணி இடம் பெற்று வருகின்றது. (ம-207)

## கொடிகாமத்தில் புதிய மின் மாற்றி

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி,கொடிகாமம் நகர்ப் பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படவுள்ளன. சாவகச்சேரி கொமர்ஷல் வங்கிக்கு அருகில் உள்ள மின்மாற்றியும் கொடிகாமம் நகர்ப்பகுதியில் உள்ள மின்மாற்றியும் அகற்றப்பட்டு புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படவுள்ளன.

இந்த இடங்களில் பொருத்தப்பட்டுள்ள 100 கே.வி மின்மாற்றிகள் மின்பாவனை அதிகரிப்பால் தாக்கமடைவதையடுத்து 160 கே.வி மின்மாற்றிகள் பொருத்த மின்சாரசபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

## பரிசளிப்பு விழா

வலி.வடக்கு, ஒக்.16

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் த.வாமதேவ் தலைமையில் பாடசாலை முன்றிலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினியும் சிவஞானமும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம-86)

union assurance
Trust in your tomorrow, today

## வேலைவாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர், யுவதிகளே
தங்களுடைய பொன்னான காலங்களை வீணாக்காமல் இணையுங்கள்
யூனியன் அஷ்யூரன்ஸில்



இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ். மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

- பதவி -5: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி - 4: தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்
- பதவி -3: சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி -2: தனிப்பட்டோர் நிதி ஆலோசகர்
- பதவி -1: காப்புறுதி ஆலோசகர்

அடிப்படைத் தகைமைகள்:-

- க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- காப்புறுதித் துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்.
- தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம். உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை.
- உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்.
- திடசித்தம்.

**Note:** விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

ஏற்கனவே வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதி நேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஏல் தாக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத்தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம்:- செவ்வாய்க்கிழமை -18.10.2011
நேரம்: - காலை 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இ.கிருபாகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொ.பே. 0774115290

Hotline 077 309 9 308

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
ஆங்கிலத்தில் ஆசியாவில் மட்டுமல்ல
சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
City & Guilds -UK English Course @ ESOFT

DiTEC Diploma in Information Technology

- IT Fundamentals
- Microsoft Office Applications
- PC Hardware
- Networking Essentials
- Internet- Email and Web Designing
- Graphics and Animation
- Software Engineering
- Programming with C#.net
- Programming with Java
- Web Applications Development with ASP.net

Msc/MIT MBA ↑ Final Year B.SC ↑ HND Edexcel-UK ↑ DiTec ↑ O/L or A/L

Esoft Computer Studies
No: 17/1 Brown Road
Jaffna Tp: 021-2224142

Jaffna 021-2224142 Nelliyadi 021-2264940
Kilinochchi 021-2285444 Kodikamam 077-3499388
Chavakachcheri 021-2270333 Uduppiddy 021-3201303

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின்
விருத்திக்கு!
ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை

Product inside
1. Two Shri Dhan Laxmi Kavach (24ct.gold plated foil pendant)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)

Delivery Available
ORDER NOW

கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
பதிவுக்கு இன்றே முந்துங்கள்!

Buy 1 Get 1
DHANLAXMI PENDANT FREE



flex அருள் WELLAWATTE.
SRI LANKA 0777 614 186

மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில்
காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!
JAYA TV CAPTAIN TV MEGA TV Z தமிழ்
FLEX Graphic

விற்பனைக்கு: வெளிநாட்டில் இருந்து
தருவிக்கப்பட்ட சிறிய
ஓவ்செற் இயந்திரங்கள்

| | |
|---|---|
| HEI DELBERG KOR- | 15"X22" |
| HEI DELBERG- | 10"X15" |
| AB DICK 385 | 17"X 22" |
| AB DICK 9870 | A3 |
| HAMADA 2COL | A3 |
| MULTI 1650 | A3 |
| LAMINATING MACHINE(INDIAN) | |
| DIE-CUTTING PLATEN | 14"X 22"(U.S.A) |
| RYOBI 520 (GTO SIZE) | 15"X20" |

TEL:0727342438
0777342438

195,WOLFENDHAL STREET
COLOMBO -13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரங்கள் 6 மாதங்களாக 'அவுட்'

## நகருக்கு வரும் மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம் ஒக்.16
யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள கடிகாரங்கள் கடந்த சில வருடங்களாக ஒழுங்காகச் செயற்படுவதே கிடையாது என விசனம் தெரிவிக்கிறார்கள் நகருக்கு வரும் மக்கள்.

இந்தக் கடிகாரங்கள் இடைக்கிடை செயற்படுவதும் அடிக்கடி பழுதடைவதும் இப்போது வழமையாகி விட்டது. நகரின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள இந்தக் கடிகாரம் இப்போது முற்றாகச் செயலிழந்துள்ளமை குறித்துப் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ். மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் இந்த மணிக்கூட்டுக் கோபுரம் உள்ளது. எனினும் இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை ஒழுங்காகச் செயற்பட வைப்பதில் யாழ். மாநகர சபை அவ்வளவு அக்கறை காட்டவில்லையெனக் குடாநாட்டுக் கல்வியியலாளர்களும் பொதுமக்களும் குற்றம் சாட்டுகின்றனர்.

யாழ். மணிக்கூட்டுக் கோபுரம் வெறுமனே மணிக்கூட்டுக்கோபுரம் மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தின் ஒரு அடையாளச் சின்னமாகவும் விளங்கி வருகின்றது.

பிரிட்டிஷ்காரர்களால் அமைக்கப்பட்ட இந்தக் கோபுரம் காலம் காலமாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

எனினும் கடந்த சில வருடங்களாக அதன் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளில் அக்கறை காட்டப்படாமை தொடர்பாகப் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

யாழ். குடாநாடு முழுவதும் அபிவிருத்தி என்ற பெயரில் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இந்த மணிக்கூட்டுக் கோபுரம் மட்டும் கவனிப்பாரின்றி உள்ளது.

யாழ்.மாநகர சபையின் முன்னால் முதல்வர் செல்லன் கந்தையன் காலத்தில் இந்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் கடிகாரங்களை அன்பளிப்பாக வங்கியிருந்தார். அவை உடனடியாகப் பொருத்தப்பட்டு இலங்கைக்கான அப்போதைய பிரிட்டன் தூதுவர் லின்டா டபீல்ட் அதனைத் திறந்து வைத்தார்.

அந்தக் கடிகாரம் பின்னர் பழுதடைந்தது. அதனைத் திருத்துவதற்கு எடுத்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை.



இந்த நிலையில் புதிதாகப் பதவியேற்ற மாநகர சபை அந்த மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு டிஜிற்றல் கடிகாரங்களை பொருத்தும் பணியை டயலொக் நிறுவனத்திடம் வழங்கியிருந்தது. அதன் பின்னர் அந்த நிறுவனத்தினால் பொருத்தப்பட்ட டிஜிற்றல் கடிகாரங்களும் ஒழுங்காகச் செயற்படவில்லை. கடந்த 6 மாதங்களாக அவை செயலற்று உள்ளன.இது தொடர்பாக யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

மணிக்கூட்டுக் கோபுரத்தின் பராமரிப்புப் பொறுப்பு தற்போது 'டயலொக்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே கடந்த வருடம் அல்லது அதற்கு முந்திய வருடம் மணிக்கூட்டுக் கோபுரத்தின் பராமரிப்பு வேலைகள் அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

அதன் பின்னரும் மணிக்கூட்டுக் கோபுரத்தின் டிஜிற்றல் கடிகாரம் இயங்காமல் இருந்தது. இது குறித்து 'டயலொக்' நிறுவனத்துக்குப் பலமுறை யாழ். மாநகரசபையினால் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போதெல்லாம் அந்த நிறுவனம் கடிகாரத்தை இயங்கச் செய்யும். பின்னர் அது மறுபடியும் செயலிழந்து விடும்.தற்போது அந்தக் கடிகாரம் செயலிழந்துள்ளது. 'டயலொக்' நிறுவனம் தான் அதை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலையில் 'டிஜிற்றல்' கடிகாரத்தைத் தவிர்த்து மீண்டும் முள் கடிகாரத்தைப் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாநகர சபை முதல்வர் பிரிட்டன் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்- என்றார். (த-26-14)

# உளநல நாள் நிகழ்வு இன்று நூலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.16
சர்வதேச உளநல நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றவுள்ளது.

சாந்திகம் உளவளத்துணை நிலையம், அகவொளி சுக வாழ்வு உளநலச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றன.

இதில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரது வரவேற்புரையும் மற்றும் அமைப்புக்களின் தலைவர்களது உரையும் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக உயர் சுகாதார நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி டாக்டர் பையர் டோசி லுஸ்ரன் மேத்தா கலந்து கொண்டு உரையாற்றுவார்.

'நினைந்து நினைந்து உருகி' என்னும் இசை நிகழ்வும் இதில்இடம்பெறும். அத்துடன் உலக நல நாளைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளும் இதில் மேடையேற்ற ஏற்பாடாகி உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (த-86)

# எதிர்கால சந்ததியின் வளர்ச்சிக்கு ஆசிரியர் - மாணவர் உறவு அவசியம்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன்

காரைநகர்,ஒக்.16
ஆசிரியர்கள், மாணவர்களிடையே நல்லுறவு சரியாகப் பேணப்படுவதில்லை. மன அழுத்தம், இடர்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள் இதற்கு காரணமாக அமைகின்றன. ஆசிரியர்கள், மாணவர்களிடையே நல்லுறவு சரியாகப் பேணப்படும்போது மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவதுடன் அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாகவும் விளங்குவர்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணக் கல்வித்திணைக்கள உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் புதன்கிழமை உயர்தர மாணவர் மன்ற தலைவர் எஸ்.நிலவன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் க. சத்தியபாலன் தொடர்ந்து உரையாற்றுகையில், மாணவர்கள் தங்கள் திறன்களை முற்று முழுதாக வெளிக்கொணர்வதற்கு நல்ல சந்தர்ப்பமாக மாணவர்-ஆசிரியர் உறவு அமைகின்றது.

மாணவர்களிடையே உள்ள திறன்களை, ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு ஆரோக்கியமான ஆசிரியர்-மாணவர் தொடர்பு அவசியமாகிறது. ஆசிரியர்கள் நிறைய உள்ள சமூகம் நல்ல சமூகமாகவும் அந்தப் பிரதேசம் கல்வியில் தன்னிறைவு உள்ளதாகவும் காணப்படும்.

ஆசிரியர்களாகிய நாமும் சரியான முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆசிரியர்கள் சரியான முறையில் நடந்தால் மாணவர்களும் கீழ்ப்படிந்து ஒழுகுவார்கள்.

மாணவர்களின் நிலை அறிந்து பாடசாலை வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி மாணவர்களுக்கு கல்வி போதிக்க வேண்டும். மாணவர்கள் கற்கும் காலத்தில் பாடசாலை வளங்களை முழுமையாக பயன்படுத்துகின்றபோது எதிர்காலத்தில் அவர்களால் சிறந்த வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடியும்-என்றார். (த-250)

# சாவகச்சேரி இந்து மாணவரின் "சத்தியமே ஜெயம்" திரைப்படம்

சாவகச்சேரி,ஒக்.16
சாவகச்சேரி இந்துக்கல்லூரி தமிழ்மன்றத்தினால் ''சத்தியமே ஜெயம்'' என்னும் திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா எதிர்வரும் 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாச்சலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் எஸ்.கைலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் க.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி கயல்விழி சூரியகுமாரும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சங்கீத விரிவுரையாளர் பொன்.ஸ்ரீவாமதேவனும் கலந்துகொள்வர்.

இந்தத் திரைப்படத்தின் முதல் பிரதியை நுணாவில் எலைற் என்ரைமன் முகாமையாளர் ஜீவரத்தினம் கோபிதாசன் பெற்றுக் கொள்வார்.

திரைப்படத்தின் நாடக நெறியாள்கையை ஆசிரியர் குமாரவேலு ஜோதிரட்ணராஜாவும், திரைப்பட நெறியாள்கையை ரி.தர்மலிங்கமும் நெறிப்படுத்தியுள்ளனர். படத் தொகுப்பினை ரி.தர்மலிங்கமும், சிவராஜாவும் செய்துள்ளார்கள். இசையை கு.ஜோதியும் பாடல்களை பங்குகொள்ளும் நடிக மாணவர்களும் பாடியுள்ளார்கள். இந்தப் படம் மிகவும் திறமையாக மாணவர்களால் நடித்து படமாக்கப்பட்டுள்ளதாக நெறியாள்கை ஆசிரியர் கு.ஜோதிரட்ணராஜா தெரிவித்துள்ளார. (த)

# உரிய அனுமதி பெறாமையாலேயே குப்பிளான் வீடமைப்பு நிறுத்தம்

## பிரதேச செயலர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.16
பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப்படாமையாலேயே குப்பிளானில் ஜசாக் நிறுவனத்தின் வீடமைப்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக உடுவில் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி உதயனில் 6 ஆம் பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக அனுப்பி வைத்துள்ள விளக்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பிரதேச செயலகத்தால் இனங்காணப்பட்ட பயனாளிகள் பட்டியலுடன் அனைவரது இடங்களுக்கும் பிரதேச செயலக உத்தியோகத்தர், கிராம அலுவலர் மற்றும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் குழாம் நேரடியாகச் சென்று பார்வையிட்டு நிறுவனத்தின் பயனாளிகள் தெரிவு தொடர்பான தேர்வுப் பிரமாண அடிப்படையிலேயே பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

வீடுகளின் கட்டடப் பணிகளை நிறுத்தும்படி நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் பணித்துள்ளார் என்பது தவறானதாகும். ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப்படாமையாலேயே அது நிறுத்தப்பட்டுள்ளது- என்றுள்ளது. (த)

# கடற்றொழிலாளர்களுக்குச் சாதகமான கடன் வழங்கும் நிபந்தனைகள் தேவை

## கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தவரட்ணம்

யாழ்ப்பாணம், ஒக்.16
கடன் வசதிகளை கடற்றொழிலாளர்கள் பெறக்கூடிய வகையில் கடன் வழங்கும் நிபந்தனைகளை வங்கிகள் கொண்டிருக்க வேண்டும்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிதியின்றி கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதி மக்களுக்குக் கடனுதவிகளை வழங்குவதாக அரச வங்கிகள் தொடக்கம் தனியார் வங்கிகள் வரை விளம்பரம் செய்து வருகின்றன.

வங்கிகள் விளம்பரத்தில் குறிப்பிட்டது போல் கடன் வழங்கும் போது நடந்து கொள்வதில்லை. மிக இறுக்கமான நடைமுறையைப் பின்பற்றுகின்றன.

இதன் காரணமாகக் கடற்றொழிலாளர்கள் வங்கிக் கடன்களைப் பெற முடியாதுள்ளனர். கடற்றொழிலாளர் ஒருவர் வங்கியில் கடன் பெறுவதற்கு கடற்றொழில் சங்கம் அல்லது சமாசம் பிணை நிற்குமாறு கேட்பது நியாயமானது.

கடன் உதவியுடன் பெறப்படும் இயந்திரம் வங்கியின் பெயரில் பதிவில் இருக்கும்.

கடற்றொழிலாளி கடனை மீளவும் செலுத்தவில்லையாயின் குறித்த இயந்திரத்தை மீளவும் வங்கி பெற்றுக் கொள்ள முடியும்.

அதனை விடுத்துக் கடற்றொழிலாளரை பிணை செலுத்துமாறு கேட்பது பொருத்தமானதல்ல என்றார். (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபகரணங்கள் வழங்கல்

தென்மராட்சி, ஒக். 16

எழுதுமட்டுவாழ் தெற்கில் மீளக்குடியமர்ந்த 270 குடும்பங்களுக்கு விவசாயத் திணைக்களத்தினர் காணி துப்புரவுகளுக்குப் பயன்படுத்தும் கத்தி, மண்வெட்டி, குப்பை விராண்டி ஆகிய உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

இந்தப் பகுதி கமக்கார அமைப்பின் வேண்டுகோளையடுத்து விவசாய விரிவாக்கல் பகுதியினர் இந்தப் பொருள்களை வழங்கியதாக அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-207)

# 20 மில்லியன் யூரோ செலவில் குளிரூட்டும் களஞ்சியங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 16

மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளைச் சேமித்து வைப்பதற்கு பெரிய குளிரூட்டும் களஞ்சியங்கள் ஆறு நிர்மாணிக்கப்பட உள்ளன. அது தொடர்பாக எச்.எஸ்.பீ.சி. வங்கி மற்றும் ஜேர்மனியின் வரர்மிஸ் வங்கிகளிடமிருந்து 20 மில்லியன் யூரோக்களைக் கடனாகப் பெறுவதே கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் எதிர்பார்ப்பாகியுள்ளது.

பெரிய அளவிலான பத்து குளிரூட்டும் களஞ்சியங்களை நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ள போதிலும் முதற்கட்ட நடவடிக்கையாக 6 பெரிய குளிரூட்டும் களஞ்சியங்கள் நிறுவப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், தம்புள்ளை, அம்பாந்தோட்டை, நுவரெலியா, வெலிமடை மற்றும் பதுளை ஆகிய பிரதேசங்களில் அரசு இவற்றை நிர்மாணிக்கவுள்ளன.

தேவைக்கு மேற்பட்ட மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் வீணாக்கப்படுவதைத் தவிர்த்துக் கொள்வதும் வர்த்தகச் சந்தையை முகாமைத்துவப் படுத்துவதை நோக்காகக் கொண்டு இந்தக் குளிரூட்டும் களஞ்சியங்கள் அமைக்கப்படவுள்ளன

இது சம்பந்தமான பிரேரணையொன்றை கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்ணாண்டோவால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி காமல் நேசகாந்தி சண்முகநாதன்
35 வருட ஆசிரிய சேவையில்
24 வருடங்கள் எமது கல்லூரியில்
பணியாற்றி 16.10.2011 இல் ஓய்வு
பெறும் ஆசிரியரை வளமுடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

யா/ விக்ரோறியாக் கல்லூரிச் சமூகம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தேசிய மாநாடு, பிரதிநிதிகள் சபைக் கூட்டம் ஆகியவற்றிற்கான அறிவித்தல்

தலைமை : திரு.வி.ரி.சகாதேவராசா (தலைவர்- இ.த.ஆ.ச.)
இடம் : யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : I தேசிய மாநாடு 04.11.2011 காலை 9.30 மணி
II பிரதிநிதிகள் சபைக் கூட்டம்- 04.11.2011
பி.ப 2.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும். தேவையேற்படின் மறுநாள் அதே மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பித்து தொடர்ச்சியாக நடைபெறும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல அங்கத்தவர் களையும் தேசிய மாநாட்டில் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சகல கிளைகளினதும் நிர்வாக சபை உறுப்பினர்களையும் சங்கத்தின் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

புதிய நிர்வாகிகள் தெரிவு தொடர்பான விவரங்கள், தேர்தல் விதிகள், மாதிரி வேட்பு மனு விண்ணப்பங்கள் சகல கிளைச் செயலாளர்களுக்கும் மாவட்டச் செயலாளர்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பிரதிநிதிகள் தேவையான விவரங்களை கிளை/மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

இ.த.ஆ.சங்கம், தலைமைப் பணிமனை,
40, நாயன்மார் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.14.10.2011

சரா புவனேஸ்வரன்,
பொதுச் செயலாளர்.

## காணி ஒன்றை கொள்வனவு செய்தல்

**யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு**

DFCC வங்கியின் கிளைகளை ஆரம்பிக்க பின்வரும் வசதிகளைக் கொண்ட காணிகள் யாழ்ப்பாணம், திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் தேவைப்படுகின்றன.

★ குறைந்த பட்சம் 30 பேர்ச்சஸ் விஸ்தீரணம்
★ காணி பிரதான பாதையில் அமைந்திருப்பதுடன் முன்புறம் 60-70 அடி அகலத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

ஏழு நாள்களுக்குள் சகல விவரங்களுடனும் தொடர்பு கொள்ளுங்கள்.

பதில் தலைவர் (சேவைப்பிரிவு), DFCC வங்கி,
இலக்கம் 73/5, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இலக்கங்கள் : 0777489503 அல்லது 011 2442442
மின்னஞ்சல்:-info @ dfccbank.com

தயவு செய்து பதில் அனுப்பும் கடிதவுறையின் இடது மூலையில் "காணி விற்பனை, யாழ்ப்பாணம்/திருகோணமலை/மட்டக்களப்பு" எனக்குறிப்பிடவும்.

## விற்பனைக்கு

Honda CD 125 Benly (Cooler, 2006 Model) மோட்டார் சைக்கிள் (மிகவும் நல்ல நிலையில்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 6079352
02130015 85

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
புறொயிலர் இறைச்சி ரூபா 495/= மட்டுமே
நல்லூர் பாம் சென்ரர்,
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.

## தவறிவிட்டது

மில் லேன், சண்டிலிப்பாயைச் சேர்ந்த மாயச்சந்திரன்-நிக்ஷன் என்பவரது தேசிய அடையாள அட்டையுடன் அடைவு துண்டும் அதனுடன் இராணுவ அடையாள அட்டையுடன் கூடிய பேஸ் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை தொடர்பு: 0777959342
0776383228

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

தனியார் கம்பனி ஒன்றின் பாவனையில் இருந்த மூன்று மோட்டார் சைக்கிள்கள் (TVS STAR SPORT) யாழ்ப்பாணத்தில் உடன் விற்பனைக்கு உண்டு. நேரடியாக பார்வையிட T.P: 0777397735

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரின் அருமை போசனசாலைக்கு (சாப்பாட்டுக் கடை) வேலை ஆள்கள் தேவை. விரும்புபவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.
இல. 8, 10 ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## பின்தொடர் பாரவூர்தி சாரதி சேவை -கிளிநொச்சி

THE HALO TRUST
Sri Lanka
Reg. No. FL49716

ஹேலோ டிரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்ட அரசியல், சமயத்தொடர்பற்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். விசேடமாக வடமாகாணத்தில் 2002 ஆம் ஆண்டிலிருந்து கண்ணிவெடிகளையும், வெடிக்காத வெடிபொருள்களையும் அகற்றிக் கொண்டிருக்கின்றது. தற்பொழுது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் பணிபுரிகின்றது.

எதிர்பார்க்கப்படும் ஆகக்குறைந்த தகுதிகள்
* செல்லுபடியாகும் வாகன ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் (A Class)
* பாரவூர்திகளுடனான முன் அனுபவம் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையை ஒக்ரோபர் 24 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

ஹேலோ டிரஸ்ட்,
450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.

## வாழும் கலை பயிற்சி



ஜெய் குருதேவ்!
வாழும் கலை பயிற்சி
மூச்சு பயிற்சி, யோகா,
பிராணாயாமம், சுதர்சன கிரியா

**அறிமுக உரை**

திகதி : 17.10.2011 நேரம் மாலை 5 மணிக்கு
இடம் : 132, பலாலி வீதி (இந்து சமய பேரவை அருகில்)
பயிற்சி: 18.10.2011-23.10.2011
நேரம் : 6-8.30 மு.ப.
3-5.30 பி.ப.
6-8.30 பி.பி
குறிப்பு: ஏற்கனவே பயிற்சி பயின்றவர்களுக்கான சிறப்புப் பயிற்சி 16.10.2011 ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு.
மேலும் விவரங்களுக்கு: 0777250879, 0770474757

## BE A 'CERTIFIED MEDICAL ASSISTANT'

அடிப்படை மருத்துவ அறிவு
ஆபத்தில் உயிர்காக்கும் +
CMA US Curriculum

O/L அல்லது A/L இன் பின்னர் அடுத்த கற்கை நெறிக்காகவோ அல்லது தொழில்வாய்ப்பிற்காகவோ காத்திருக்கும் உங்களிற்கு மிகவும் ஏற்ற பயிற்சி நெறி. பயிற்சி நெறியின் அனுகூலங்கள்:



- ஆங்கில அறிவு விருத்தி(செயன்முறை ரீதியாக)
- தொழில் அனுபவம்
- மருத்துவ துறை வல்லுனர்களோடு பழகும் வாய்ப்பு
- தொடர்பாடல் திறன்.அலுவலக நிர்வாகப் பயிற்சி-செயன்முறை

உங்கள் வீட்டிலும் அயலிலும் அவசர வேளைகளில் வைத்திய உதவி கிடைக்கும் வரை உதவி செய்யும் அறிவை பெறுவதோடு தேவையேற்படின் மேற்படிப்புக்கும் தொழில் வாய்ப்பிற்கும் அரும்பயனாகும் கல்வி நெறி இது. Part time -6 months only

MBBS வைத்திய விரிவுரையாளர்களால் லாவா வைத்தியசாலையில் செயல்முறையுடன் கற்பிக்கப்பட்டு தொழில் வழங்கப்படும் மருத்துவ பயிற்சி நெறி.
(O/L ஏதாவது நான்கு பாடங்களில் சித்தியுடன் கற்கலாம்.)

பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன Call :0776458253

Faculty of Medical Sciences
**Knowledge Universe**
College of Business and IT
Tel: 0776458253 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
சுட்டி பாம் சென்ரர்,வட்டுக்கோட்டை 0778996085
நல்லூர் பாம் சென்ரர், சந்தையடி,
அம்பாள் குளம், கிளிநொச்சி.0776225944

நல்லூர்பாம் சென்ரர்,
19,முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.இல.0212226944

## பிள்ளையார் இன்"A" உல்லாசப் பயணிகள் தங்குமிடம்

*("A"Grade Hotel Approved by Ceylon Tourist Board)*

பிள்ளையார் இன் விடுதியில் உங்களின் திருமணவைபவங்கள், வியாபார கலந்துரையாடல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், எதுவானாலும் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் 400 பேர் அமரக்கூடிய மண்டபம் 14.10.2011 தொடக்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

30 குளிரூட்டப்பட்ட அறைகள் விசாலமான வாகனத்தரிப்பிடம், வாகனம் யாவும் எம்மிடம் உண்டு. உங்களின் உணவு வகைகள் யாவும் 1 மணித்தியாலத்தில் செய்து கொடுக்கப்படும். எமது (Resturant) காலை 9 மணிமுதல் இரவு 10 மணிவரை திறந்திருக்கும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
*பிள்ளையார் "இன்"*
*31, மானிப்பாய் வீதி*
*யாழ்ப்பாணம்.*

*மின்னஞ்சல்*
pillaiyar.in@gmail.com
*வலைப்பின்னல்*
www pillayarinn.com

தொ.பே: 021 2222829, 021 2224449

## திசைகாட்டி

தரம் 5 மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை நெறி (TKY-5)
அடுத்த வருடம் 2012, 6 ஆம் தரத்தில் ஆங்கில மொழி மூலம் (English Medium) கற்க விரும்பும் மாணவர்களுக்குரிய 3 மாத கால தயார்படுத்தல் ஆங்கில கற்கை நெறி, கணித, விஞ்ஞான கலைச் சொற்கள் அறிமுகப்படுத்தப்படும்.
சனி, ஞாயிறு மு.ப. 10 மணி

அஞ்சல் சேவைSLAS விரிவாக்கல் உத்தியோகத்தர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகள்.
விரிவுரை: மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி
சனி-ஞாயிறு மு.ப. 9மணி

U.K, ஆஸ்திரேலியா செல்ல விரும்புபவர்களுக்கு குறைந்த கட்டண விசா ஆலோசனைகள் IELTS, B1,A1 வகுப்புக்கள்.

37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். ☎ 0214914527.
(யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தைக் கடந்தவுடன் வலது பக்கமாக வரும் ஒழுங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவரைப் பாதுகாப்பதில் நாமும் பங்கெடுப்போம்



இன்றைய சிறுவர்கள் நலமாக வாழ வழியமைக்கும் சிந்தனையை வளர்ந்தோர் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் இளைஞர்கள் தமக்குரிய உரிமை எவை எனத் தெரிந்து கொள்வதற்கும் உலக சிறுவர்தினம் வழிவகுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு அமைய வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் சிறுவர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

பிள்ளை வளர்ந்து வருகின்ற போது பாலியல் சார்ந்த அழுத்தங்கள், உடலை, உள்ளத்தைப் பாதிக்கக் கூடிய காயம், புறக்கணிப்பு, அக்கறையின்மை, சுரண்டிப் பிழைத்தல் ஆகிய தீங்குகளிலிருந்து பாதுகாக்க வேண்டியது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எம்மைச்சூழ வாழும் இன்றைய சிறுவர்கள் ஏனைய நாட்டுச் சிறார்களைப் போலன்றி யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட நீண்ட கால உள்நாட்டு யுத்தம், இயற்கையின் சீற்றம், வறுமையின் அவலம் ஒருபுறம் இவர்களைத் தாக்க மறுபுறம் மனிதப் பிசாசாய் அலையும் இரக்கமற்ற கொடூர குணம் கொண்ட மனிதர்களால் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர். அதுமட்டுமன்றி வேலைக்கமர்த்தப்படல், சிறுவர்கள் மீது பாலியல் வதைச் சித்திரவதைகள் என வெளி இடங்களிலும் நெருங்கிய குடும்ப உறவுகளாலும் சின்னாபின்னமாக்கப்பட்டு கல்வியையும் தொடர முடியாது; சமூகத்திலும் குடும்பத்திலும் ஏளனமாக்கப்படும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

மானிட வாழ்வின் அளவிடமுடியாத அரும்பெரும் சொத்துக்களான சிறுவர்களை நாம் பாதுகாக்க அவர்களுக்கான உன்னத உயர்ந்த நிலைக்காக வாழ்க்கையை ஏற்படுத்தப் பங்குகொள்ள வேண்டும்.

சிறுவர்களை அவர்களுடைய காலத்தில் வேலைக்கமர்த்தாது ஒன்றுகூடி ஆடிப்பாடி விளையாட வழியமைத்து அவர்களுடைய ஒற்றுமையையும் ஆளுமைத் தன்மையையும் வளர்க்க ஒவ்வொரு மானிடரும் வழியமைக்க வேண்டும்.

### தொழிலில் அமர்த்தப்படும் சிறுவர்கள்

வறிய குடும்பங்களில் பிறந்த சிறுவர்கள் பெற்றோர்களோடு சேர்ந்து தொழிலைச் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. பெற்றோராக இருந்தாலும் குடும்ப உழைப்பாகக் கூட சிறுவரைப் பயன்படுத்த முடியாது. வறுமையின் காரணமாகக் குடும்பத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் தந்தையற்ற குடும்பங்களிலும், தந்தையைக் கைவிட்ட குடும்பங்கள், குடும்பத்தில் அக்கறையற்று மூழ்கி வாழும் தந்தையர்களாலும் குடும்பச் சுமையை சுமக்க எண்ணி சிட்டாய் பறந்து கற்க வேண்டிய வயதில் தொழிலாளியாக மாற வேண்டிய சூழ்நிலைக்கு சிறார்கள் தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிறுவர்களைத் தொழிலில் அமர்த்தி சுரண்டிப் பிழைப்போர் மத்தியிலிருந்தும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை பொது நிறுவனங்கள் எடுக்க வேண்டும்.

இதில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் பங்குண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு சிறுவர்களைப் பாதுகாக்கவென சிறுவர் உரிமைச் சட்டங்கள், யாப்புக்கள் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது தொடர்பான விடயங்களோடு மட்டும் நின்றுவிடாது அவற்றை நடைமுறைபடுத்துவதிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

குடும்பத்தில் அக்கறையற்ற தந்தை ஒருவர் தனது பிள்ளையின் கல்வியை நிறுத்தி வேலைக்கமர்த்தி விட்டு மகனால் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தில் மது அருந்தி வாழ்க்கை நடத்துகிறார்.

### போதைக்கு அடிமையாகும் சிறுவர்கள்

இன்றைய சிறார்களை இளைஞர்கள் புகைத்தல் போன்ற தீய பழக்கவழக்கங்களினால் துன்புறுத்துவதும் அவர்களைப் போதைப் பொருள் வாங்கத் தூண்டுவதும் தம்மைப் போன்று வர வேண்டுமெனத் துன்புறுத்தி போதைக்கு அடிமையாவது வழக்கமாகிவிட்டது. இதை விட குடும்பத்தில் மதுபோதைக்கு அடிமையான தந்தை வீட்டிலுள்ள சிறுவர்களை புகைப்பொருள், குடிவகை வாங்குவதற்காகக் கடைகளுக்கு விடும் போது எதுமறியாச் சிறுவர்கள் போதைப்பொருளின் அபாயகரமான பாதிப்பை அறியாததன் விளைவாக போதைக்கு அடிமையாகின்றார்கள்.

சிறுவர்கள் பாதிப்படைவதற்குப் பெற்றோர்களின் கல்வி அறிவின்மை, சமூகக்காரணிகள் , குடும்ப உறவுகளால் ஏற்படும் பாதிப்புக்கள், தாய் தந்தை இடையே ஏற்படும் முரண்பாடுகளும் விவாகரத்துக்களும், கல்வி கற்கவேண்டிய வயதில் கைத்தொலை பேசிப் பாவனை, சிறுவர்களிடையே ஏற்படும் ஏற்றத் தாழ்வு (ஏழை, பணக்காரன்) மனநிலை போன்றவற்றைப் பிரதான காரணிகளாகக் கூறலாம்.

தாய், தந்தையினர் முரண்பாடுகளால் பிரிந்து செல்லும் போது பிள்ளையின் எதிர்கால வாழ்வை யார் திட்டமிடுவது? அவர்கள் வாழ்வைப் பலப்படுத்தும் பொறுப்பை யார் பெறுவது? என்னும் விடயத்தாலும் சமூகத்தின் ஒழுக்கமற்ற தீயசக்திகளாலும் சிறுவர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு தற்கொலை மனநிலையை அடைகின்றனர். இத்தகைய பாதிப்புக்களில் சிறுவரைப் பாதுகாப்பதில் பெற்றோர்களே அக்கறை கொள்ளவேண்டும்.

### நடைமுறைப்படுத்தப்படாத சிறுவர் உரிமைச் சட்டங்கள்.

உலக நாடுகளிலும் நமது இலங்கையிலும் வளர்ந்து வரும் இளம் தலைமுறைக்காக இயற்றப்பட்ட சிறுவர் உரிமைகள் எவ்வளவு தூரம் நடைமுறையில் பேணப்படுகின்றன என்பதை ஆய்வு செய்யும்போது மிஞ்சுவது வேதனை மட்டுமே. கொள்கை விதிகள் ஏடுகளில் மட்டும் பேணப்படுகின்றனவே தவிர செயல் முறையில் எதுவும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

உள்நாட்டு யுத்தத்தாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பெற்றோர், உடன்பிறப்புக்கள் உறவுகளையும் , சொந்த வீடுகளையும், இழந்து கல்வியையும் தொடர முடியாது அல்லற்படும் சிறுவர்களை நல்வழிப்படுத்தி அவர்களுக்காகத் துணைநின்று நல்வழிப்படுத்தி ஆளுமைகளை வளர்த்துக்கொள்வதிலும் வாழ்க்கையின் முன்னேற்றகரமான செயற்றிட்டங்களில் என்றும் சிறுவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இடைவிடாது செயற்படுத்துவதிலும் பொது நிறுவனங்களும் அரசும் அக்கறை கொள்ளவேண்டும்.

பல்வேறுபட்ட பிரச்சினைகள் சிறுவர்களைச் சூழ்கின்றபோதும் சாதனைகள் புரிந்து வெளியுலகுக்குத் தம்மைத் திறமைசாலிகளாகக் காட்ட முனைகின்றார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கான களத்தை அமைத்துக் கொடுக்கவேண்டியது சமூகத்தின் பொறுப்பேயாகும்.

இதேவேளை சிறுவர்களது பிரச்சினைகளை இனம் கண்டு தீர்வுகாண அரசால் முன்மொழியப்பட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவானது நிறுவனங்களின் பங்களிப்புடன் நிறுவப்பட்டாலும் அதனை இயக்குவதற்கு அந்தக் குழுவானது தானாக இயங்கி தமது சிறுவர்களது நலன்கருதி அக்கறையுடன் செயற்படும்போது சிறுவர்களுக்கான பாதுகாப்பான சூழலைக் கட்டியெழுப்ப முடியும்.

### சிறுவர் பாதுகாப்பில் பங்கு யாருக்கு?

அரசு , சிறுவர், பெற்றோர், இளைஞர், யுவதிகள், அதிபர், ஆசிரியர், சனசமூகநிலையம், சிறுவர் கழகம், கிராமமட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, கிராம சேவையாளர் , சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவனம்.

இத்தகைய அமைப்புக்களால் சிறுவர் பாதுகாப்பு அவசியம் பெறுவது போன்று சிறுவர்களும் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும். தீய வழியில் சிறுவரைப் பயன்படுத்துவோருக்கு உரிய தண்டனை வழங்குவதன் மூலமே சிறுவர் உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த முடியும்.

நாட்டுக்குச் சொத்தான சிறுவர்களைப் பாதுகாத்து அதாவது சிறுவர் உரிமை மீறல்களைத் தடுத்து சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும். ★

**அமிர்தலிங்கம் அகன்**
**கோப்பாய்.**

# புறக்கணிக்கப்படுவதேன்?

அழகியற் கல்வி, இரசாயனக் கல்வி, நயத்தற் கல்வியெனக் குறிப்பிடப்பட்டு வரும் சங்கீதம், நடனம், சித்திரம், சிற்பம் போன்ற கலைத்துவக் கல்வி மேம்பாடு நம்மவரால் பலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவது கண்கூடு.

இதனால் ஏற்படக் கூடியபின் விளைவுகளை பெற்றோர், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் கல்வியியலாளர்கள் சிந்திக்காது தவிர்த்து வருவது நோக்கத்தக்கது.

அண்மையில் சித்திரக்கல்வி சம்பந்தமான தெளிவான நூலொன்று கைக்கெட்டியது. இன்னும் வடமராட்சியைச் சேர்ந்த இளம் கல்விச் சிந்தனையாளர் எஸ்.சற்குணராஜாவால் வெகு நுண்ணியமாகத் தொகுத்து எழுதப்பட்ட நூல் இதுவாகும்?

இந்த நூலின் சித்திரக் கல்வியின் அவசியத்தையும் நம்மவர்கள் இதனைத் தவிர்த்து வருவதால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சித்திர பாடக் கல்வியானது ஆரம்ப வகுப்புகளில் இடித்து பல்கலைக்கழகம் வரையும் தொழில் ரீதியாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கும் உறுதுணையானதே.

ஒரு நாட்டின் இனக்குழுமங்களின் நீண்டவரலாறு பாரம்பரியங்கள், மொழி, கலாசார, பண்பாட்டு மரவிழுமியங்கள் போன்றவற்றைத் துல்லியமாக விளங்கிக் கொள்ளச் சித்திரக்கலை மிக மிக வேண்டற்பாலதென்பதை இந்த நூல் கூறிநிற்கின்றது.

மேற்கத்திய நாடுகளின் கல்வி முறைமைகள் பற்றிச் சமகாலத்தில் நம்மவர் பலரும் அறிந்திருக்கக் கூடிய வாய்ப்புகள் பல உள்ளன. இதனை அடியொட்டியே முன்பள்ளிக் கல்வி முறைகளிலும் நுண்கலைகளின் ஆர்வம் கையாளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது; எனினும், இடைநிலை, உயர் கல்வி இவற்றைக் கை [illegible] உள்ளது.

[illegible] கல்வியை அடியொட்டியதாய் விரும்பியபடி வரைதல், வர்ணம் தீட்டுதல், ஆடுதல் பாடுவதற்கு சிறார்களுக்குச் சந்தர்ப்பமளிப்பதற்குத் தக்கதாய் நேர அட்டவணைகளை ஆசிரியர்கள் தயார் செய்து கொள்ள வேண்டும்.

இதில் குறிப்பாக மாணவரின் ஐம்புலப் பயிற்சித் திறன்களையும் இயற்கை ஆற்றல் திறன்களையும் ஆசிரியர்கள் குறித்து வைத்திருக்க வேண்டும்.

சமகாலச் சம்பவங்கள் பல கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்களாக வரையப்படும் போது அவை நாடளாவிய ரீதியிலும் அதற்கப்பாலும் பல நுண்கலை உணர்வாளர்களால் வரவேற்கப்படுமளவுக்கு விஸ்தரிக்கலாம்.

சித்திரங்கள் மொழியின் பேசப்படாத வடிவங்களாகின்றன. அவை பல இடங்களில் மொழி வடிவத்தை விடத்துல்லியமாக உள்வாங்கப்படும் கருவூலங்களாகின்றன என்பதை ஆசிரியர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**எம்.எல்.சி.பசுபதி**

இந்தக் கல்வியின் அவசியத்தையும் வரலாறு, சமூகம், கணிதம், பொருளாதாரம் போன்ற துறைகளை வளர்ச்சிப்படுத்தவும் நற்சிந்தனைகளை உருவாக்கவும் மாணவருக்கு உறுதுணையாகும் என்பதை உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்டோர் அனைவரும் முயற்சிப்போமாக. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா வீஸா லொத்தர்

(இன்ரநெற் தெரியாதவர்களுக்கான சேவை)

விரையுங்கள் மு.திகதி 04.11.2011. எமது விண்ணப்பப் படிவங்களை உடன் நிரப்பியனுப்புங்கள். எம்மூலம் விண்ணப்பிக்க ரூபா 15/- முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்.

BBS Netting, 3/14, Pinwatta Road, Dehiwala
0775811106

## DANISH DEMINING

DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operation in Sri Lanka since 2003. Presently the work force consists of 320 including deminers, administrative staff, Technical Advisors and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager & Operations Manager. DDG presently operates in Jaffna, Killinochchi and Vavuniya districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas.

### Vacancy Announcement

**Position:** Camp Administrator -Vavuniya

**Summary of Position:** Providing day-to-day administration and logistics support to operations in Vavuniya field camp. This will include HR & welfare issues, maintaining security of the camp, Logistics support, Cash handling and management of the inventory

**SPECIFIC DUTIES**

Under the direction of the Head of Office, Jaffna

**Administration**

a. Be responsible to coordinate all day to day LOG/ ADMIN / HR related activities at the field camp and to report to the Jaffna Office accordingly.
b. Fully responsible and for security of the DDG camp compound and assets and maintenance of the camp and the assets.
c. Maintain and report all field asset data on monthly basis to the Jaffna Operational office.
d. Fully responsible to arrange and allocate the field vehicles with the approval of the Senior Logistics Officer.
e. Be Familiar with DDG policies and procedures in relation to purchase and delivery.
f. Ensure that Attendance sheets are properly marked daily and are in order
g. Receive all new items and keep proper records of it.
h. Issue consumable items & equipment on request and keep proper records of it.
i. Keep proper records of all items requiring repair and co-ordinate with the Senior Logistics Officer re their repair and return. .

**Supply**

a. Fully responsible of the Store / Warehouse in the Camp '
b. Day to day management of the field vehicles in the Camp.
c. Ensure storerooms are well organised, clean and secure at all times (includes fire hazards, storage of hazardous materials and response procedures).
d. Assist the Logistics Manager/Senior Logistics Officer to conduct inspections of warehouse/s.
e. Issue and receive items of equipment inspecting every item for cleanliness and serviceability.
f. Maintain the field Store stock cards for all the types of items that have been received, transited, or remain within the storerooms.
g. Assist the Senior Logistics Officer to verify the description of problems relating to items that have been received for repair and send them to Jaffna Office.
h. Assist the Senior Logistics Officer to conduct a weekly 10 item stock check.
i. Provide information on the availability of items from the inventory to the Senior Logistics Officer when requested.
j. Assist the Senior Logistics Officer to conduct an annual, 100% fixed assets and inventory check of all items in the Field

**MINIMUM QUALIFICATIONS**

- Sri Lankan National
- Completed Secondary School Education.
- HR management, Inventory and stock control skills
- Ability to work proactively and with initiative.
- Team approach.
- Good interpersonal skills.
- Flexible, reliable and trustworthy.
- Good level of English & Tamil (verbal and written) and at least basic level in Sinhala Language.

**Preferable**

3 years work experience at a supervisory level, preferably in the field of Administration and/or Logistics.

**How to Apply**

Applications for all positions should accompany a cover note to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non related referees to the following address by 15th September 2011.

Only candidates who meet all the above requirements will be invited for an Interview/test.

**Head of Office**
DANISH DEMINING GROUP
456, Main Street, Chundukuli,
Jaffna

Fax 021 222 8180
E-mail: Jafofficemgr@ddg.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாம்பசிவம் கேசிகா
B2 C (கணிதப்பிரிவு)
ஊவா வெல்லச பல்கலைக்கழகம்
(Mineral Resource& Technology)



மதியாபரணம் கயநேசன்
2A B (கலைப்பிரிவு)
பேராதனைப் பல்கலைக்கழகம் (கலைப்பீடம்)



கந்தவேள் கீத்தா
3C (கலைப்பிரிவு)
இராமநாதன் நுண்கலைப்பீடம்

எமது பிரதேசத்தைச் சார்ந்த இந்த மூன்று மாணவர்களும் கல்வியாண்டு (2010/2011) மற்றும் நுண்கலைப்பீடத்துக்கு தெரிவாகியதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அவர்கள் மேலும் நற்சிறப்பினை எய்தவேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: போஷகர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் . கல்வி, கலை, கலாசாரத்துறை இந்து இளைஞர் மன்றம், சங்கானை.

## Cipla - *Citihealth*

## பணிநிலை வேண்டுகை

**வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் - Post of Field Co- Ordinator**

★ வயது 20-30 வருடங்கள்
★ கல்வித் தகைமைகள்:
க.பொ.த [சா.த] கணிதபாடத்துடன் க.பொ.த [உ/த] விஞ்ஞான பாடமும்
★ தமிழில் எழுத, வாசிக்க, பேசக்கூடியராகவும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தொடர்பு [தகவல் பரிமாற்றம்] கொள்ளக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.
★ அனுபவம்: மருந்துப்பொருள்கள் விற்பனைத் துறையில் ஆகக் குறைந்தது 2 வருடங்கள் விற்பனை அனுபவம் .

நிறுவனம்: முன்னணி வகிக்கும் மருந்துப் பொருள்கள் நிறுவனம் மருந்துகள் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்களைக் கையாளுகின்றது இந்தியா சிப்லா லிமிடெட்டின் உள்ளூர் முகவராகச் செயற்படுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்கு 18.10.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் கீழ்வரும் முகவரியில் நேரில் சமூகம் தரவும்.


**வனிக்கா மெடிக்கல்ஸ்**
இல.85, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பணிப்பாளர்,
சிற்றி கெல்த் இம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்
இல.29/3, கிரிமண்டல மாவத்த, நாவல,
இராஜகிரிய.
மின்அஞ்சல்: citi@slt.lk ,தொலைநகல்: 0114412055

*The Director,*
*Citihealth Imports (pvt) Ltd*
29/3, kirimandala Mawatha
Nawala, Rajagiriya

## UK க்கு Student Visa மூலம் செல்ல விரும்புகிறீர்களா?

ARTS UNIVERSITY COLLEGE BOURNEMOUTH
PRIFYSGOL ABERYSTWYTH UNIVERSITY
LONDON SOUTH BANK UNIVERSITY



UNIVERSITY OF ABERDEEN
AMERICAN INTERCONTINENTAL UNIVERSITY
University of Bedfordshire

Our partner Universities and colleges are above

Spectra Skills மூலம் பல்கலைக்கழக அனுமதிகளையும் ஏனைய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

## Accounting Courses @ spectra skills

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை என்று கவலைப்படுகிறீர்களா?
இதோ! உங்களுக்கான தொழிற்துறைசார் கல்வி. அனுமதிக்கு முந்துங்கள்!!

| | |
|---|---|
| AAT | G.C.E O/L சித்தியடைந்த எவரும் |
| CIMA | 16 வயதை பூர்த்தி செய்தவர்கள் |
| CBF/DBF | G.C.E O/L 6 Passes with 5 Cs including maths |
| Chartered | 3 passes A/L (Any subject) |

Starts on 22.10.2011

**ஊதியத்துடன்கூடிய தொழில் அனுபவப் பயிற்சி** பிரபல நிறுவனங்களில் எமது நிறுவனத்தில் மேற்படி பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே

**All our courses are conducted by lecturers with several years of teaching and industrial experience**

spectra skills

No: 19, Stanley road, (2nd floor-People's Bank)
Tel: 021 222 1422 & 1423
Email: jaffna@spectraskills.com Web: www.spectraskills.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பால் மன்னாரில் கைத்தொழில் கண்காட்சி

மன்னார், ஒக்.16

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான நிகழ்வொன்றும் கண்காட்சியும் கடந்த வியாழக்கிழமை மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பின் மன்னார் மாவட்டத் தலைவி காந்திமதி மகாதேவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட 25 மாவட்டங்களில் 20 மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றோசி சேனாநாயக்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், மன்னார் பிரதேச செயலாளர்



ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

பெண்களின் உரிமைகள், பெண்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் பெண்களுக்கான சவால்கள் தொடர்பாக, இங்கு வருகை தந்தவர்கள் உரையாற்றினர்.

இதேவேளை சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது தொடர்பிலும் மன்னாரில் உற்பத்தி செய்யப்படுகின்ற சுயதொழில் உற்பத்திகளைக் கொழும்புக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வது தொடர்பிலும் இங்கு ஆராயப்பட்டது.

(க-60)

# மருத்துவமனையைத் தேடி 36 கிலோமீற்றர் அலையும் மக்கள்

முல்லைத்தீவு, ஒக்.16

முல்லைத்தீவு கொக்கிளாய்க் கிராமத்தில் உள்ள மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதாயின் சுமார் 36 கிலோமீற்றருக்கு அப்பால் செல்ல வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் புளியடிமுனை, கருநாட்டுக்கேணி, இலந்தைமுனை ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்தபோதும் கொக்கிளாய் மருத்துவமனை இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் மக்களுக்கான மருத்துவ சேவைகள் எவையும் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மருத்துவ தேவைகளைப் பெறுவதாயின் சுமார் 36 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனைக்கே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

அவ்வாறு செல்வதாயினும் அதற்குரிய போக்குவரத்து வசதிகள் சீரான முறையில் இல்லாத நிலையே காணப்படுகின்றது. வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் மோசமாகக் காட்சியளிக்கின்றன.

மேலும் இரவுவேளைகளில் யாராவது சுகவீனமுற்றால் அவர்களுக்கான மருத்துவ உதவிகளைப் பெற முடியாத நிலையே காணப்படுகின்றது.

கொக்கிளாய் பிரதேசத்தில் நவீன வசதிகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையாகக் கொக்கிளாய் மருத்துவமனை 1983 இற்கு முன்னர் காணப்பட்டது. ஆனால் இன்று இந்தப் பிரதேசத்திலே ஆரம்ப சிகிச்சைகளையோ அல்லது ஒரு பனடோல் வில்லையையோ பெறக்கூடிய நிலை இல்லை. இதனால் தாங்கள் என்றுமில்லாதவாறு கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-6)

## இலக்குத் தப்பியது...



*கொடிய அரக்கர்கள்: மன்னார் மாவட்டம் அடம்பனில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்ட கிளைமோர்க் குண்டுகள் காணப்படுகின்றன.(601)*

# மனித உரிமைகள் தொடர்பில் வட்டக்கச்சி மக்களுக்கு விளக்கம்

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி வட்டக்கச்சி மாவடியம்மன் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு மேற்படி கிராம அலுவலரால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்களால் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கிராம அலுவலர், பொலிஸ் உத்தியோகத்தர், இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அதிபர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதில் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கியிருந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் மனித உரிமைகள், மனித உரிமை மீறப்படும் சந்தர்ப்பங்கள், சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

(க-426)

# ஆங்கிலப் பாடநெறி

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சியில் பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கான ஆங்கிலப் பாடநெறி நாளை நடைபெறவுள்ளது.

வாழ்க்கைத்திறன் ஒன்றாக ஆங்கிலம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்களுக்கான 100 மணித்தியாலங்கள் கொண்ட ஆங்கிலப் பாடநெறியின் தொடக்க நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள் இந்த நிகழ்வில் தவறாது கலந்து கொள்ள வேண்டுமெனக் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

# மாணவர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பாடநூல்கள், வழிகாட்டல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றைப் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன் சண்முகம் சந்திரகுமார் தொடர்ச்சியாக இலவசமாக வழங்கியிருந்தார். இந்நிலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் நூறு புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தலைவர், உபதலைவர், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-6)

# வவுனியா மாவட்ட மகளிர் தொழில் முயற்சியாளர் சங்கம் தொடக்கம்

வவுனியா, ஒக்.16

பொருளாதார நடவடிக்கைகளில் மகளிரை ஈடுபடுத்தும் கோட்பாட்டின் அடிப்படையில் வவுனியா மாவட்ட மகளிர் தொழில் முயற்சியாளர் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் இலங்கை வணிகக் கைத்தொழில் சம்மேளனத்தின் நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் கடந்த 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட வர்த்தகக் கைத்தொழில் விவசாய சம்மேளனக் கேட்போர் கூடத்தில் திருமதி அ.கோகிலா தேவியின் தலைமையில் தொடங்கப்பட்டது. இதற்கான அனுசரணையை ஒக்ஸ்பாம், என் கக்டோ, பொஸ்டேர் அமைப்புகள் என்பன வழங்கின.




வவுனியா நகரம் மற்றும் அதன் அயல் கிராமங்களாகிய செட்டிகுளம், இராசேந்திரன் குளம், தாண்டிக்குளம், உக்குளாங்குளம், தோணிக்கல், திருநாவற்குளம், பூந்தோட்டம், சின்னத்தம்பனை, வீரபுரம், சூசைப்பிள்ளையார்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பல பெண் தொழில் முயற்சியாளர்கள் இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டதுடன் உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தரான [illegible] [illegible] கலந்து கொண்டார். அங்கு உரையாற்றிய அவர்:

வறுமை என்பது பண வருமானம் சார்ந்தது மட்டுமன்றிப் பல்வேறு காரணிகளின்பாற்பட்டது. பெண்களே இதன் பாதிப்புக்கு அதிகம் உட்படுகிறார்கள். இவ்வகையான மகளிர் சங்கங்கள் அவர்களுக்குப் பலம் சேர்க்கும் எனக் குறிப்பிட்டார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட வர்த்தக கைத் தொழில் விவசாயச் சம்மேளனத்தின் சிரேஷ்ட உப தலைவர் ஆ.சபாநாதன் தமது உரையில் இந்த மகளிர் அமைப்பானது வவுனியா மாவட்ட மகளிர் தொழில் முயற்சியாளர்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யும் என்றார்.

சங்கத்தின் உருவாக்கத்துக்கு சியர் நிகழ்ச்சித் திட்டத்தின் தொழில் முயற்சி இணைப்பாளர் வி.யே.சூசைரத்தினம் ஆற்றிய பணிகளைப் பலரும் பாராட்டினர்.

நிகழ்வின் அறிமுக உரையை நிகழ்த்திய சூசைரத்தினம்: சமூகத்தின் பல்வேறு மட் டங்களிலும் வர்த்தகம் மற்றும் சமூகப் பணிகளில் சந்தர்ப் பங்கள் கிடைக்காமையே கிராமிய மகளிரின் பின்னடைவுக்குக் காரணம் என்றார்.

தற்போது பெண்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தகைய சங்கங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் படிப்படியாக இந்த நிலை மாறும் வாய்ப்புக்கள் உள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலைவாய்ப்பு

**மீரோ மின்சாரத் தராசு விற்பனை செய்ய விற்பனை பிரதிநிதி ஒருவர் தேவை**

**தகைமைகள்:**

★ வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம்
★ சந்தைப்படுத்தல் தொடர்பாக தெரிந்திருத்தல் வேண்டும்.
★ யாழ்ப்பாண மாவட்டத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்திருத்தல் வேண்டும்.
★ அடிப்படை சம்பளம் உட்பட மாதாந்த வருமானம் ரூ.60.000 க்கு மேல்.
★ எரிபொருள் மற்றும் வாகனம் வழங்கப்படும்.

சுயமாகத் தயாரித்த சுயவிபரக்கோவை உடன். மேற்குறிப்பிட்ட அனைத்து சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கவும்.

**சுதா காட்சியறை**
(மீரோ தராசு அனுமதி பெற்ற ஏக விநியோகஸ்தர்)
இல.62. திருநெல்வேலிச் சந்தி.
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777630752. 077238 3399

**மீரோ இன்டர்நெசனல் (தனியார்) நிறுவனம்**
இல.22. (கதிர்காமக் கோயில் முன்னால்).
குருணாகல
தொ.பே.: 0773700008. 0773700004. 0773700002.

## கடை வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி ஏ-9 பிரதான வீதியில் கந்தசாமி ஆலயத்திற்கும் செந்துரேசா தேவாலயத்திற்கும் இடையில் சகல வசதிகளுடனும் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0750760922 0771916979

## வீடு காணிகள் விற்பனைக்கு

1.கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் ஆறு பரப்பு வெறும் காணி, ஐந்து பரப்பு கிணற்றுடன் கூடிய வெறும் காணி, 1¾ பரப்புடன் அரைவாசி பூர்த்தி செய்யப்படாத வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. இந்த மூன்று காணிகளையும் (மூன்றும் ஒன்றாகவே அமைந்துள்ளன) முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாங்கிக் கொள்ளலாம். அத்துடன் அதே வீதியில் அமைந்துள்ள 4 பரப்புக் காணியும், அதில் அமைந்துள்ள வீடு, கிணறு, கடையும் விற்பனைக்கு உள்ளது.
2.கடற்கரை வீதி, பொலிகண்டி, வல்வெட்டித்துறையில் பழைய வீட்டுடன் 13½ பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 0777420240, 021 222 8005, 021 321 8109

## மணமகள் தேவை

கனடாவில் வசித்துவரும் யாழ்.இந்து கௌரவ குடும்பம் வயது 30 நட்சத்திரம் அச்சுவினி, பாவம் 9, செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு அதே நாட்டைச் சேர்ந்த அல்லது ஐரோப்பிய நாடுகளில் P.R. பெற்ற மணமகள் தேவை.
T.P: 0775758836

## காணிகள் விற்பனைக்கு

நாவற்குழி, கோரதீவு வீதியில் 5 கிலோ மீற்றர் தூரத்தில் வீதியோரமாக 5 பரப்பு 14½ குழியு டையதும் 4 பரப்புமுடையதுமான இருகாணிகள் கைதடி நாவற்குழியில் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு: பொது நூலக வீதி, கைதடி தெற்கு, கைதடி.
T.P:0213207145, 0777651586

## கார்விற்பனைக்கு

64 - தொடர்இலக்க NISSAN SUNNY (B-13) டீசல் கார் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்- ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 5 மணி.
தொடர்பு: 0770871609, 0213211516

## அருள் முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Accountants, Teachers அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் உட்பட எத்தகைய உள்நாட்டு/ வெளிநாட்டு மண மக்கள் தேவைக்கும் தொடர்பு: 0718475114, ஓய்வு நிலை ஆசிரியர் வழங்கும் கௌரவ சேவை, இல.3, யாழ் வீதி, சிறாம்பியடி லேன் (Cosy Restaurant Lane), பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

# Metro Travels

## விசேட விமானக் கட்டணங்கள்



| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 12800 |
| Colombo-Tiruchirapally-Colombo | 13000 |
| Colombo-Doha | 22000 |
| Colombo-London | 42500 |
| Colombo-Toronto | 80500 |
| Colombo-Singapore-Colombo | 30500 |
| Colombo-Frankfurt | 40000 |
| Colombo-Milan | 56500 |
| Colombo-Rome | 55500 |
| Colombo-Paris | 60500 |
| Colombo-Zurich | 58500 |

All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance,
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanly Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm

# இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

**DR.HAIR TRICHOLOGY CENTRE**
**Hair and Scalp Clinic**



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இன்றும் நாளையும் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19.20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288.

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854


# 4 ஆம் ஆண்டு நினைவுகள்



**ஆசிரியமணி**
**அமரர்**
**அ.பஞ்சாட்சரம்**

தோற்றம்: 27.11.1927 மறைவு: 02.10.2007

ஆசிரியமணி உரும்பைப் பஞ்சாட்சரம் அளப்பரிய சேவைசெய்த நெஞ்சின் உரம் பேசரிய பெருமை மிகும் பூந்தமிழில் பெருநூல்கள் படைத்தளித்த, கல்வி வள்ளல் நேசமுடன் எமக்களித்த நூல்கள் யாவும் நிலைத்து நின்றே தமிழ் சைவம் வளர்த்து வரும் பாசமுடன் எமைக்காத்து ஆளாக்கியவரே கண்ணீரால் வாடுகின்றோம் அப்பா! நாமெல்லாம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

மகள் -
வாசுகி குடும்பம்

# அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் முத்தையா சிவலிங்கம்**

மலர்வு: 19.03.1935

உதிர்வு: 13.09.2011



எமது தந்தையின் உயிர் பிரிந்தவேளை உடன் வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையம், மலர்மாலைகள் சாத்தியோர், பத்திரிகை மூலம் அஞ்சலி பிரசுரித்தோர், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர், வைத்திய உதவிகள் அளித்த யாழ். போதனாவைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் மற்றும் இன்று வரை எமக்குப் பல்வேறு வகைகளில் ஆறுதலும் ஒத்தாசை வழங்கியவர்களுக்கும் எமது துயரத்தில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கலட்டி அம்மன் மணி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதோர் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

78,கலட்டி அம்மன் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

[ஓய்வுபெற்ற பிரதான லிகிதர், சமாதான நீதிவான்.]



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பிரதான லிகிதரும் சமாதான நீதிவானும் ஆகிய கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் 11.10.2011 செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வயிரமுத்து (மலேசியன் புகையிரத ஊழியர்)- செல்வநாயகி தம்பதியரின் மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், மாசிலாமணியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற முருகேசுவின் மைத்துனரும், ஜெயக் குமார் (ஜேர்மனி), ஜெயகரன் (ஜேர்மனி), ஜெயபாலன் (சுவிஸ்), ஜெயேந்திரன் (சுவிஸ்), சுபத்திரா (திருகோணமலை), ஜெயமோகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், எல்காட், சுதாமதி, கௌரி, தீபா, கார்த்தியாயினி, திருச்செந்தில்நாதன் (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மாமனும், சாறா, சாசா, சில்வானா, நிதர்சன், நிவேதன், மிதுசன், குகதீஸ், பிரதீஸ், பிரதீக்கா, பிரஜீத், பிரஜீத்தா, தாட்சாயினி, செந்தூரன், திருமகள், ஜெயேந்தினி, ஜதுர்சன், ஜெனிசா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் விரைவில் வரும் என்பதே எனது வெற்றிக்கு முக்கிய கருவி



## வாழ்க்கையின் முக்கிய முடிவுகளைத் தாம் தெரிவு செய்ய அதுவே உதவியதாகக் கூறியிருந்தார் "அப்பிள்" ஸ்ரீவ்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள பால்டோ ஆல்டோ எனும் நகரில் 1955 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி பிறந்தவரான ஸ்ரீவ் ஜாப்ஸ் கடந்த 5 ஆம் திகதி அவரது 56 ஆவது வயதில் கல்லீரல் புற்று நோயின் காரணமாக இறந்தார்.

கணினி உலகுக்கு இவரது மரணம் ஒரு பேரிழப்பாகும். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ரஷ்ய அதிபர் மெடதுடேவ் உள்ளிடப் பல உலகத் தலைவர்கள் இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர்.

பேஸ்புக், ருவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்களில் அவருக்கான அஞ்சலிக் குறிப்புகள் குவிந்த வண்ணமுள்ளன. சீனாவில் மட்டும் ருவிட்டர் இணையத்தளத்தில் 5 கோடி பேர் ஜாப்ஸின் மரணம் குறித்து அஞ்சலிக் குறிப்பைப் பதிவு செய்துள்ளனர்.

கணினி உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஜாப்ஸைப் போல் வேறொருவரைக் காண்பது அரிது என மைக்ரோசொவ்ற் நிறுவனத் தலைவர் பில் கேட்ஸ் கூறியுள்ளார். நியூயோர்க் நகர மேஜரான மைக்கல் புளும்பேர்க் ஜாப்சை, ஜன்ஸ்ரீன் மற்றும் தோமஸ் அல்வா எடிசனோடு ஒப்பிட்டுப் புகழாரம் செலுத்தியுள்ளார்.

01.04.1976 அவரது 21 ஆவது வயதில் சக கல்லூரித் தோழர்களான றொனால்ட் வாய்ன், ஸ்ரீவ் வாஜ்னிக் ஆகியோருடன் இணைந்து அப்பிள் நிறுவனத்தை நிறுவினார் ஸ்ரீவ் ஜாப்ஸ்.

பத்து ஆண்டுகளின் பின்னர் 1985 இல் நிறுவனத்தில் ஏற்பட்ட சில முரண்பாடுகளால் அப்பிள் நிறுவனத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இந்தக் கால கட்டத்தில் அந்த நிறுவனத் துக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாக நட்டம் ஏற்பட்டது.

அப்பிள் நிறுவனத்தை விட்டு விலகிய ஸ்ரீவ் ஜாப்ஸ் 1985 இல் 'நெக்ஸ்ற்' எனும் கணினி நிறுவனத்தை ஆரம்பித்தார். எனினும், மீண்டும் 1996 இல் அப்பிள் நிறுவனம் ஸ்ரீவ் ஜாப்ஸைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது. இடைக் காலத் தலைவராகவும், இணை நிறுவுனராகவும் பொறுப்பேற்று நட்டம் ஏற்படும் விடயங்களையெல்லாம் குறைத்தார். விடாமுயற்சியின் பயனாக விண்டோஸுக்கு இணையாக 'மேக்' என்ற புதிய கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தினார். இது நிறுவனத்தை புகழின் உச்சிக்கே அழைத்துச் சென்றது.

தான் கல்லீரல் புற்றுநோயால் பாதிப்புற்றிருப்பதை அறிந்தும்கூட அதனைப் பற்றிக் கவலைப்பட்டு மனதைச் சோர விடாது, அயராது உழைத்து ஐ. பாட், ஐ.போன், லாப்ரொப் கணினி, எம்.பி.3, என்பவற்றை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். 2009 இல் இவருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

2005 இல் ஸரான்போர்ட் பல்கலைக் கழகத்தில் உரையாற்றிய வேளையில் ஸ்ரீவ் ஜாப்ஸ் இவ்வாறு தெரிவித்தார். ''எனக்கு மரணம் விரைவில் வரும் என்பதே எனது வெற்றிக்கு மிக முக்கிய கருவி. வாழ்க்கையில் மிக முக்கியமான தெரிவுகளை மேற்கொள்வதற்கு அது எனக்கு மிகவும் உதவுகின்றது" எனக் கூறினார்.

ஸ்ரீவ் அந்த நோயுடன் போராடிய விதத்தை வைத்தியர்கள் பாராட்டுகின்றனர். வழமையாக இந்தநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அது ஒருவரது வாழ்க்கையைச் சிதறடித்து விடும். நோயாளி மனம் சிதைந்து நொருங்கி விடுவார், ஆனால் ஸ்ரீவ் அற்புதமான வகையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனினும் நோயின் தாக்கம் அதிகரிக்கவே கடந்த வருடம் பெப்ரவரி மாதமளவில் தனது ஆயுளின் நாள்கள் சுருங்கி விட்டதென்பதை நன்கு உணர்ந்த ஜாப்ஸ் அப்பிள் நிறுவன நிர்வாகத்தைக் கடந்த ஆவணியில் டிம் குக்கிடம் பொறுப்புக் கொடுத்தார். இறுதிக் காலத்தில் அவரால் மாடிப் படிகளில் ஏறி இறங்கக் கூட இயலாத அளவுக்குப் பலவீனமடைந்திருந்தார் என அவரது சகோதரியான மொனா சிம்சன் நியூயோர்க் சஞ்சிகைக்கும் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான தனது இறுதி நேரத்தை மனைவியான லூரெனுடனும், நான்கு பிள்ளைகளுடனுமேயே செலவழித்துள்ளார் என அவரது குடும்ப வைத்தியரான டீன் ஆர்னிஷ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீவ் ஜாப்ஸ் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு ஓய்வில் இருந்தபோது அவருக்குப் பல விருந்துகள் மற்றும் பாராட்டு விழாக்களுக்கு ஏற்பாடுகள் செய்து அழைத்துள்ளனர். ஆனால் அவர் அவை எதையும் ஏற்க மறுத்துவிட்டாராம்.

இன்று ஸ்ரீவ் ஜாப்ஸின் மனைவி மற்றும் பிள்ளைகள் 6.5 பில்லியன் டொலர் சொத்துக்கு அதிபதி. கூடவே உலகின் மிகப் பெரிய முன்னோடி மனிதரான ஒருவரின் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு வந்திருக்கிறது.

ஸ்ரீவ் ஜாப்ஸ் தன்னை ஒரு பெரிய சாதனையாளராக, கண்டுபிடிப்பாளராகக் கருதி நடந்து கொண்டதேயில்லை. ஒரு சாதாரண மனிதனை விட பல மடங்கு இயல்பாக அனைவரிடமும் நடந்து கொண்டார்; அன்பு காட்டினார். மக்களின் தேவைகளுக்கேற்ப கண்டுபிடிப்புக்கள் அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அதுவே இந்தத் துறையில் யாருக்கும் கிடைக்காத புகழ், பெருமை மற்றும் மக்களின் அன்பையும் அவருக்குச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது என்கிறார் அவரது நீண்ட நாள் நண்பரும் குடும்ப வைத்தியருமான ஆர்னிஷ்.

### ஸ்ரீவ் ஜாப்ஸின் சாதனைகள்

*2001 இல் ஐ.பாட் எனும் பாடல் கேட்கும் கருவியை அப்பிள் நிறுவனம் வெளியிட்டது. 2007 இல் முதலாம் தலைமுறை ஐ.போன் எனும் மொபைல் போனை ஜாப்ஸ் வெளியிட்டார்.

*2010 இல் அப்பிள் நிறுவனத்தின் வருமானம் 325 லட்சம் கோடி ரூபா.

*2010 இல் ஐ.பாட் எனும் டெப்லெட் கணினி வெளியிடப்பட்டது. வெளியான 80 நாள்களில் 30 லட்சம் ஐ.பாட்களை விற்பனை செய்து சாதனை படைத்தது. மேலும் இதன் விற்பனை 2010 இன் இறுதியில் ஒரு கோடியே 40 லட்சமாக உயர்ந்தது.

*2011 இல் ஐந்தாம் தலைமுறை ஐ. போன் எனும் மொபைல் போனை அப்பிள் நிறுவனம் வெளியிட்டு உலகெங்கும் வாடிக்கையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது.

■ ஜெகன்

# ஆட்சி நடத்த முடியும்

**ஜயலத் எம்.பி.**

அரசின் உதவியின்றி கொழும்பு மாநகரசபை ஆட்சியை எம்மால் கொண்டு நடத்தமுடியும் என்பதைத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது ஐ.தே.கவுக்கு நன்கு தெரியும். எதிர்க் கட்சிகளுடன் எவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதும் எமக்குத் தெரியும்.

கொழும்புத் தேர்தல் களத்தில் தோல்வியடைந்த அரசு மக்களைப் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. இதன் ஓர் அங்கமாகக் கொழும்பு நகரை அபிவிருத்திசெய்யும் நடவடிக்கையை நிறுத்தப் போவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார்.

கொழும்புவாழ் மக்கள் அரசுக்கும் வாக்களித்தனர் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. இவ்வாறானவர்களுடன் இணைந்து எப்படி நிர்வாகத்தை முன்னெடுப்பது?

- இவ்வாறு கேள்வி எழுப்பினார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி.

# எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம்

**அமைச்சர் டலஸ்**

கொழும்பு மாநகரம் பொருளாதார கேந்திர நிலையமாக இருப்பதனால் இங்கு அனைவரும் ஒத்துழைத்துச் செயற்படுதல் அவசியமாகும்.

கொழும்பு மாநகரசபையை ஆளப்போகும் கட்சியால் தனித்து நிர்வகிக்க முடியாது என்றில்லை. அவ்வாறு செயற்பட்டால் நாளாந்தம் பிரச்சினைகளே ஏற்படும். அபிவிருத்தியைக் காணமுடியாது.

கொழும்பு மாநகரசபையில் தனித்து செயற்படுவோம்; எவரின் உதவியும் தேவையில்லை என ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. இவை அர்த்தமற்ற கதையாகும்.

ஏனைய உள்ளூராட்சி சபைகளைப் போன்று கொழும்பு மாநகரசபையை ஐ.தே.க. கருதக்கூடாது. ஒத்துழைத்துச் செயற்பட்டாலேயே அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும.

# பெரும்பான்மை இல்லாதது தாக்கம்தான்

**ஹாபீஸ் நஷீர் அஹமட்**

கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை ஆளும்கட்சி தனித்து முன்னெடுப்பதில் சிக்கல் எதுவும் இல்லை.

பெரும்பான்மை இல்லாத காரணத்தால் சிற்சில பிரச்சினைகள் ஆளும் கட்சிக்கு ஏற்படலாம். பிரேரணைகள் முன்வைக்கப்ப டும் சந்தர்ப்பங்களில் தோற்கடிக்கப்பட்டாலும் அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அதிகாரம் மேயருக்கு உண்டு.

ஆளும் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லை என்பது ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார் துவா கட்சியின் தலைவர் ஹாபீஸ் நஷீர் அஹமட்.

## கொழும்பில் ஐ.தே.கவால் தனித்து இயங்க முடியுமா?

கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்றி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிராத ஐக்கிய தேசியக் கட்சியால் தனித்து முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் அரசியல் கட்சியின் முக்கியஸ்தர்கள் கருத்து வெளியிட்டனர்.

# அரசை எதிர்க்க ஆதரவு தேவை

**மனோகணேசன்**

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு அறுதிப் பெரும்பான்மை என்பது அவசியமில்லை. உள்ளூராட்சி சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசு முஸ்தீபு செய்கின்றது. அப்படி அந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் பட்சத்தில் கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதனை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவைப்படும்.

அதைச் சிந்திப்பதற்கு நண்பர் ஏ.ஜே.எம். முஸம்மில் தயாராகவேண்டும். மாறாக நண்பர்களைப் பகைவர்களாக்கும் வகையில் அர்த்தமற்ற கதைகளைக் கூறக்கூடாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்க முடியும் என்பது எங்களுக்குத் தெரியும்.

அதுமட்டுமின்றி, அதிக ஆசனங்களைக் கொண்ட கட்சி உறுப்பினர்களுக்கே மேயர், பிரதி மேயர் நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதும் எமக்கு நன்கு தெரியும். இவற்றை ஐக்கிய தேசியக் கட்சி சொல்லித்தான் புரியவேண்டும் என்றில்லை - என்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

# நிர்வாகத்தை முன்னெடுப்பதில் சிக்கலில்லை

**சுனில் வட்டவல**

உள்ளூராட்சி சபைச் சட்டத்தின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாநகரசபை நிர்வாகத்தை முன்னெடுப்பதில் சிக்கல் எதுவும் ஏற்படாது.

ஆனால், நிர்வாகத்தை சீராகவும் திறம்படவும் முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகளின் உதவி ஐ.தே.கவுக்கு அவசியம். எதிர்க்கட்சிகளின் மனங்களை வெல்லும் வகையில் ஆளும் கட்சியின் செயற்பாடுகள் மாநகரசபையில் அமையவேண்டும்.

உள்ளூராட்சி சபைச் சட்டத்தின் படி கூட்டணி அமைத்து ஆளும் கட்சியைக் கவிழ்க்க முடியாது என்பது தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதிகப்படியான ஆசனங்களைக் கைப்பற்றியவர் களே ஆட்சிபீடமேறவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, நிர்வாகத்தை முன்னெடுப்பதில் ஐ.தே.கவுக்கு சிக்கல் எதுவும் இல்லை - என்றார் ஜே.வி.பி. சார்பில் கொழும்பு மாநகரசபைக்கு முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட சட்டத்தரணி சுனில் வட்டவல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பில் நீண்ட காலமாக இயங்கும் பிரபல கைத்தொழில் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் புதிய ஆலை ஒன்றை நிறுவ உள்ளது. யாழ் நகருக்கு அண்மித்ததாகவோ, போக்குவரத்து வசதிகள் கொண்ட சற்றுத் தொலைவான இடத்திலோ ஐந்து அல்லது இரண்டு ஏக்கர் காணி உடனடியாகத் தேவைப்படுகிறது.

விவரங்களுக்கு:-

mollanka@gmail. com என்ற மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொள்ளவும்.

## தேவை

யாழ்ப்பாணம் நகரச்சுற்றாடலில், 4,000 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கட்டடம் ஒன்றோ அல்லது 2 பரப்புக் காணியோ உடன் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

mollanka@gmail. com

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

றோயல் குளுக்கோஸ் தரும்படி கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## STUDY IN GERMANY

ஜேர்மனியில் ஆங்கிலத்தில் குறைந்த செலவில் பகுதிநேர வேலை தொழில் வாய்ப்புடன் மேற்படிப்பைத் தொடர G.C.E.(A/L) தகுதி உடைய படிக்கும் நோக்குடையவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0716419050

## மணமகன் தேவை

1978 இல் பிறந்த U.S.A. இல் சட்டத்துறையில் பணிபுரியும் திருவாதிரை நட்சத்திரத்தையுடைய மணமகளுக்கும் 1980 இல் பிறந்த கனடாவில் பணிபுரியும் M.B.A பட்டதாரி மணமகளுக்கும் தகுந்த வரனை பெற்றோர்கள் தேடுகின்றார்கள்.
தொடர்புகளுக்கு: 0773647318, 0718740662

## USA - Green Card

அமெரிக்க விஸா லொத்தர் விண்ணப்ப விவரங்களுக்கு
Penguin Book Shop
B2 - F23 Bloemendhal Flats
Colombo - 13.
T.P: 0725110911, 2438367

## காணிகள் விற்பனைக்கு

சாவகச்சேரி-சங்கத்தானை, தாமோதரம் வீதியில் (இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்) 10 முதல் 10.5 பரப்புடைய மூன்று வெவ்வேறு காணித் துண்டுகள் (சோனகவளவு-2, காட்டு வளவு - 1) ஆகக் கூடிய விலைக் கோரலுக்கு விற்கப்படும்.

தொடர்பு: 0711351746

## காணி விற்பனைக்கு

பரமேஸ்வரச் சந்திக்கு அருகில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0213215792, 0774583278

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல Tile ஸ்தாபனத்துக்கு Store keeper, Marketing Executive & Driver தேவை. யாழ்.நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நெல்லியடியில் திறக்கப்படவுள்ள எமது கிளை காட்சியறைக்கு Sales Rep. தேவை. வடமராட்சி பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி

வி.இல. 4184, உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: suren@metrohomes.lk

## Dr.Pimple

TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic



முகப்பருக்களுக்கு
International Skin Peeling
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

இன்றும் நாளையும் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19.20 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு-021-2220288.

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011-4874854, 011-4376078, 011-2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024-4925807, 024-4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021-4923416, 021-2220288.
Head Office Colombo - 011 4874854

## Jaffna College Institute of Technology

கொழும்பு பல்கலைக் கழகத்தின் வெளிவாரி தகவல் தொழில்நுட்ப பாடநெறி எமது நிறுவனத்தில் நடத்தப்படுகின்றது.(UCSC) Apply immediately

- Diploma in Information Technology
- Higher Diploma in Information Technology

**Diploma Courses One Year Full time** (two semester)
நீங்களும் பொறியியலாளராகலாம்

**Civil Draughtsmanship**



Building Construction
Construction Materials
Sanitary Engineering
Engineering Science
Engineering Drawing
Draughtsmanship, Quantity Surveying
Surveying and Leveling
English, Maths, AUTO CAD

City & Guilds இன் பாடநெறிக்கு அமைவாக கற்பிக்கப்படுகின்றது

**Computer Programming & Data Processing**



System Analyzing & Design
Data base Management System
Fundamentals of Computer Technology
Data Processing, Application Packages
Visual Basic VB .net,
Java,C++,English, Oracle

**Diploma in 6months courses**
AUTO CAD Modeling (2D&3D)
Web Designing



Technician Certificate in Telecommunication & Electronics
Covers City & Guilds Syllabus- One Year Full time (two semester)

**Certificate Craft Course 6 months**
(தமிழ்மொழி மூலம்)
Mobile Phone Servicing & Repairing Course



**Facilities**
Easy Installment, More Practical hours, Modern Lab, Auditorium, Hostel library & Sports etc.

A training Institute registered with the (TVEC) Under P25/0014

**More Information**
Director,
Jaffna College Institute of Technology Vaddukoddai, Jaffna, Sri Lanka.
T.P No.321221 3139 021 222 8275 E-Mail jcit@sltnet.lk

## German Swiss மொழிகள்

German Embassy இல் கேட்கப்படும் Certificate இற்கு ஏற்றவாறு A1-A2 அடுத்த வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இல.10, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0771604823

## கார் விற்பனைக்கு

TOYOTA Vitz(8 AIR Bag)KMxxxx
இலக்கமுடைய One Owner Car
விற்பனைக்கு உண்டு
0750431145

## விற்பனையாளர் தேவை (ஆண்கள் மட்டும்)

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் அ.ஹிருஷிகேஷன் அ.ரிசாலினி
242 ,ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

2011 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்146 புள்ளிகளைப் பெற்ற செல்வன் அ.ஹிருஷிகேஷன் அவர்களையும்166 புள்ளிகளைப் பெற்ற அ.ரிசாலினி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்.
சித்தப்பா -ம.அன்ரன்

## DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING

100% செய்முறை பயிற்சிகளுடன் கூடிய 5 நாள் முழுநேர பயிற்சி நெறி

- அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- விரிவுரையாளர்கள் கொழும்பிலிருந்து
- ஒரு குழுவில் 10 பேர் மாத்திரமே
- 100% தொழில் வாய்ப்பைப் பெற
- வயதெல்லை கிடையாது

இலவச Study pack

- Computer Assembling - O.S Installation
- Partitions and formatting - Trouble shooting
- Introduction to LAN networking

ஆரம்பம் 28/10/2011

பயிற்சிக் கட்டணம் Rs. 5950/=

APSS Engineering (Pvt) Limited
242, Dr. Subramaniam Road
Chunnakam. 021-2241731
Hot Lines: 077 2306642
077 2418804, 077 3867695
City & Guilds

## தீபத் திருநாளை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

(ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ் இணைந்து வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை)



**நல்லி சில்க்ஸ்**
121/1. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5573

15.10.2011 தொடக்கம் 26.10.2011 வரை
திருமணச் சாறி, கொட்டன்சாறி, சல்வார்கள், சல்வார்த் துணிகள் (கொட்டன் சில்க்ஸ்) மற்றும் அனைத்து உடுபுடவைகளையும் இங்கே மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**ராசி சில்க்ஸ்**
70, 71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5571


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்துக்கு இலக்கியமான நளமகாராசன் கதை

நா.நல்லதம்பி, மட்டுவில்



சூதாட்டத்தால் நாடு நகரிழந்த பாண்டவர்கள் வனவாசம் மேற்கொண்டிருந்த காலம் அது. வனத்திலே தவம் செய்து கொண்டு வாழ்ந்த முனிவர்களும் பாண்டவர்களுக்கு வேண்டியவர்களும் உறவினர்களுமான அரசர்களும் பிறரும் வந்து இவர்களது சுகம் விசாரித்துக் கொண்டு சென்றார்கள்.

கிருஷ்ண பகவான், பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடம் தூதுபோய், வனவாசம் செய்ய வேண்டிய காலப்பகுதி முடிந்துவிட்டதால் பாண்டவர்களுக்கான பங்கைக் கொடுக்கும்படி கேட்டபொழுது, ஈ இருக்கும் இடந்தானும் கொடுக்கமாட்டேன் என்று துரியோதனன் கூறிவிட்டான். இனிமேல் போர் செய்துதான் தாம் இழந்த நாட்டை மீட்பது என்று முடிவு செய்யப்படலாயிற்று.

போர் என்று வந்ததும், அர்ச்சுனன் பாசுபதம் பெற்றுவர கயிலைக்குப் போய் விட்டான். மற்றைய பாண்டவரும் தத்தமது போர்ப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரம், சமாதானப் பிரியனான தருமனுக்கு மனக்கவலை ஏற்பட்டது.

*" பாண்டவரின் முன்தோன்றல், பார் முழுதும் தோற்று ஒருநாள்*
*ஆண்டகையே தூதுவனாய்ச் சென்று அவனி- வேண்ட*
*மறுத்தான் இருந்தானை மண்ணொடும் போய்மாளப்*
*பொறுத்தான் இருந்தான் புலர்ந்து"* [நளவெண்பா]

மண்ணுக்கு ஆசைப்பட்ட துரியோதனன் மண்ணோடு மாண்டு போகும்படி போர் நிகழ்த்தும் பொறுப்போடு இருந்த தருமராசன், மனம் வாட்டத்தோடு காணப்பட்டான்.

அந்த நேரம் வியாசமுனிவர் அந்த இடம் வந்தார். தருமனின் மனவாட்டம் பற்றிக் கேட்டார்.

இலக்கியக் காட்சி – 106

'பாசுபதம் பெறுவதற்காகத் தம்பி அர்ச்சுனன் போய்விட்டான். அவனது துணை இப்போது இல்லையே' என்கிறான் தருமன். அத்துடன் 'இப்படிச் சூதாடி நாடிழந்து வனத்தில் அலைந்து துன்பப்பட்டவர்கள் எம்மைப் போல் யாரும் இருக்கிறார்களா?'' என்றும் கேட்கிறான். அப்பொழுது வியாசர், சூதாட்டம் சத்திரியருக்கு வழக்கமான ஒன்றுதானே அதற்காகக் கலக்கம் வேண்டாம். சூதில் தோற்பதும் துன்பப்படுதலும் சனிபகவானால் செய்யப் படுவது என்று கூறி உதாரணத்துக்கு நள மகாராசன் கதையைச் சொல்கிறார்.

பாரதக் கதையிலே பிறந்த கதையே நளமகாராசன் கதை என்பதைத் தெரிந்து கொள்வது முக்கியமானது. இந்தக் கதையானது பாரதம், இராமாயணம் போன்ற இலக்கியங்களுக்குரிய எல்லாப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதும் நமது இலக்கிய சிந்தனைக்கு விருந்தளிப்பதும் கற்று இன்புறத்தக்கதாகும்.

நளமகாராசன் கதை பாரத, இராமாயண கதைகளுக்கு மூத்த கதை என்பதையும் "நளவெண்பா" என்ற நூலைப் பாடி நமக்கு அளித்த புகழேந்திப் புலவரின் உளப் பாங்கினையும் கண்டு இன்புறத்தக்கதான இந்தக் கதையின் சுருக்கத்தைப் பார்ப்போம்.

நிடத நாட்டின் மாவிந்த நகரிலே செங்கோல் செலுத்திய மன்னர் மன்னனான நளமகாராசன்,

*"..........................மாதர்*
*அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்*
*ஒரு கூட்டில் வாழ உலகு"*

காத்து வருகின்றான். ஒன்றையொன்று இரையாக்கும் பகைப் பிராணிகளை ஒரு கூட்டில் வைத்துக் காப்பாற்றுதல் என்பது பல இன மத மொழி மக்களை ஒரு நாட்டில் ஒற்றுமையுடன் வாழ வைத்தலாகும். இது செங்கோல் அரசனுக்குச் சிறப்பு ஆகும். இந்த அரசன் விதர்ப்ப நாட்டு மன்னன் வீமராசனுடைய புதல்வி தமயந்தியைச் "சுயம்வரம்" மூலம் மணம் செய்கிறான். மணவாழ்வு பன்னிரண்டு ஆண்டு இன்பமாகக் கழிகின்றது. ஆண்மக்கள் இருவரைப் பெற்று மகிழ்ச்சியடைகின்றார்கள்.

*"பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை அறிவறிந்த*
*மக்கட் பேறு அல்ல பிற "* [குறள்] ஆயினும், கொடுப்பதும் எடுப்பதும் ஆகிய மாறுபட்ட குணநலங் கொண்ட சனிபகவான் இவர்களின் மகிழ்ச்சியை விரும்பவில்லைப் போலும்! சனிபகவானுக்கு (கலி புருஷன்) இந்துக்களாகிய நாம் மிகவும் பயபக்தியாக இருக்கிறோம் அல்லவா! புரட்டாதிச் சனியில் முக்கியமாகவும் ஏனைய சனிக்கிழமைகளிலும் விரதமிருக்கிறோம். இவருடைய வாகனத்துக்கே (காகம்) சோறு படைக்கிறோம்.கெடுப்பதுவும் கெட்டார்க்குச் சார்பாய் மற்றாங்கே கொடுப்பதுவும் நவக்கிரகங்களில் ஒருவரான சனீஸ்வரனுடைய மகிமையாகிறது!

இந்தவகையில் நளமகாராசனுடைய வாழ்வில் தவறுகண்டு அவனை வருத்தத் தொடங்குகிறார் கலிபுருஷனான சனீஸ்வரன்.

*" சந்திசெயத் தாள் விளக்கத் தாளின் மறுத் தான்கண்டு*
*புந்திமகிழப் புகுந்து கலி- சிந்தையெலாம்*
*தன்வயமே ஆக்கும் தமையனுடன் இருந்தான்*
*பொன் அசல மார்பற் புகைந்து "* [நளவெண்பா]

நளன், சந்தியாவந்தனம் செய்வதற்காகக் கால் கழுவும் போது , கழுவுப்படாமல் இருந்த மறு கண்டு, அதன் வழியே (அதைச் சாட்டாக வைத்து) கலி, நளனைப் பற்றிக் கொள்கிறது! இப்படி ஒரு சிறு தவறும் இதுவரை அவன் வாழ்வில் இருக்கவில்லை என்பதை இங்கு நாம் பார்க்கிறோம்.

இனி சனீஸ்வரன் நளனைத் தன்வயமாக்குவதற்கு ஒரு சிற்றரசனான புட்கரனை (நன்மை செய்யும் எண்ணத்தில்) சந்தித்து நளனோடு சூதாடச் செய்கிறான்.

சூதாட்டம் வேண்டாமென மந்திரிமார் தடுத்த போதும், மன்னர் வாழ்வில் சூதாட்டம் வழமைதானே எனக் கூறிச் சூதாடி, அனைத்தும் இழந்த நிலையில், காதல் மனைவி தமயந்தியைப் பணயம் வைக்கும் படி புட்கரன் கேட்டதும் (பாரதக் கதையில், துரியோதனன் பாஞ்சாலியைப் பணயம் கேட்ட நிகழ்வுக்கு முன் நடந்தது) கேளாத கேள்வியைக் கேட்டுவிட்டாய் எனக் கூறிக் கொண்டு வெளியேறுகிறான் நளமகாராசன்.

*"என்றலும் முறுவலித்து, இசைக்கலாதன*
*ஒன்று நீ உரைத்திடல் உரங்கொள் தோளினாய்*
*வென்ற நின் வளநகர் மேவல் ஏன் எனாத்*
*துன்றுகா னகஞ்செலத் துணிதல் மேயினான்"*
[நைடதம்]

தான் பட்ட கேட்டுக்குத் தான் கானகம் போகலாம் என எண்ணி, மனைவியை அவளுடைய தந்தை வீட்டுக்குப் பிள்ளைகளோடு போகும்படி கேட்கிறான் நளன். "கலமகள் ஒருத்தி, இன்னொரு காதலனை பெற முடியுமோ?" எனக் கூறிப் பிரிந்து செல்ல மறுக்கிறாள் தமயந்தி. அதனால் பிள்ளைகளை அனுப்பிவிட்டுத் தாங்கள் இருவரும் கால் போன போக்கில் போகிறார்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

---



சிறுகதை

வீட்டுக்கு முன்னேயுள்ள வேப்ப மரத்தில் கூடு கட்டி இருந்த காக்கைக் குஞ்சுகளுக்கு காகம் ஒன்று ஏதோ தனக்குரிய மொழியில் கதைத்துக் கொண்டு இரை ஊட்டுகிறது.

நீண்ட நாள்கள் கூட்டப்படாது வேப்ப மரத்துச் சருகுகள் சொரிந்து கிடக்கின்றன. வேம்புக்குப் பக்கத்தில் உள்ள பலா மரத்தின் கிளைகளில் ஒரு அணில் மற்ற அணிலைத் துரத்துகிறது. அவை மகிழ்ச்சியுடன் கீச் கீச் என்று கத்திக் கொண்டு கிளை தாவிப் பாய்கின்றன.

இதில் ஒன்றையுமே செவிமடுக்காது தன் இரு கால்களையும் நீட்டிய படி கையிலே தனது பிய்ந்து போன சட்டையைத் தைப்பதற்கு ஊசியில் நூல் கோர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள் பொன்னம்மா ஆச்சி. ஆனால் பொன்னம்மா ஆச்சியின் கைநடுக்கமும் கண்பார்வைக் குறைவும் அவளது முயற்சியைத் தோல்வியுறச் செய்தன. இந்த முயற்சியின் பலன் தையல் ஊசியால் கையைக் குத்தியது தான் மிச்சம்.

"ஆ...ஆ... அந்தத் தையல் ஊசிக்குக் கூட என்னில இரக்கம் இல்லைப் போல... இப்படிக் குத்திப் போட்டுதே" எனத் தனக்குள்ளே கூறிக் கொண்டு கையைத் துடைத்தாள். பாவம் காய்ந்த உடலில் இரத்தம் தான் எங்கே!?

அருகில் உள்ள முருகனின் கனத்த காண்டாமணி ஓசை மெலிதாகக் காதில் கேட்கிறது. " அப்பு என்ர வேலா என்ர அஞ்சு குஞ்சுகளுக்கும் ஒரு தலையிடியும் இல்லாம வைச்சிரய்யா... என்ர கதிர்காமத்துக் கந்தா நல்லூரானே..." இது பொன்னம்மா ஆச்சியின் வாயிலிருந்து தினமும் வெளிப்படும் வார்த்தைகள்.

பொன்னம்மா ஆச்சி ஒவ்வொரு கணப்பொழுதும் தன்ர அஞ்சு பிள்ளைகளையும் நினைத்துப் பார்ப்பது உண்டு. ஆனால் அவர்கள்!!??

கடபுட என்று எலிகள் முகட்டில் ஓடி விளையாடும் சத்தம்தான் அங்கு பெரிதாகக் கேட்கின்றது. எலிகளின் இராட்சியம் தான் அந்த வீட்டில் இன்றும் மேலோங்கியுள்ளது.

தைப்பதற்குக் குந்தியிருந்த பொன்னம்மா ஆச்சிக்கு நாரி உளையத் தொடங்கவே தைப்பதற்கு எடுத்த சட்டையாலேயே தான் இருந்த இடத்தைத் தட்டி விட்டு கையைத் தலையணையாக வைத்துக் கொண்டு சாய்ந்து படுத்தாள்.

படுத்திருந்த படியே மெல்லத் தனது சிந்தனைகளை மீட்டுப் பார்க்கத் தொடங்கினாள். " ஐஞ்சு பிள்ளையளும் பிறந்து கலகலத்த வீடு இண்டைக்கு ஆர் அறிவார் என்று கிடக்கு. சின்ன வயசி லேயே என்ர புருசனும் சாக பத்து விரலும் பதறியடிச்சு இந்த வயல் வெயில் எல்லாம் காஞ்சு என்ர பிள்ளையளை வளர்த்து நல்லாக்க இண்டைக்கு நான் இருக்கிறதே மறந்து போச்சு துகள்... ம்... " என்று பெருமூச்சுடன் எழ முயன்றாள்.

தன் பிள்ளைகளின் நினைவு நெஞ்சைப் முட்டிக் கொண்டு வருமாப்போல ஒரு அந்தர நிலைக்கு வந்தாள். ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து கொஞ்சம் அரக்கிச் சுவரில் சாய்ந்தாள்.

"ம்...ம்... என்ரை பிள்ளையளிட்டை இருந்து ஒரு காயிதம் கூட வாறயில்லையே....! "அவையளும் ஒரே பிஸியாம்..." "என்ர அஞ்சு பிள்ளையளிலை எல்லாத்துக்கும் குணம் அச்சில வார்த்த மாதிரிப் போச்சே... எனக்கெண்டு ஒரு வயிறு இருக்கிறத எந்தப் பிள்ளை உணருது..."

" ஆத்தை பிச்சை எடுக்க மோன் அறுபத்து மூவருக்கு பூசை குடுத்த மாதிரி இருக்கு என்ர பாடு" அங்க ஒவ்வொரு கொண்டாட்டம் என்டா இஞ்ஞை கோயில் குளம் எல்லாம் தானம் வழங்குவினம். என்ர பெத்த வயிறு கொதிக்கிறது ஆருக்குத் தெரியும்...? எனத் தனக்குள் முணுமுணுத்தாள்.

ஊறாத்துறையில் சனங்களைக் கேட்டால் "பொன்னம்மா ஆச்சிக்கு என்ன? அஞ்சு பிள்ளையளும் பெரிய நாடு. ஆச்சிக்கு ஹலோ என்றால் கிலோவில வரும்..." இதுதான் அங்குள்ளோரின் நினைவு. பிள்ளையள் எல்லாம் வெளிநாடு எண்டதால ஆச்சிக்கு ஒரு அரச உதவியும் இல்லை.

பக்கத்து வீட்டு மங்களத்துக்கு மட்டும் தான் ஆச்சியின் உண்மையான நிலை தெரியும்.

மங்களம் சரியான ஏழை என்றாலும், கூலி வேலை செய்தும் மாவிடித்தும் பிழைப்பவள். என்றாலும் தனது தாய்க்காகவே வாழும் ஓர் ஜீவன். மங்களத்தின் தாய் தான் பொன்னம்மா ஆச்சியின் பேச்சுத்துணை.

(22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 16.10.2011 முதல் 22.10.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறும் நாள். உறவினர்கள், நண்பர்கள் சந்திப்பால், விருந்து, விசேடங்களால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில் ரீதியான அல்லது குடும்ப ரீதியான பிரச்சினைகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். சிறிய வேலைகளுக்கும் பல முறை அலைய நேரிடலாம். பணப் பற்றாக்குறையால் மற்றவர்களிடம் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உல்லாசமான செயற்பாடுகளால் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். தாய் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போவது மட்டுமின்றி, அவர்களால் சிரமங்களுக்கும் ஆள்படலாம். புதிய பொருள்கள் வாங்கலாம். கவனம் அவசியம்.

### இடபம்

திட்டமிட்ட காரியங்களை சிரமப்பட்டாவது முடிப்பீர்கள். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில வேலைகளைச் செய்வீர்கள். மனதிற்கு சந்தோஷம், உற்சாகம் தரும் அனுபவங்களை எதிர்கொள்ளலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். ஏதோ ஒரு விடயத்தை நினைத்து அடிக்கடி மனதைப் போட்டு குழப்பிக் கொள்வீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளுக்கு ஆளாகலாம்.வீட்டு உபயோகப் பொருள்களாலும் செலவுகள் ஏற்படும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தேவையில்லாமல் சில செலவுகளைச் செய்து, பற்றாக்குறை நிலைமைக்கு ஆள்படலாம்.

### மிதுனம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கும் நாள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் சில வேலைகளை நீங்கள் சுலபமாக முடிப்பீர்கள். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தாயார் வழியில் அன்புத் தொல்லைகள், அவரின் உடல் நலக்குறைவால் செலவு போன்றவற்றை எதிர்கொள்ளலாம். பண விவகாரங்களில் முன்னெரிக்கை அவசியம். சிலரிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்க நேரிடலாம். பெண்களால் நன்மை அடையலாம். குதர்க்கமான பேச்சுக்களாலும் மனஸ்தாபம் உருவாகலாம். செலவு, அலைச்சல் உண்டு. புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

### கடகம்

பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைத்து, சிரமங்களுக்கு ஆள்படலாம். தண்டச் செலவுகள் ஏற்படலாம். எதிர்பாராத சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சில பிரச்சினைகளை நினைத்துப் பயம் கொள்வீர்கள். நீண்ட தூரப் பயணங்கள் செல்ல நேரிடலாம். பெண்கள் வழியில் கிடைக்கும் உதவியால் சந்தோஷம் அடையலாம். தாய் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். எந்த விடயத்திலும் வேகமாகவும், ஆத்திரமாகவும் செயற்படாமல் நிதானமாகச் செயற்படுவது நல்லது. சகோதரர்கள் வழியில் எதிர்பாராத செலவு நேரும். அலைச்சல், உண்டு. அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை, தைரியம் குடிகொள்ளும்.

### சிங்கம்

விருந்து, விசேடங்களாலும், கேளிக்கை, கொண்டாட்டங்களாலும் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அலைக்கழிப்புகள் நேரும். திட்டமிட்டபடி வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மற்றவர்கள் செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கை அவசியம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. பெற்றோர் வழியில் எதிர்பாராத செலவுகள் நேரலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும். காரிய வெற்றி உண்டு. வீண் பேச்சுக்களால் அவதிப்படலாம். பணவரவுகளைப் பெறலாம்.

### கன்னி

எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சிலருடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர் ஒருவரைப் பார்க்கும் சூழ்நிலை உருவாகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை அடைவீர்கள். சகோதரிகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் சந்திப்பால் சந்தோஷம் அடைவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிலும், பொறுமை, நிதானம் அவசியம். வீண் செலவுகள் ஏற்படலாம். வேலைப்பளு அதிகரிக்கும். சோர்வு, சோம்பல் கூடும்.

### துலாம்

முக்கியமான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். உறவினர்கள் தொடர்பான சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். சிலருடன் சேர்ந்து வெளியூர் பயணங்கள் செல்லலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மதிப்பு, கௌரவம் மேம்படும். பிள்ளைகளின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சில வேலைகளை சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். அவநம்பிக்கை குறைந்து, தன்னம்பிக்கை அதிகரிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் நேரும். தந்தை வழியில் மருத்துவச் செலவுகள் தொடரலாம். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம்.

### விருச்சிகம்

தேவையற்ற அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். நீண்ட தூரப் பயணங்களால் சலிப்பு உண்டாகும். உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடிவடையாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். பிள்ளைகள் தொடர்பான சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்தலாம். அத்துடன் மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதி பெறுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். வீண் வாக்குவாதங்களால் விவகாரங்கள் உருவாகும். ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். பொழுது போக்கு விடயங்களால் கவலைகள் பறந்தோடும்.

### தனுசு

திட்டமிட்ட சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவங்களை எதிர் கொள்ளலாம். ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவுகள் மூலம் சில நன்மைகள் நடக்கலாம். பால்ய நண்பர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். எந்த வேலையையும் பிறகு எனத் தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். சகோதரர்கள், உறவினர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

### மகரம்

குடும்ப உறுப்பினர்களுடன் வாக்குவாதங்களில் ஈடுபடுவதால் மன அமைதி பாதிக்கப்படலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். நினைத்த காரியங்கள் நினைத்தபடி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்குச் செல்லலாம். பெண்கள் வழியில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பணவரவுகள் உண்டு. வீண் பிடிவாதங்களாலும் மனஸ்தாபம் உருவாகலாம். சகோதரர்கள் உங்களைப் பயன்படுத்தி காரியம் சாதிக்க முற்படுவர். தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். தேவையற்ற அலைச்சல்களுக்கு ஆள்படலாம். கடன் பிரச்சினைகளை, மன உளைச்சல்களைச் சந்திக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். திடீர் செலவுகள் நேரும். வீண் பயம் உண்டாகும்.

### கும்பம்

மனதில் உத்வேகம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க அலைந்து திரியலாம். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். சில நேரங்களில் விவகாரமாகப் பேசி மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். வழக்கு விவகாரங்களிலும் எச்சரிக்கை அவசியம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கிக் கொடுக்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம்.தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சகோதரர்களால் நன்மை அடையலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

### மீனம்

வீண் அலைச்சல்கள் உண்டாகும். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்யலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். பெண்களால் நன்மை கிடைக்கும். கை, கால்களில் அடிபடலாம் என்பதால் கவனம் அவசியம். எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது இழுத்தடிக்கும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகும். அடிக்கடி உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். ஓய்வு உறக்கம் இல்லாமல் அடிக்கடி பணியாற்றினாலும், அதற்கேற்ற பலன் கிடைப்பது கடினம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். நண்பர்களால் நன்மை அடையலாம்.வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். காரிய வெற்றி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்கள்

### உலகில் மிகச்சிறிய பூ



உலகில் மிகச் சிறிய மலராக வொல்பயா என்பது கருதப்படுகின்றது. இந்த வகைப் பூக்கள் குலை வடிவில் பூக்கும். இவை இலகுவாக வீழ்ந்து விடக் கூடியவையாக உள்ளன. இவற்றுள் சில வகை இனங்கள் உண்டு.

1.வொல்வியஸ் குலோபஸ்- இவை ஆசியப் பிராந்தியத்தில்உள்ளன.

2.வொல்வியஸ் அன்கஸ்றஸ்- இது இரண்டாவது சிறிய இனம் ஆகும். இவை ஆஸ்திரேலியாவில் காணப்படும். இதன் அளவு 0.6 மில்லிமீற்றர் ஆகும். அகலம் 0.3 மில்லி மீற்றர் ஆகும். நிறை மைக்ரோ கிராம் 50 ஆகும்.

### நீளமான பூ

மிக நீளமான பூவாகக் கருதப்படுவது மெக்சிகோவில் காணப்படும் மெகுவே என்ற மரத்தில் பூக்கும் பூவாகும்.

இதன் நீளம் 20 அடியாகும். அந்த மரத்தில் இவ்வாறு பூவொன்று பூப்பதற்கு 12 வருடங்கள் செல்கின்றன. அந்தப் பூ பூத்தபின் அந்த மரமும் பட்டுப்போய் விடும்.


### அதிகளவு பூக்கும் மலர்கள்



அதிகளவு பூக்களை ஒரே தடவையில் பூக்கும் தாவரமாக வைனீஸ் விக்டோரியா என்ற தாவரத்தில் பூக்கும் மலர்கள் கருதப் படுகின்றன.

இவை கலிபோர்னியாவில் சய்ரா மெய்டி என்ற பகுதியில் காணப்படும்.





சு.வனிக்ஷா, தரம் 5,
யா/செட்டித்தெரு
மெ.மி.த.க.பாடசாலை.



மா.மலரவன், தரம் 5,
யா/செட்டித்தெரு
மெ.மி.த.க.பாடசாலை.



வி.பிரசாத், தரம்8ஏ,
யா/ஆவரங்கால் நடராஜா
இராமலிங்க வித்தியாலயம்.



இ.தரணிதரன், தரம்04,
யா/செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை.

# பலவகை அறிவு



* ஓரறிவுள்ளவை- புல், மரம்
* ஈரறிவுள்ளவை- நத்தை, சிப்பி, சங்கு
* மூன்றறிவுள்ளவை-எறும்பு, கறையான்
* நான்கறிவுள்ளவை-தும்பு, வண்டு
* ஐந்தறிவுள்ளவை-மிருகங்கள், பறவைகள்
* ஆறறிவுள்ளவன்-மனிதன்

வி.லோகினி 10ஏ,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கன்
வித்தியாலயம்.

## விடை தெரியுமா? 129

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகின் முதலாவது பெண் தாதியர் யார்?
2.சர்வதேச விவசாய நாள் எது?
3.உலகில் மிகப்பெரிய காடு எது?
4.ஆஸ்திரேலியாவின் தலைநகரம் எது?
5.ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டு எது?

### விடைகள் 127

1. Micro phone
2. 44 ஆண்டுகள்
3.டெய்சி பூ
4.ஜோர்ஜ் எவரெஸ்ட்
5.18 பேர்

### வெற்றி பெற்றோர் விவரம்

★ ந.சுபாஜினி , தரம்-10ஏ, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
★ சூ.புவித்தா , தரம்-9டி, பருத்தி/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★ சூ.பிரியலக்ஷி , தரம்-7, பருத்தி/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
★ பா.யாழினி , தரம்-8கே, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
★ அ.தாயாசாமரி, தரம்-8பி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ இ.நிரோஜா, தரம்-9, உடுவில் மகளிர் கல்லூரி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 15.10.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

# விடிவுக்காகக் காத்திருந்த கிளி



ஒரு மரப்பொந்தில் ஒரு புத்திசாலித் தாய்க் கிளி வசித்து வந்தது. இந்தக் கிளி முட்டை இட்டு அடைகாத்து வந்தது. இந்தக் கிளி மிகவும் புத்திசாலிக் கிளியாகையால் கமலனும், விமலனும் இந்தக் கிளியைப் பிடிப்பதற்கு எவ்வளவோ முயற்சி எடுத்தும் அந்த முயற்சிகள் அவர்களுக்குப் பலனளிக்கவில்லை.

ஒவ்வொரு நாளும் கமலனும், விமலனும் அந்தக் கிளியைப் பிடிப்பதற்கு முயற்சி எடுக்கும் போதெல்லாம் இவர்களை ஏமாற்றி விட்டு புத்திசாலித் தாய்க் கிளி இரை தேடுவதற்கு சென்று விடும்.


எவ்வளவு புத்திசாலிக் கிளியாக இருந்தாலும் கமலனிடமும், விமலனிடமும் இருந்து எப்போது விடிவு கிடைக்கும் எனக் காத்திருந்தது.

ஓரிரு நாள்களில் முட்டைகள் குஞ்சானதும் கமலனிடமும், விமலனிடமும் இருந்து தப்பித்து அடுத்த கிராமத்துக்குச் செல்லலாம் என எண்ணியது. நாள்கள் கடந்தன. சூரியன் தனது பொற் கதிர்களை விரித்து உலகை அழ கூட்டிக் கொண்டிருக்கின்றான். புத்திசாலித் தாய்க் கிளியின் முட்டைகள் குஞ்சானது. சில நாள்களுக்குப் பின் அவை பறக்க ஆரம்பித்தன. வழக்கமாக கமலனும், விமலனும் கிளிகளைப் பிடிப்பதற்குப் புறப்பட்டனர்.

தாய்க்கிளி அவர்கள் வருவதைக் கண்டு தனது அருமைக் குஞ்சுகளுக்கு, ஓர் ஆபத்து எமக்கு வருகிறது என்று கூறியது. கமலனும், விமலனும் கிளிப் பொந்தருகில் வந்தனர். விடிவுக்காகக் காத்திருந்த கிளி வழக்கமாகவே அவர்களை ஏமாற்றி விட்டுக் குஞ்சுகளுடன் புறப்பட்டு அடுத்த கிராமத்துக்குச் சென்று கொண்டிருந்தது. கமலனும், விமலனும் ஏமாற்றத்தோடு வீடு திரும்பினர். அந்தக் கிளி மிகவும் மகிழ்ச்சியோடு அடுத்த கிராமத்துக்குச் சென்று தனது குஞ்சுகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தது.




# புத்தகம்



புத்தகமோர் வித்து
புகழை ஈட்டித் தரும் சொத்து
நல்லவனாய் ஆக்குகின்ற மனிதன்
நானிலமே போற்றுகின்ற புருசன்
தெவிட்டாத இன்பம் தரும் ஊற்று
அது தெரியாதோர் வருந்திடவே வாட்டும்
சரியான பாதையைக் காட்டும்
சத்துணவை மூளைக்கு கூட்டும்
அறியாமை இருளைப் போக்கி
அவனியிலே வாழ வழி காட்டும்
சிறப்புற்று விளங்கும் நூல்கள்
சிந்தனையாளராக்கிடும்
நாளைய உலகில்

# பொது அறிவு

1) விபுலானந்தர் இயற்றிய சிறந்த நூல் எது?
யாழ். நூல்
2) இலங்கையின் உயரமான அணைக்கட்டு எது?
விக்டோரியா
3) இலங்கையின் தேசபிதா யார்?
டி.எஸ். சேனாநாயக்க
4) உலகில் மிகச் சிறிய சுதந்திர நாடு எது?
வத்திக்கான்
5) விண்வெளியில் மிக நீண்ட நாள்கள் மிதந்தவர் யார்?
பஜ் ஆஸ்பிரில்
6) உடலை விட தலை பெரிதாக உள்ள உயிரினம் எது?
எறும்பு
7) விண்வெளிக்கு முதல் முதலில் சென்ற உயிரினம் எது?
லைக்கா என்ற நாய்
8) மிக வேகமாக வளரும் தாவரம் எது?
மூங்கில்
9) கடலில் செங்குத்தாக நின்ற படி பக்கவாட்டில் நீந்தும் பிராணி எது?
கடல் குதிரை
10) இரவு வேளையில் நடமாடாத பிராணி எது?
[illegible]



இ.ரஸ்மினி, தரம் 6 பி
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீணாகிப் போகாதே

"வீணை"யில் ஸ்ருதி போல்
வஞ்சகர்களின் சதி வலையில்
சேர்ந்திருக்கும் மறத் தமிழனே!
வஞ்கனின் வலையறுத்து
நீ வெளிவரும் நாள் எப்போ?

நல்லவன் போல் நடித்து
உன் தோள்களில் கை போடுவான்
நம்பி விடாதே
அணைக்கும் அவன் கரங்கள் தான்
நாளை உன் குரல்வளை நெரிக்கும்

"கொலைக்களம்" பார்த்து
கைகொட்டிச் சிரித்த மனிதன்
இரண்டடுக்கு மாளிகையில்
காவல் நாய்களின் நடுவில் கொலு
வீற்றிருக்கிறான்
வீணர்களுடன் வீரன் நீ கைகோர்ப்பதா?

பசுத்தோல் போர்த்திய புலி அல்ல இவர்கள்
பசுத்தோல் போர்த்திய குள்ளநரிக் கூட்டம்
மற்றவர் வயிற்றெரிவில்
குளிர் காயும் இவர்கள் தேகம்
கொலைகளுக்கு அஞ்சாத கொலைஞர்களின்
குரல்வளை நெரித்து நீ வெளியே வா?
சிங்கம் நோயில் வீழ்ந்தால்
எலிகள் அதன் மீது ஏறிப்பாயுமாம்
அதுபோல்தான் இவர்களின் நிலையும்
நாளை சிங்கம் வீறு கொண்டெழுந்தால்
எலிகளுடன் சேர்ந்து
எமலோகம் போகப்போவது நீயும்தான்



தமிழ்ச்சி,
ஊர்காவற்றுறை.



## வெள்ளை மலர்களின் பிள்ளைக் கனவுகள்

[அண்மையில் புலமைப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளது. வெட்டுப்புள்ளி அதிகரித்துள்ளதால் சித்தியடைய முடியாமல் பல பிஞ்சு உள்ளங்கள் வாடிப் போயுள்ளன அவர்களுக்காக....]

எம் இளம் கண்மணிகளே
நாளை எம் மண்ணின் தலைவர்களே
உங்கள் கண்கள் அழுது சிவந்துள்ளன
ஏக்கம் மூச்சுக் காற்றாய்ச் சுடுகின்றது
கவலை வேண்டாம்
நீங்கள் தோற்றவர்கள் அல்ல
துக்கம் தொலைத்து கண்விழித்தீர்கள்
புத்தகம் சுமந்து முதுகு நொந்தீர்கள்
பேனை பிடித்து பிஞ்சுக் கைகள் நொந்து
போனீர்கள்
விளையாடும் வயதில் நிலா பார்க்கக் கூட
நேரமில்லை உங்களுக்கு
தடை தாண்ட முடியாமல்
தளர்ந்து போனீர்கள்
உதவித் தொகை தருவதற்காக
உச்ச வரம்பை உயர்த்தி இருக்கிறார்கள்
வெற்றிப் புள்ளிகள் பெற்றும் கூட
விழ்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டீர்கள்
வெள்ளை மலர்களே உங்கள் பிள்ளைக்
கனவுகள்
சிதைந்து போனதா
புன்னகை சுமக்கும் பிஞ்சு முகங்கள்
சோகம் சுமந்ததா
வேதனை வேண்டாம்
நீங்கள் விழ்ந்தவர் அல்ல
பாடங்களில் நீங்கள் சித்தி
பரீட்சையில் மட்டும்தான் தோல்வி
அன்புத் தம்பி தங்கைகளே
இலட்சியம் இதுமட்டும் அல்ல
இலக்கு விரிந்து கிடக்கிறது
சிறிய பாடசாலைகளில்
பெரிய தலைவ்ர்களாய்
உருவாகி வருவீர்கள்
கலைஞராய் கல்விமானாய்
தேர்ந்து வந்து தேசம் நிமிர்த்துவீர்கள்
அன்புப் பெற்றோரே வெற்றிக் கம்பம்வரை
ஓடி வந்து களைத்திருக்கும்
இந்த வீரர்களின் கண்ணீர் துடையுங்கள்
சோகமுகத்தில் புன்னகை பூசுங்கள்
வெள்ளை மலர்களின் பிள்ளை
கனவுகள் பிஞ்சிலே வாடி விடக் கூடாது
ஒளி மிகுந்த உலகம் அவர்களுக்காக.....

- வேலணையூர் தாஸ்

## சபலம்



கயல்மீன் வாங்கி வரும்படி
காசெடுத்துத் தந்தாள்
என் கட்டிய மனைவி
கயல்மீன் வாங்க
கடைத்தெரு வந்தேன்
அப்பனே...
கயல்மீன் குவியலுடன்
காத்திருந்தாள்
கடைத்தெருவில் ஒரு சின்னஞ்சிறுக்கி
அவள் கண்களுக்குள்
துடித்துக் கொண்டிருந்தன
ஒரு சோடிக் கெழுத்தி
பரமசிவா...
கடற்கன்னிகள் கூட இப்போது
கடைத்தெரு வருகிறார்களா
கயல்மீன் விற்பதற்கு?
என்னையே மறந்தவன்
வாங்கிய கயல்மீன் பையுடன்
காலெடுத்து நடந்த போது
அவள் அழைத்தாள்
ஐயா... காசு
என் செவிகளிலும் பிழையா?
எனக்குக் கேட்டது
அத்தான் காசு

-புதுக்கவி



## சிசுக்கொலை

எந்தன் தாய் ஒரு
சுயநலக்காரி -
ஏனெனில்
தான் மட்டும்
இவ்வுலகில்
வாழ்ந்தால்
போதுமென
கருவறையில் உதித்த
என்னை!
கல்லறையில்
உதிர்ந்தாள்- என்
அன்னை!



கி.பு.கபில்ராஜ்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகமும் பகிரங்க வெறியாட்டமும்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

பிரிட்டன் அயர்லாந்தை ஆக்கிரமித்த காலப் பகுதியில் பாரம்பரியமாகத் தொன்மை வாய்ந்த கலாசாரத்துடன் வாழ்ந்த அந்த மக்கள் கடுமையாக எதிர்த்துப் போராடினர். ஆயிரக்கணக்கில் உயிர்ப்பலி கொள்ளப்பட்டபோதும் அவர்களின் போராட்டம் தொடர்ந்து முனைப்படைந்து வந்தது. அந்தப் போராட்டத்தை அடக்க, கொடிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த குற்றவாளிகளை அங்கு கொண்டு சென்று சகல வசதிகளும் வழங்கி ஆயுதபாணிகளாக்கிக் குடியேற்றியது பிரிட்டிஷ் அரசு. அவர்கள் பெண்கள், முதியோர், குழந்தைகள் எனப் பல ஆயிரக்கணக்கான அயர்லாந்து மக்களைக் கொன்று குவித்தனர். எங்கும் காடையரின் காட்டாட்சியே மேலோங்கி நின்றது.

ஆனால் ஐரிஷ் மக்களின் போராட்டத்தை அடக்கிவிட முடியவில்லை. சில காலம் பின்னடைவுகளுக்கு முகம் கொடுத்த போதிலும் ஐரிஷ் மக்கள் ஐ.ஆர். ஏ. என்ற விடுதலை அமைப்பின் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர். ''கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்லு'' என்ற கோஷத்துடன் களத்தில் இறங்கினர். 350 வருடங்கள் தொடர்ந்து போராடி எவ்வளவோ தியாகங்கள் மத்தியில் அயர்லாந்து விடுதலை பெற்றது.

### பச்சைப் புலிகளின் அட்டகாசங்கள்

அடக்குமுறையாளர்கள் சமூகக் குற்றவாளிகளைத் தங்கள் அராஜக நடவடிக்கைக்குப் பாவிப்பது இன்று வரை தொடர்ந்து வருகிறது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் ஜே.வி.பியின் போராட்டங்களை அடக்க பச்சைப் புலிகள் என்ற ஒரு பயங்கர அமைப்பு பயன்படுத்தப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் வீதி வீதியாகச் சிங்கள இளைஞர்களை வெட்டியும் சுட்டுக் கொன்றதையும் தலைகளை வெட்டி சந்திகளில் வைத்தமையையும் ஆறுகளில் பிரேதங்களை மிதக்கவிட்டமையையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த போது களனி ஆற்றில் தமிழர்களின் சடலங்கள் மிதக்க விடப்பட்டன. இந்த நிலைமை 1995 இற்குப் பின் இலங்கை அரசியலில் தீவிரமடைந்தது. முக்கிய அரசியல் பிரமுகர்கள் தங்களுக்கென பாதாள உலகக் கோஷ்டிகளை வைத்திருந்து குட்டி அரசுகள் நடத்துமளவுக்கு நிலைமைகள் மோசமடைந்தன. இந்தக் கோஷ்டிகளை வழி நடத்த ஏற்கனவே கொள்ளை, கூலிக்குக் கொலை, போதைவஸ்து, வர்த்தகம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இராணுவத்திலிருந்து ஓடி வந்தவர்களும் தாராளமாகக் களமிறக்கப்பட்டனர். இவர்கள் ஒரு துணை இராணுவக் குழுவாகவே இயங்கினர்.

அரசியல் கொலைகள், பழிவாங்கல்கள் ஆள்கடத்தல், கப்பம், அரசியல் பேரங்கள், மிரட்டல்கள் எனப் பலவிதமான தேவைகளுக்கும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

தென்னிலங்கையில் பாதாள உலகக் குழுக்களும் வடக்கு- கிழக்கில் அரச சார்பு முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்களும் இராணுவத்தினர், பொலிஸாரின் துணையுடன் செயற்பட்டு வந்தனர். விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற பேரில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து எமது மக்களை வீதி வீதியாகவும் வீட்டு முற்றங்களிலும் கொன்று போட்டவர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள்.

இப்படியான ஒரு புறச்சூழலில்தான் கொலன்னாவ தொகுதியின் முல்லேரியா பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கும் ஜனாதிபதியின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குமான பணிப்பாளருக்குமிடையே இடம்பெற்ற ஆயுத மோதலில் நால்வர் கொல்லப்பட்டனர். பத்துக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.



ஒரே கட்சியில் ஒரே சின்னத்தில் போட்டியிட்ட இருவருக்கிடையேதான் உயிர்ப்பலி கொண்ட இந்த மோதல் இடம்பெற்றது என்பது இலங்கையில் அரசு பற்றியும் அதன் ஆட்சியாளர்கள் பற்றியும் கேள்வி எழுப்புகிறது. இப்படியான மோதல்களின் அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு தேவையும் எழுகிறது.

### உச்சம் பெற்றுள்ள வன்முறைகள்

இந்த மோதல் தொடர்பாக மூத்த அரசியல்வாதியும் சிரேஷ்ட அமைச்சருமாகிய டியூ.குணசேகர கருத்து வெளியிட்டபோது ஓர் உண்மையை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். அதாவது அவர் பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடையவர்கள் அரசியலுக்கு வந்தால் இவ்வாறான கொடூரங்கள் அரங்கேறும் எனத் தெரிவித்திருந்தார்.

அவரின் கூற்றை உறுதிப்படுத்தும் வகையிலேயே மோதலின்போது இடம் பெற்ற சம்பவங்களும் அதன் பின்பு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

இந்த மோதல் இடம் பெற்ற போதும் அதன் பின்பு சில மணித்தியாலங்களும் அந்தப் பிரதேசம் ஒரு போர்க்களம் போல் காணப்பட்டதாகவும் மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் அவரது இரு மெய்ப் பாதுகாவலர்கள் ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்படுமளவுக்கும் பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடையுமளவுக்கும் வன்முறை உச்சம் பெற்றிருந்தது. அதுமட்டுமன்றி முல்லேரியா பகுதி முழுவதுமே பெரும் கொந்தளிப்பான நிலைமையும் காணப்பட்டது.

அன்று இரவு கொலன்னாவ பகுதியில் பொலிஸ் ஊரடங்கை அமுல்படுத்த வேண்டிய அளவுக்கும் இராணுவம் களமிறக்க வேண்டிய அளவுக்கும் நிலைமை மோசமாக இருந்துள்ளது. அது மட்டுமன்றி காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த ஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்கு பலத்த பொலிஸ் இராணுவப் பாதுகாப்பு வழங்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருந்தது. இதிலிருந்து நாம் நிலைமையின் மோசமான தன்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

### ஆயுதக் கோஷ்டியின் அப்பட்ட வன்முறைகள்

பொலிஸாரால் விடுக்கப்பட்ட, உடனடியான அமுலாகும் வகையிலான சில உத்தரவுகள் அங்கு நடந்த விடயங்களையும் அவற்றின் பின்னணியையும் ஊகிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

அதாவது முக்கிய பிரமுகர்கள் மெய்ப் பாதுகாவலர்கள் இனி பொலிஸ் சீருடை அணிந்து கடமையில் ஈடுபடவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரசியல் பிரமுகர்களின் வாகனங்களை ஆயுதம் தாங்கிய தனிநபர்கள் பயன்படுத்தப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து இதுவரை அரசியல் பிரமுகர்களின் வாகனங்கள், அவற்றுக்கு வழங்கப்படும் சலுகைகள் ஆயுதக் கோஷ்டிகளின் வன்முறை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் பட்டு வந்தன என்பதும் மெய்ப் பாது காவலர்கள் போன்று ஆயுதம் தாங்கிய தனிநபர்கள் அரசியல்வாதிகளுடன் சேர்ந்து திரிந்துள்ளனர் என்பதும் தெளிவாகவே தெரிய வருகிறது.

இன்னுமொரு வார்த்தையில் சொல்லப் போனால் பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் அரசியல்வாதிகளின் அடியாள்களாகவும் செல்லப் பிள்ளைகளாகவும் வன்முறைகளில் ஈடுபட்டு வந்தமையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இவை ஏற்கனவே மக்களால் அறியப்படாதவையல்ல. ஆனால் பொலிஸ் தரப்பின் உத்தரவுகள் மூலம் இவை உறுதிசெய்யப்பட்டுள்ளமை தான் இங்கு ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஏற்கனவே இந்தப் பாதாள உலகக் குழுக்கள் அரசுக்கு விரோதமான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்களைக் கொலை செய்வது கடத்திக் காணாமற் போகச் செய்வது போன்ற விடயங்களில் தாராளமாகவே பயன்படுத்தப்பட்டு வந்தன. சட்டம் இவர்களை நெருங்குவதில்லை. அப்படி இவர்கள் தவிர்க்க முடியாமல் கைது செய்யப்பட்டாலும் உடனடியாகவே பிணையில் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிடும்.

### பொலிஸார் முன்னிலையில் இடம்பெற்ற தாக்குதல்கள்

விலைவாசி உயர்வுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய போராட்டம் தாக்கப்பட்டமை, ஜே.வி.பி.மேற்கொண்ட மாணவர் போராட்டங்கள் மீதான தாக்குதல்கள், கட்டுநாயக்காவில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், சிரச ஊடக மையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் என்பனவற்றை இங்கே குறிப்பிடலாம். இந்தச் சம்பவங்களில் பொலிஸார் முன்னிலையிலேயே காடையர்கள் தாக்குதல்களைமேற்கொண்டனர் அல்லது பொலிஸாருடன் காடையர்களும் இணைந்து தாக்குதல்களை மேற்கொண் டனர்.

இதேபோன்று கொழும்பு புறநகர் பகுதியில் ஒரு கிறிஸ்தவ தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல், அனுராதபுரத்தில் 600 ஆண்டுகள் பழைமை வாய்ந்த முஸ்லிம் தர்க்கா இடிக்கப்பட்டமை, அமைச்சர் மேர்வின் சில்வா நடத்தும் அட்டகாசங்கள் இவை பற்றியெல்லாம் எவ்வித முறையான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய மர்மமனிதர்கள் பிரச்சினையிலும்கூட எந்த ஒரு மர்மனிதனும் கைது செய்யப்படவுமில்லை; தண்டிக்கப்படவுமில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் மர்ம மனிதர்களுக்கு எதிராகக் களத்தில் இறங்கிய பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; அடித்து நொருக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சியினருக்கு எதிராகவோ, ஊடகவியலாளர்களுக்கு எதிராகவோ பொதுமக்களுக்கு எதிராகவோ நடத்தப்படும் காடைத்தனங்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்படவில்லை. அனைத்தும் அரசியல் ரீதியாகவோ அல்லது இன, மதக் கண்ணோட்டத்திலோ அணுகப்பட்டன.

இன்னொரு விதத்தில் சொல்வதானால் சில குறிப்பிட்ட விடயங்களில் காடைத்தனங்களுக்கு மறைமுகமான அனுமதி வழங்கப்பட்டது போன்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும் வண்ணம் பல சம்பவங்கள் இடம்பெற்றன.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக எழுச்சிபெறும் தொழிலாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எதிராகப் பாவிக்கப்பட்ட இந்தப் பாதாள உலகக் கும்பல் இன்று ஆளுங்கட்சியினரே ஒருவரை ஒருவர் கொன்று தள்ளுமளவுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதம் அரசுக்கே தலையிடியாக மாறியதுடன் அரசு சார்ந்த அரசியல்வாதிகளையும் நோக்கிப் பாயத் தொடங்கிவிட்டது என்பதுதான் யதார்த்தம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒறிபிளேமின் வெற்றியில் பங்குதாரர் ஆகுங்கள்

ஒறிபிளேம் சுவீடனில் 1967 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. எமது எண்ணம் அதி நவீன விஞ்ஞான முறைகளை உபயோகித்து இயற்கை அடிப்படையிலாக அழகு சாதனங்களை உற்பத்தி செய்வதாகும். படிப்படியான உலகளாவிய பிரபல அழகுசாதன உற்பத்தி நிறுவனமாக நாம் வளர்ந்துள்ளது. 62 இற்கும் மேற்பட்ட நாடுகளில்1.3 பில்லியன் யூரோ (வருடாந்த ரூபா 13 பில்லியனுக்கும்அதிகம்) பெறுமதியான வருடாந்த விற்பனை இடம்பெறுகிறது. உயர்தரம் கொண்ட உற்பத்திப் பொருள்கள் 3 மில்லியனுக்கு அதிகமான ஒறிபிளேம் ஆலோசகர்களைக் கொண்ட குழு மூலம் சந்தைப்படுத்துகிறது.

இது தொடர்பாக திருமதி வித்தியா நிரஞ்சன் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் 1997 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் பணம் சம்பாதிக்கும் 17,000 பேரைக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த குழுவாகும். கொழும்பு பிரதான ஒறிபிளேம் அலுவலகத்துக்கு மேலதிகமாக கண்டி, காலி, கம்பஹா ஆகிய இடங்களிலும் சேவைகளை வழங்கி வருகிறது. தற்போது வடக்குப் பிரதேசத்துக்கு தமது சேவைகளை விஸ்தரித்துள்ள ஒறிபிளேம் கடந்த 2010 ஒக்ரோபர் மாதம் தனது 5 ஆவது கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவி வெற்றிகரமாக ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்துள்ளதோடு மாதாந்தம் 2 மில்லியன் பெறுமதியான விற்பனை இடம் பெற்று மேலும் முன்னேற்றம் கண்டு வருகிறது.

இந்தக் குறுகிய காலத்துக்குள் 1000 இற்கும் மேற்பட்ட யாழ்ப்பாண மக்கள் எம்முடன்


திருமதி வித்தியா நிரஞ்சன்

இணைந்து கனவுகளை நிறைவேற்றியதோடு, மேலதிக வருமானமாக ஆகக்குறைந்தது ரூபா 10,000 மாதாந்தம் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**ஒறிபிளேமுடன் இணைந்து கொள்ள பிரதான மூன்றுகாரணிகள் உள்ளன.**

**அழகாகத் திகழ.**

சகல தேவைகளுக்கும் பொருத்தமான பல தரப்பட்ட உயர்தர அழகு சாதனங்களை நாம் வழங்குவது நீங்கள் பெருமிதமடைய பெரிதும் உதவும். அதுமட்டுமன்றி அழகு சம்பந்தப்பட்ட தீராத பிரச்சினைகளுக்கு ஒரு சிறந்த தீர்வாக அமையும். அதிநவீன விஞ்ஞான முறைகளை உபயோகித்து இயற்கை அடிப்படையில் எமது அழகு சாதனங்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் 44 வருடத்துக்கும் மேற்பட்ட அனுபவம் உள்ளது.

**பணம் சம்பாதிக்க**

நீங்கள் இணைந்து கொள்ளும் அதே தினத்திலிருந்து பணத்தைச் சம்பாதிப்பீர்கள். உங்களது சம்பாத்தியத்துக்கு வரையறை இல்லை. பொழுதுபோக்கு நேரத்தில் வரையறை அற்ற வருமானம் உழைக்கலாம். எவ்வளவு ரூபா சம்பாதிக்க வேண்டும் என்பதை உங்களது வாழ்க்கைமுறைக்கு அது பொருத்தமானது என்பதையும் நீங்களே தீர்மானிப்பீர்கள்.

**சந்தோசம் அடைய**

இந்த நிறுவனத்தில் இணைவதன் மூலம் புதியமக்களைச் சந்தித்து புதிய நண்பர்களை உருவாக்கலாம். கருத்தரங்குகளில் பங்குபற்றி உலக நாடுகளுக்கு இலவச பிரயாணத்தை மேற்கொள்ளலாம். விற்பனை, அழகியல் சம்பந்தமான முன்னைய திறமைகள் எதுவும் தேவைப்படமாட்டாது. நாங்கள் உங்களுக்குப் பயிற்சி அளிப்போம்.

யாழ்ப்பாண மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் ஆண்/ பெண் எவராயினும் ஒறிபிளேமில் இணைந்து மேலதிக வருமானம் உழைத்து எதிர்கால உங்கள் கனவுகளை நனவாக்குங்கள். (த)


சம்பத் வங்கி சுன்னாகம் கிளையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான சேமிப்புக் கணக்கினைப் பேணிவரும் 25 வாடிக்கையாளர்களுக்கு இலவச மருத்துவ பண வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது. 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பண வவுச்சரினை ச.கணேசலிங்கம் என்பவருக்கு கிளை முகாமையாளர் வழங்குகின்றார். (த)

# ஹற்றன் நஷனல் வங்கியின் சேவை நிலையம் கொடிகாமத்தில்

கொடிகாமத்தில் கடந்த 10ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி வங்கியின் நிறைவேற்று அதிகாரி ஆர். தியாகராசா பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு கிளையைத் திறந்து வைத்தார்.

ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் கொடிகாமம் பஸ் நிலையத்தில் இருந்து மேளதாளத்துடன் வங்கி நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டனர். வரவேற்பு நடனம் வரணி மகா வித்தியாலய மாணவியரால் நிகழ்த்தப்பட்டது. இந்த நிகழ்வில் மேற்படி வங்கியின் மனிதவள முகாமையாளர் எஸ். பாய்வாவும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வங்கியின் கொடிகாமம் கிளை முகாமையாளர் எஸ்.மயூரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. மந்துவில் கிழக்கு பிரதேசத்தை சேர்ந்த விவசாயி ஒருவருக்கு விவசாயக் கடன் உதவியும் மாற்று வலு உள்ள முத்து. செல்லர் என்பவருக்கு சக்கர நாற்காலி ஒன்றும் மேலும் எஸ்.நாகராசா என்பவருக்கு கடன் அட்டையும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் வர்த்தக சங்க பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரதேச பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேற்படி வங்கியினால் வரணி மகா வித்தியாலத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டன. (த-122-207)

# பாடசாலை மாணவர் ஒருவர் CIMA பயில முடியுமா

CIMA பாடநெறியானது சிறப்பாக முகாமைத்துவக் கணக்கீடு தொடர்பாகத் தொழில்சார் தகைமையை வழங்குகின்ற ஒரு பாடநெறியாகும்.இத் தொழில்சார் தகைமையை வழங்குகின்ற ஒரு பாடநெறியாகும்.இத் தொழில்சார் தகைமையானது பரித்தானியாவின் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவனத்தால் (Charted Institute Of Management Accounts) வழங்கப்படுவதோடு இது இலங்கையைப் போன்று பல்வேறு நாடுகளிலும் விசேடமாகவும் சிறப்பாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.உலகின் அரச மற்றும் தனியார்,அரச சார்பற்ற பல நிறுவனங்களின் பல துறைகளில் உயர் வேலை வாய்ப்பு மட்டத்தைப் பெறுவோரிடையில் காணப்படும் பிரதான தொழில்சார் தகைமையாக இது காணப்படுகின்றது.


பதினாறு வயது தொடங்கியே CIMA கற்பதற்கும் CIMA பரீட்சையில் தோற்றுவதற்கும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.CIMA பாடநெறியின் முதலாவது அலகில் ஐந்து பாடங்கள் காணப்படுவதோடு, இது வியாபாரக் கணக்கீட்டுச்

CIMA
Chartered Institute of Management Accountants

சான்றிதழில் CBA-முறையிலான பரீட்சையாகும்.இது வணிக பாடப் பரப்பினை கற்றவரொருவருக்கு இலகுவாக முகம் கொடுக்கக் கூடிய ஒரு பரீட்சையாகவே அமைகின்றது. உயர்தர வணிகப் பிரிவில் கற்கின்ற மூன்று பாட அலகுகளுக்கு மேலதிகமாக ''Fundamental of Business Mathematics''Fundamental of Ethics,-Corporate Governance and Business Ethics'' ஆகிய இரண்டு புதிய இலகுவான பாடங்கள் மிக இலகுவான விளக்கங்களோடு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.


ஆக்வே உயர்தரத்தில் நாம் பெற்றுக் கொண்ட அறிவை வைத்துக் கொண்டு CBA பயில ஆரம்பிப்பது மிக இலகுவானது என்பதோடு சாதாரண ஆங்கில அறிவு காணப்படுவது ஓர் அடிப்படைத் தேவையாகும்.முதலாவது கட்ட CBA முறையிலான பரீட்சையை முகம்கொடுக்க ஆறு மாத காலம் போதுமானதாகின்றது. அத்தோடு இப்பாடநெறியின் அடுத்த பாடங்களை இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியும்.இப்பாட நெறியை முழுவதுமாகப் பூர்த்தி செய்வதனூடாக எதிர்காலத்துக்குத் தேவையான ஒரு முகாமைக் கணக்காளராக உங்களை உருவாக்கிக் கொள்ளமுடியுமென்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.க.பொ.த(சா/த)பெறுபேறுகள் வெளியான உடனேயே CIMA இன் இறுதிக் கட்ட பரீட்சைகளை நெருங்கிய ஒருமாணவராக இருப்பதோடு ஜி.சீ.ஈ(உ/த)இல் நீங்கள் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக்கொண்டாலும் அது ஒரு வரலாற்று ரீதியாக இருப்பதோடு நீங்கள் சாதாரன தரத்திலேயே CIMA பயில தொடங்கியிருப்பின் உங்களது உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளுடன் CIMA யையும் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும். (த)


கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தினால் யாழ். நக்கா வீதியில் அமைந்துள்ள எஸ்.ஓ.எஸ். சிறுவர் இல்லத்துக்கு ஒரு தொகுதி கணினி மற்றும் உபகரணங்கள் நிதி உதவிகளும் வழங்கப்பட்டதை அடுத்து அண்மையில் கணினி அறை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பி.ரஜீவன், முகாமையாளர் க.விவேகானந்தராசா, சிரேஷ்ட முகாமையாளர் இ.குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு கணினிகளைக் கையளித்தனர். (த-313)


சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் கீழ் இயங்கும் தையல் கலைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் 33 மாணவர்களுக்கு அவர்களின் தையற் பயிற்சிக்குத் தேவையான பொருள்கள் AAA Ventures (pvc) Ltd, UR Friend Foundation நிறுவனத்தலைவர் க.செல்வேள் வழங்குகிறார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவ முதிர்ச்சி கொண்ட இசையாசான் அளவெட்டி வி.கே.நடராசா



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 14

நாண் கலைகளைப் பல வகையாக எம் முன்னோர் வகைப்படுத்தியுள்ள போதும் அவற்றுள் குரலிசை என்பது தனித்துவமானதாகவே கணிக்கப் படுகின்றது.

பாடல்களின் செற்களைத் தெளிவாகவும் உணர்வு பூர்வமாகவும் இனிமையுடன் வெளிப்படுத்தக் கூடிய கருவியாகக் குரல் இருப்பதால் இத்தகு பெருமை கொண்டதாக அது விளங்குகின்றது.

ஈழத்தின் குரலிசையாளர் வரிசையில் இன்று வரை பலர் சாதனை படைத்து வருகின்றனர். இவர்களுள் ஏராளமான மாணவர்களை உருவாக்கிய சிறந்த இசை ஆசிரியராகவும் ஆற்றுகையாளராகவும் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இசைப்பணி புரிந்து வருபவர் சங்கீதபூஷணம்.வி.கே.நடராசா.

அமரர்களான வைரவிப்பிள்ளை கந்தையா - பார்வதி தம்பதிகளின் மகனாக 12.09.1938 இல் அளவெட்டியில் இவர் பிறந்தார். நாதஸ்வர, தவில் ஓசையானது இனிமையுடன் தினமும் கேட்டுக் கொண்டிருக்கும் இவ்வூரில் இவரது இசைக் கல்வியானது சிறு வயதிலிருந்தே தொடங்கி ஏற்றம் கண்டது. அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் கல்விகற்ற இவர் அக்காலத்தில் ஈழத்தில் தங்கியிருந்த இசைக் கலைஞரான வேதாரணியம் மறைக்காட தேசிகரிடம் திருமுறையைக் கற்றுக்கொண்டார். அத்துடன் ஆர்.மூர்த்திஐயர், உடுவில் என்.சண்முகரத்தினம், ஏ.ஜி.ஐயாக்கண்ணு தேசிகர் ஆகியோரிடமும் செவ்விசையின் நுட்பங்களைத் தெரிந்து கொண்டார்.

தனது இசைக் கல்வியை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்காக 1958இல் தமிழகத்தின் ஆண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று நான்கு ஆண்டுகள் குரலிசையைக் கற்று சங்கீதபூஷணம் என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இக்காலத்தில் இசையரசு.எம்.எம்.தண்டபாணி தேசிகர், டி.கே.ரங்காச்சாரியார், மன்னார் குடி ராஜகோபால்பிள்ளை, வஜ்ரவேல் முதலியார், திருப்பாம்புரம் சிவசுப்பரமணியபிள்ளை போன்ற வாய்ப்பாட்டு மேதைகளிடம் மரபு வழி இசையைத் தெளிவுறக் கற்றுக் கொண்டதுடன் இவர்களின் வழிநடத்தலில் ஏராளமான இசைக் கச்சேரிகளையும் தமிழகத்தில் நிகழ்த்தி வந்தார்.

1962இல் சிறந்த பாடகராக தாய்நிலத்தில் கால் பதித்த இவர் அதே ஆண்டின் ஆவணிச் சதுர்த்தியன்று தனது இசை அரங்கேற்றத்தைச் செவ்வனே நிகழ்த்திப் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டார். அதன் பின் அளவை. இசைக்கலை மன்றத்தைத் தொடக்கி அதன்மூலம் இசைக் கல்வியை அனைவரும் பெறுவதற்கு வழி செய்தார்.

இவ்வாறு நான்கு ஆண்டுகள் தனிப்பட்ட இசை வகுப்புக்களின் ஊடாக இசைப் பணியாற்றிவந்த இவர் 1966இல் இசை ஆசிரியராக அரச நியமனம் பெற்று பண்டைத்தரிப்பு இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்து மஹாவித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம் போன்ற பல பாடசாலைகளில் பணிபுரிந்து 1991இல் ஆசிரிய அலோசகராகவும் கடமையாற்றி 1998இல் ஓய்வு பெற்றார்.

ஆசிரியப் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவரது மாணவர்கள் பலர் இசை அறிஞர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் கண்டுள்ளனர். அத்துடன் இவரால் உருவாக்கப்பட்ட அளவை. இசைக்கலை மன்றத்தில் பயின்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இசை ஆசிரியர்களாகவும் ஆசிரிய ஆலோசகர்களாகவும் ஈழத்தின் பல பாகங்களிலும் பணிபுரிந்து வருகின்றமையும் இவர்களில் பலர் ஆற்றுகையாளர்களாகக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கவை.

தனது இசை அரங்குகளில் வரன் முறை தவறாத தமிழிசைக்கு முக்கியத்துவம் கொடுத்துவரும் இவர் அனைத்து விதமான இசை உருப்படிகளையும் பாடாந்தரம் வழுவாமல் பாடுவதிலும் அவற்றைக் கற்பிப்பதிலும் வல்லவர். இவ்வாறு சிறந்த இசை ஆசிரியராகவும் ஆற்றுகையாளராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட இவர் யாழ்.பல்கலைக் கழக இசைத்துறையின் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் பல ஆண்டுகளாகக் கடமையாற்றியதுடன் வடஇலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைகளிலும் தனது பங்களிப்புகளை இன்றுவரை வழங்கி வருகின்றார்.

பலவிதமான பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுக்கொண்ட இவர் இலங்கையின் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் இசைக் கச்சேரிகளை வழங்கி வருவதுடன் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்றுவரும் இசைவிழாக்கள், கலாச்சார விழாக்கள் போன்ற நிகழ்வுகளிலும் முது கலைஞராக அழைக்கப்பட்டு வருகின்றார். சந்நிதி வசந்தம், அருட்கவி.சி. வினாசித்தம்பியின் திருப்புகழ்ப் பாமாலை, நாகவரதநாராயணர் திருப்பள்ளி எழுச்சி, கும்பழாவளை பிள்ளையார் திருப்பள்ளி எழுச்சி போன்ற இறுவட்டுக்களில் குரலிசை வழங்கியுள்ளதுடன் இன்றுவரை தனது இல்லத்தில் இசை வகுப்புக்களை நடத்தியும் வருகின்றார். அத்துடன் புலம்பெயர் நாடுகளுக்கும் சென்று இசைப் பணிபுரிந்த ஒருவராகவும் இவர் காணப்படுகின்றார்.

இவ்வுலகில் ஆறறிவு கொண்ட மனிதனில் இருந்து சில அறிவைக் கொண்ட உயிரினங்கள் வரையான அனைத்தையும் மகிழ்விக்கக் கூடிய ஒன்றாக மரபு வழி இசைக் கலையானது விளங்குகின்றது. இவ்விசைக் கலையின் உயிராக விளங்குபவை இசைப் பாடல்களாகும். இவை சங்கதிகள் நிறைந்தனவாகவும்சாகித்யநுட்பங்கள்கொண்டவையாகவும் லய வேலைப்பாடுகளால் பின்னப்பட்டவையாகவும் இராக பாவம் ஊற்றெடுப்பவையாகவும் அமைந்திருக்கும். இவ்வாறான நுட்பங்கள் கொண்டமைந்த இசை உருப்படிகளைக் கற்பிக்கும் போது இசையாசிரியர், பொறுமையோடும் நிதானத்தோடும் அன்போடும் மாணவர்களை வழிநடத்த வேண்டும்.

எழுதப்பட்ட தாள்களில் இருக்கும் பாடல்கள் மாணவர்களுக்கு மனப்பாடமாக வரும் வரைக்கும் சலிப்பின்றிக் கற்பிப்பதே இசையாசிரியருக்கு அழகாகும். இவ்வாறு கல்பத உருப்படிகளைச் சரியான முறையில் கற்பித்தால் மனோதர்ம சங்கீதத்தை மாணவர்கள் இலகுவாக அறிந்து கொள்வதுடன் தம்மை ஆற்றுகைத் திறனாளிகளாகவும் வளர்த்துக் கொள்வர். இதற்கான கால அவகாசத்தை ஆசிரியரோ மாணவரோ தீர்மானிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுதல் சிறந்ததாகும். கற்றுக்கொண்ட இசைப் பாடல்கள் மனதினுள் ஆழமாகப் பதிந்து, கனிந்து வரும்வரை இரு சாராரும் பொறுமையாக இருந்து அதன் பின்னர் ஆற்றுகைப்படுத்துவதே சிறந்ததாகும்.

ஆனால் தற்காலத்து உயர் நிறுவனங்களில் சில மணித்தியாலங்களில் பல கீர்த்தனைகளை மாணவர்களுக்குத் திணித்து விட முயல்கின்றமையும் சங்கதிகளைத் தமது வசதிக்கேற்ப மாற்றியமைத்து கீர்த்தனைகளின் வடிவத்தை சிதைத்து விடுவதும் கவலை தருவனவாக உள்ளன என்று இவர் கூறுகின்றார். *

**வசாவிளான் தவமைந்தன்**

# அடிபட்ட வீக்கங்களுக்குச் சிறந்தது காஞ்சிமர இலை

**காஞ்சி மரம்**

**வேறுபெயர்- ஆற்றுப்பூவரசு,திடம்பி**
**தாவரவியற் பெயர்-** Trewia nudiflora
**(றிவியா நுடிபுளோரா)**
**குடும்பம் -** Euphorbiaceae **(யூபோபியேசியே)**
**சமஸ்கிருதப் பெயர் - பேடரி**

பண்டைத் தமிழர் தம் யுத்தக் களத்தில் எதிரிகளைத் தாக்கிப் போர் புரியுங்கால் சூடிக்கொள்ளும் மலர் காஞ்சி மலராகும். அதன் காரணமாக உருவானதே காஞ்சித் திணையாகும். அத்தகு சிறப்பு மிக்க காஞ்சியானது சிறு மரவகுப்புக்குரியதாகும். அதிகமாக நீர்நிலைகளுக்கு அருகில் காணப்படும் தனி இலைகள் இதய வடிவானவை, எதிரான இலை ஒழுங்கு, பூக்கள் கொத்துக் கொத்தாகக் காணப்படும். பூக்கள் நீல நிறமானவை. இதன் இலைகளை ஆமணக்கெண்ணெய் தடவி இலேசாக வாட்டி அடிபட்ட வீக்கங்களின் மீது கட்டிவர வீக்கம், வலி என்பன தணிவடையும். வேர்ப்பட்டையை இடித்துத் தூளாக்கி மஞ்சள் மா, நல்லெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் கொதிப்பித்து மூட்டுவாத வீக்கங்களின் மீது வைத்துக் கட்டிவர வீக்கம் வற்றும். வேதனையும் குறையும்.




## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**பிரம்பு**

**வேறுபெயர்- சூரல், வேத்திரம், சாதிக்கிழங்கு**
**தாவரவியற் பெயர்-** Calamus rotang
**(கலமஸ் ரோடங்)**
**குடும்பம் -** Palmae **(பாமே)**
**சிங்களப் பெயர்- வேவெல்**
**சமஸ்கிருதப் பெயர் -வேத்ரக**
**ஆங்கிலப்பெயர்-** Cane palm

''விரிமலர் ஆவிரை வேரல் சூரல்'' என்று குறிஞ்சிப் பாட்டிலே குறிப்பிடப்படும் சூரல் என்பது பிரம்பைக் குறிக்கின்றது. இதில் சிறு சூலர் (சிறுபிரம்பு), பெருஞ்சூரல் (பெருபிரம்பு) என்று இரண்டு வகையுண்டு. பிரம்பு கொடிவகுப்புக் குரியது. நீண்டு வளரும் தண்டில் முட்கள் உள்ளன. தனிச்சிறைப்பிரியமான கூட்டிலைகள் பிளவுபட்டுக் காணப்படும். பூக்கள் மஞ்சரியில் உருவாகும்.



இதன் வேர்பிரப்பங்கிழங்கு எனப்படும். இதுவே மருத்துவத்தில் பயன்படுகிறது.

பிரப்பங்கிழங்கைக் குடிநீர் செய்து 15-30 மி.லீ. அளவில் காலை,மாலை பருகிவர பல்வலி, பல்லாட்டம், கீல்பிடிப்பு என்பன நீங்கும். கிழங்கை உலர்த்தி பொடி செய்து 1-2 கிராம் அளவில் தேன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தாலும் இந்த நோய்கள் மாறும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 184

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| 9 | | | 10 | | | | |
| | 11 | 12 | | | | 13 | |
| 14 | | | | | 15 | | 16 |
| | | 17 | | 18 | | | |
| 19 | 20 | | | 21 | | 22 | |
| 23 | | | 24 | | | 25 | |

அனுப்புபவர் பெயர்:.............................................

விலாசம்:.............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. தேவரின் உணவு.
4. காலம் தாழ்த்து
7. திரணை
8. பரந்த
9. விழி
10. மரத்திலும் இருக்கும்- சந்தையிலும் இருக்கும்
11. மாயம் செய்தல்
14. ஒன்றின்மேல் ஒன்று
15. தலை நனைத்து ஸ்நானம் செய்
17. பழுத்தல்
19. தாய விளையாட்டில் ஓர் அங்கம்
21. உயர்ந்து செல்வதால் மக்களுக்குச் சுமை
23. தலையில் எழுதப்பட்டது.
24. வீடு
25. முற்காலத்தில் போருக்குரியது.

### மேலிருந்து கீழ்

1. கூடுதலாக
2. வேறுபாடு
3. கட்டு
4. விடாய்
5. நிலத்தை நிறைப்பது
6. களம்
8. சுந்தரம்
10. ஒரு மாதம்
12. கழிவு நீர் வாய்க்கால்
13. அணி
14. சுகபோகம் துய்த்தல்
15. காடும் காடு சார்ந்த இடமும்
16. பெருமையில் சிறந்தன்
18. திருவிழாவில் சிறப்புத் தருவது
20. வேகம்
22. பெரிய நீர்த்தேக்கம்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 182 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) நிம்மதி (4) அமைதி (6) குறத்தி (7) வாதாடல் (9) காதம் (11) கிராம் (12) வரம்பு (13) அடம் (14) அம்பலம் (16) அல் (17) கும் (18) வரி (19) புவி (20) புள்ளிமான்.

### மேலிருந்து கீழ்

(1) நிர்வாகி (2) மகுடம் (3) திறல் (4) அதிகாரம் (5) திரும்புதல் (8) தாராளம் (10) தம் (12) வடம் (13) அலம் (14) அம்பு (15) பகு (16) அரிமா (18) வளி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 182 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** திருமதி எ.மாகிறற், இல.140, புனித செபஸ்தியார் வீதி, பெரியகடை, மன்னார்.

**2 ஆம் பரிசு** அ.ஜெகதீஸ்வரன், வலந்தலை, காரைநகர்.

**3 ஆம் பரிசு** இ.மகேஸ்வரி, வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு.

**4 ஆம் பரிசு** செல்வி. பி. பிரியங்கா, யா/ வசாவிளான், ம.ம.வி, வசாவிளான்.

**5 ஆம் பரிசு** ப.சிவசூரியா, மே/பா, வெ.கந்தசாமி D - 4. மருதநகர், றொட்ரிக்கா வீதி, கிளிநொச்சி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

*சொற்சிலம்பம்போட்டி - 184*
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 26.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.184 இற்கான விடைகள் 30-10-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### பாராட்டுப் பெறுவோர்

**திருமதி தி.சிதம்பரநாதன்,**
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**செல்வி.வி.பொ.சிவகாமி,**
இலக்குமிபதி, சங்கானை.

**திருமதி ஜெ.தவராசா,**
இல.101, ஓட்டுமடம் வீதி, வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

# இலக்கியத்துக்கு...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனீஸ்வரன் பற்றினால் தொடர்ந்து தீமைகள் நிகழும் என்பார்கள். போகும் வழியிலே கலி, பறவை வடிவில் வந்து பழி தீர்க்கிறது!

*தேன்பிடிக்கும் தண் துளாய்ச் செங்கண் கருமுகிலை*
*மான்பிடிக்கச் சொன்ன மயிலே போல் -தான் பிடிக்கப்*
*பொற் புள்ளைப் பற்றித்தா என்றாள் புதுமழலைச்*
*சொற்கிள்ளை வாயாள் தொழுது [நளபெண்பா]*

இராமனை, அன்று மாயமானைப் பிடித்துத் தரும்படி கேட்ட சீதையைப் போல தான் வைத்து விளையாட மாயப் பொன் பறவையைப் பிடித்துத் தரும்படி கேட்கிறாள் தமயந்தி. (இதனால் இராமா யணம் நளன் கதைக்கும் முந்தியது என்பது கவனிக்கத்தக்கது). காதலியின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக (உடுத்த துணியோடு புறப்பட்டு வந்த இவர்களிடம் மேலதிகமாக எதுவும் இருக்கவில்லை) ஒருவர் துகிலை இருவரும் கட்டிக் கொண்டு, மற்றவர் துகிலை வலையாகப் பாவித்துப் பறவையைப் பிடிக்க முயன்றபோது அத்துகிலோடு பறந்து சென்றது பறவை! இதனைப் பெரிதுபடுத்தாமல் பயணம் தொடர்கிறது. மாலை நேரம் வனப்பகுதி யில் பாழ்மண்டபம் தென்படு கிறது.

இரவுப் பொழுதை அந்த மண்டபத்துள் கழித்தனர். அப்போது தமயந்தியைப் பிரிந்து செல்ல முடிவெ டுத்த நளனுக்கு ஒரே துகில் இடையூறாய் அமைகிறது. கலி அங்கே கத்தியாய் கிடக்கிறது! இதனால் மகிழ்ச்சியடைந்த மன்னன்.

*ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக*
*முற்றுந்தன் அன்பை முதலோடும்-பற்றி*
*அரிந்தான் அரிந்திட்டு அவள் நிலைமை நெஞ்சில்*
*தெரிந்தான் இருந்தான் திகைத்து [நளவெண்பா]*

தமக்கு ஒன்றாயிருந்த துகில், உயிர் கடல் அலை எழுந்து விழுவது கண்டு நீயும் அன்புத் தளை மூன்றையுமே அரிந்தான் என்கிறார் புகழேந்தியார்.

பிரிய மனமில்லாமல் வனதேவதைகளை வேண் டிப் பிரிந்து போய்விடுகிறான் நளன். அவன் காதலி யைப் பிரிந்தது பெரும் தவறு. அவனது மனச்சாட்சி உறுத்து கிறது.

அதனால், கடற்கரையில் ஓடி ஒளிந்த நண்டைப் பார்த்து, காதல் மனையாளைப் பிரிந்த என்னைப் பார்க்கக் கூடாதென்றோ ஓடி மறைகின்றாய். அல்லது உன் காதலியை இரவு பிரிந்து அலைகிறாயோ என்கி றான். வழியில் கணவனால் கைவிடப்பட்ட தமயந்தி; கணவனைத் தேடியும் காணாது உண்மை உணர்ந்து ஊர்ப்பக்கமாகப் போய் சேதி நாட்டை அடைந்தாள். அவ்வூர் அரசனின் உதவியால் தனது தந்தையிடம் சென்றுவிடுகிறாள். அங்கிருந்து தனது காதலனைத் தேடிக் கொண்டிருக்கிறாள்.

காதலியைப் பிரிந்த நளன் ஒரு பாம்பினால் கடியுண்டு உடல் வாகு குறைந்து (வாகுகன்-குறள் மனிதன்) வாகுகன் ஆகிறான்.

(தொடரும்)

# ஆச்சி..

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மங்களம் வயலில் வேலை செய்துவிட்டு பக்கத்து தோட்டக்காரர் கொடுத்த மரவள்ளிக் கிழங்குடனும் மற்றக்கையில் புல்லுக் கட்டுடனும் வரும் போது ஆச்சியின் படலையடியில் வந்து '' ஆச்சி... ஆச்சி...' எனக் குரல் கொடுத்துவிட்டுச் சென்றாள். அவளது பசியும், அவளது தாயின் பசியை யும் நினைக்கும் போது அவளால் அங்கு பொறுமையாக நிற்க முடியவில்லை.

முதலில் மரவள்ளிக் கிழங்கை வெட்டி அவித்து எடுத்துவிட்டு '' அம்மா நீங்க சாப்பிடுங்க நான் ஆச்சியிட்ட இந்தக் கிழங்கைக் குடுத்திட்டு வாறன்... '' எனக் கூறி தலையில் மொட்டாக்குடன் சென்றாள்.

ஆச்சி ஒருக்கனித்துப்படுத்த படி இருந் தாள். பக்கத்தில் இருந்த றபர்க் கோப்பை யில் இருந்த தண்ணீர் கீழே ஊற்றுப்பட்டி ருந்தது. ''ஆச்சி... ஆச்சி இந்தானை அவிச்ச மரவள்ளிக் கிழங்கைச் சுடச்சுடச் சாப்பிடன்... நீயும் நெடுகக் கிழங்கு திண்ண ஆசப்பட்ட னியாம் என்று அம்மா சொன்னா. அப்ப எண்ணட்டக் காசில்லையணை'' என்று விருப்போடு சொல்லியவாறு ஆச்சியின் பதிலுக்காக அவளது வாயைப் பார்த்தாள்.

ஆச்சியிடத்தில் அசைவோ அனுக்கமோ ஒன்றும் இல்லை. மங்களம் ஒரு கையில் மரவள்ளித் தட்டுடன் குனிந்து மறுகையால் ஆச்சியை எழுப்பினாள். ''ஆச்சி... ஆச்சி...'' ஆச்சி அசையவே இல்லை. கண்களில் கண்ணீர் மட்டும் வழிந்து காய்ந்திருந்தது.

''ஐயோ...!! ஆச்சி... போயிற்றியாணை... என்ரை...!! என ஒப்பாரியிட்டு ஊரைக் கூட்டினாள் மங்களம்.

ஆச்சியின் மரணம் அறிந்து இனி ஆச்சிக்கு உதவி செய்யத் தேவையில்லை என்றோ உறவினர் வந்தனர். தொலைபேசி நம்பர்களில் வெளிநாட் டுக்குச் செய்தி பறந்தது. ஆச்சியை அன்பாய் அடிக்கடி [illegible] உறவினர்களால் [illegible]ட்டது. ஆச்சியின் பிள்ளைகளோ...! தொலைபேசியில் ஊருக் காய் உருகி அழுதார்கள். ஆச்சியின் அந்தி மத்துக்கு உறவினர் தலைமை தாங்கினர்.

ஒரே குணம் படைச்ச ஆச்சியின் ஐந்து பிள்ளை களும் '' அண்ணை எங்களுக்கு இப்ப ''கொலிடே'' இல்ல. பிள்ளைகளுக் குப் பள்ளிக்கூடம்; நாங்களும் லீவு எடுக்க ஏலாது; ஒரே பிஸி... எனி அங்க கிளை மேற்றும் சரியில்லையாம்... ஓக்கே... எங்களால் வர ஏலாமற்கிடக்கு எவ்வளவு காசு வேணும் எண்டாலும் அனுப்பி விடுறம்... ஓக்கே... வீடியோ எடுங்க... நல்ல கிராண்டாச் செய்யுங்க... ஓக்கே...'' எல்லாப் பிள்ளையளிட்ட இருந்தும் ஒரே தாரக மந்திரம் ஒலித்தது.

''தம்பி... அப்ப ஆரு கொள்ளி வைக்கி றது? எனக்கும் திருவிழா வருகுது; நானும் வைக்கேலாது... என்றார் மரண வீட்டுக் குத் தலைமை தாங்கும் இரத்தினம். '' ஓ....ஐ...ஸி....'' எங்கடை வீட்ட முந்தி வேலை செய்த கந்தசாமியைக் கொண்டு வையுங்க. அவருக்கும் கொங்சக் காசு குடுங்க... ஓ...கே.. என்றனர் ஆச்சியின் மூத்தவனும் இளையவனும்.

விலையுயர்ந்த பெட்டியும், பாடையும், பறைமேளமும், சவக் காரும், பாண்ட் வாத்தியமும், மேளமும் வந்தன. பத்திரிகை யில் ஆச்சியின் செலிப்பான புகைப்படத் துடன் அரைப்பக்கத்தில் மரண அறிவித் தல் ஆச்சியே அறியாத ஆச்சியின் பேரப் பிள்ளைகளின் பெயர்கள், தேவாரக்காரர் கள், அந்திமக் கிரியைக்குப் பெயர்போன ஐயர், மின்னலைப் போல மின்னிடும் படங்கள் வீடியோக்கள், வெளிநாட்டுக் குப் போற வீடியோ என ஆச்சியின் தலைமாடு, கால்மாடுகளில் பல உறவுகள் என ஆச்சியின் மரணம் கோலகலமாகியது.

பணமிருந்தால் கொள்ளி வைக்கும் நபரிலிருந்து சகலதுமே வாங்கலாம். பாவம் பசியால ஆச்சி குடல் ஒட்டிச் செத்தது தெரியவா போகுது. ம்...ம்... செத் தவன் குண்டி வடக்க போனால் என்ன கிழக்க போனால் என்ன'' எனப் பெருமூச் செறிந்தாள் ஆச்சியின் உண்மையான நிலையை விளங்கிய மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 40

## நீரிழிவு நோயாளிகளுக்கு...

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சலரோகத்தைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதில் முக்கிய பங்கு வகிப்பது உணவுக் கட்டுப்பாடு. உணவுக் கட்டுப்பாட்டைச் சரியான முறையில் பேணி, போதிய அப்பியாசங்கள், சீரான வாழ்க்கை முறையைப் பேணி வருவதன் மூலம் சலரோக நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். ஆயினும் இவர்கள் உடலில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து ஒழுங்கான முறையில் குருதி வெல்லப் பரிசோதனை செய்தல் வேண்டும். முடிவுகளைச் சரியான முறையில் பதிவுசெய்து அதனைப் பேணி வரவேண்டும்.

சலரோகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக மருந்துகள், இன்சுலின் போன்றவற்றை எடுப்பவர்கள் அதனைத் தொடர்ந்து ஒழுங்கான முறையில் வைத்திய ஆலோசனையுடன் எடுத்து வரவேண்டும். பெரும்பாலான சலரோக நோயாளிகள் மருந்து எடுக்கத் தொடங்கியதும் குருதி வெல்ல நிலைமை சாதாரண நிலை என்றதும் சலரோக நோய்க்குரிய அறிகுறிகள் குறைந்ததும் எவ்வித வைத்திய ஆலோசனையும் இன்றி தாமாக மருந்துகள் எடுப்பதை நிறுத்தி விடுகின்றார்கள். இது தவறான ஒரு செயற்பாடு. பெரிய விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியதாகும்.

சலரோக நோயாளியின் உடலுக்கு ஒரு குறிக்கப்பட்ட அளவில் இனிப்புச் சத்தும் அவசியம். எனவே இவர்கள் வைத்திய ஆலோசனையுடன் மிதமான அளவில் (தேவையான அளவில்) இனிப்புள்ள உணவுகளை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக இனிப்புள்ள உணவுகளைக் கட்டுப்பாடின்றி தேவைக்கு அதிகமாக உள் எடுப்பது ஆபத்தான நிலைமையை உருவாக்கலாம். எனவே இனிப்பு சலரோக நோயாளியின் எதிரி அல்ல. சரியான அளவில் எடுக்கப்படும்போது சிறந்த நண்பனாகத் தொழிற்படும். சலரோக நோய் உள்ளவர்கள் அதற்கான மருந்துகளை உள்ளெடுப்பவர்கள் தொடர்ந்து வைத்திய கவனிப்பு மிகவும் இன்றியமையாததாகும். எனவே இவர்கள் தொடர்ந்து வைததிய ஆலோசனை பெற்றுக்கொள்வதும் கிளினிக்குக்கு ஒழுங்காகச் சமுகமளிப்பதும் இன்றியமையாததாகும்.

சலரோக நோய் ஏற்பட்டவர்களுக்கு அவர்களின் உடலில் தொகுதிகளிலும் (நரம்புத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, நிணநீர்த் தொகுதி) பாதிப்புக்கள் ஏற்படலாம். மேலும் இவர்கள் பல்வேறு விமான தொற்றுக்கள், புண்கள் போன்றனவற்றுக்கும், கண்பார்வை குறைவடைதல், கைகால் விறப்புப் போன்ற நிலைமைகளுக்கும் உள்ளாகலாம். எனவே ஏற்படும் சிக்கல்களை குறைத்துக் கொள்ளப் போதிய வைத்திய ஆலோசனை இன்றியமையாதது. எனவே ஆலோசனையைப் பெற்றால் மட்டும் போதாது. அவற்றைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் அடிப்படை சலரோக நோயாளிகளின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதனால்தான் என்னவோ மனமே மருந்து என்கிறார்கள்.

**கோ.நந்தகுமார்,**
விரிவுரையாளர், தாதியக் கல்லூரி.

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## வைத்திய விடுதிக்கு வரும் நோயாளர்களுக்கு

வைத்திய விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெறும் நோக்கில் வரும் நோயாளிகள் விடுதிக்கு வந்த பின்பு சில அசௌகரியங்களை அனுபவிப்பதை நாம் நாளாந்தம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு சில ஆலோசனைகளைக் குறிப்பிடுகின்றேன்.

* சிறிய சந்திர சிகிச்சையின் நிமித்தம் அனுமதிக்கும் நோயாளிகள் ஆயின் தங்கள் நகைகள், பணம், கட்டுப்பற்கள், கைத்தொலைபேசிகள், கடிகாரங்கள், பெறுமதியான உடமைகள் போன்றவற்றைத் தவிர்த்து வீட்டிலேயே பாதுகாப்பான முறையில் வைத்து விட்டு, தங்கள் உடல், உளம் அமைதியான சூழ் நிலையில் வைத்தியவிடுக்கு வருகை தருதல் உங்கள் சிகிச்சைக்கு உதவியாக இருக்கும்.
* சத்திரசிகிச்சைனின் நிமித்தம் வரும் ஆண் நோயாளிகளாயின் வெள்ளை சரம் அல்லது கண்ணை உறுத்தாத மெல்லிய நிறமுள்ள சரம், பெண்களாயின் வெள்ளைச் சட்டை, வெள்ளைப்பாவடை கொண்டு வருதல் நல்லது. இவை சுத்தமானவையாக இருக்க வேண்டும். விடுதியில் தங்கி நிற்கும் நோயாளிகள் இறுக்கமான உடைகளைத் தொடர்ந்து அணிந்து கொண்டு இருப்பது அவர்களுக்கு அசௌகரியத்தைக் கொடுக்கும். (உ+ம்) இறுக்கமான அரைக் காற்சட்டை, ஜீன்ஸ், டெனிம் ஜீன்ஸ்.
* கட்டில் மெத்தை விரிப்புக்கள் அல்லது உங்கள் போர்வைகள், கண்ணை உறுத்தாத மெல்லிய நிறமுள்ள பெற்சீற்கள் பாவிப்பது நல்லது.
* விடுதியில் சில நாள்கள் தங்கி நிற்கும் நோயாளிகள் பற்தூரிகை, பற்பொடி அல்லது பற்பசை மற்றும் சோப், சிறிய சீப் மற்றும் மாற்று உடுப்புக்கள் கொண்டு வருதல் நல்லது.
* நோயாளிக்கு முன்பு வழங்கப்பட்ட சிகிச்சைகள் ம்ருந்துகள் பற்றிய விவரங்களை அறியத்தருதல் தொடர் சிகிச்கைக்கு உதவியாக இருக்கும். மற்றும் தற்போது வழங்கப்படும் மருந்துகள் பற்றிய விவரங்களை அறியத்தருதல் அவசியம். (மருந்துக் கொப்பிகள், Clinic card, Diagnosis card)
* சிறு பிள்ளைகள், கடுமையான நோயாளிகள், வயோதிப நோயாளிகள், நடக்கமுடியாத நோயாளிகள் போன்றோருக்கு உறவினர், பெற்றோர், உதவிக்கு நிற்பதற்கு பொதுவாக அனுமதிக்கப்படுவர் எனினும் அவர்கள் வைத்திய சாலை சட்ட திட்டங்களுக்கு அமைய நடப்பது அவசியம்.
* உணவு அருந்தும் பாத்திரம், கப், கரண்டி, தேநீர் தயாரிக்கும் பொருள்கள் (சிறிய அளவில்) தண்ணீர் போத்தல்கள், போன்றவற்றை நோயாளிகளுக்கு வழங்கப்படும் அலுமாரிகளில் அல்லது (லொக்கர்)களில் பாதுகாப்பாக வைத்திருத்தல் நல்லது.
* நோயாளிக்கு சிகிச்சை முடிந்து வீடு செல்லும் போது வைத்தியரால் வழங்கப்படும் நோய் நிதான அட்டை மற்றும் மருந்துச் சிட்டை என்பனவற்றை பெற்றுக் கொண்டு வெளிநோயார் பிரிவால் வழங்கப்படும் மருந்துகள் என்பனவற்றை பெற்றுச் செல்லுதல் நன்மை பயக்கும்.
* திடீர் விபத்துகள், அவசர சிகிச்சையின்போது அனுமதிக்கப்படும் நோயாளிக்கு மேற்கூறியவை பொருந்தாது. ஆயினும் உறவினர் அல்லது பெற்றோர் அல்லது நண்பர்கள் உதவிக்கு வருகை தருதல்மூலம் தொடர் சிகிச்சைக்கு உதவியாக இருக்கும்.

**ச.சுதாகரன்,**
தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை.

## குருதிச் சோகை என்றால் என்ன?

குருதிக்சோகை என்பது முன்னேறிவரும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிகரித்துக் கொண்டுவரும் ஒரு நோயாகும். இது அனிமீயா என்று அழைக்கப்படும். செங்குருதிக் கலத்திலுள்ள ஹீமோக்குளோபின் இரத்தத்துக்குச் செந்நிறத்தைக் கொடுக்கிறது. இரும்புச் சத்துப் பற்றாக்குறை ஏற்படும் போது இந்தச் செங்குருதிக் கலங்களின் எண்ணிக்கைக் குறைந்து கொண்டு செல்கிறது. இந்த நிலைமையிலேயே குருதிச் சோகை ஏற்படும்.

**குருதிச் சோகை ஏற்படுவதற்கான காரணங்கள்**

போசாக்கின்மை

குருதிச்சோகை ஏற்பட மிக முக்கியமான காரணம் இதுவாகும். செங்குரு திக்கலங்கள் 120 நாள்களே உயிர் வாழும். பின்னர் புதிய செங்கலன்கள் நீண்ட என்புகளின் செவ்வென்பு மச்சையில் உருவாக்கப்படுகின்றது. இவற்றின் உருவாக்கத்துக்குப் புரதம், கனியுப்புக்கள், விற்றமின் என்பன போதியளவு தேவை. ஆதலால் ஊட்டச்சத்துக் குறைவுள்ளோரில் செங்குருதிக் கலங்கள் போதியளவில் உற்பத்தியாக மாட்டாது.

குடற்புழுத் தொற்று

குடலில் காணப்படும் ஒட்டுண்ணிப் புழுக்கள் முக்கியமாகக் கொழுக்கிப் புழுக்கள் குடற்சுவரைப் பற்றி குருதியை உறிஞ்சுவதாலும் பற்றிய இடங்களில் இருந்து குருதி கசிந்து வெளியேறுவதாலும் குருதியிழப்பாலும் ஏற்படும்.

நாட்பட்ட குருதிப்பெருக்கு

* மகப்பேற்றின் போது நிகழும் குருதியிழப்பு
* மூல நோய்க் கட்டிகள் இரைப்பை மற்றும் குடற்புண்கள்
* குடற்புற்று நோய்களிலிருந்து
* மூக்கிலிருந்து குருதி அடிக்கடி வெளியேறுதல்

**அடிக்கடி ஏற்படும் மலேரியாக் காய்சல்-**
**RBC அழிக்கப்படும் நீண்ட கால நோய்கள்**

காசநோய் தொழுநோய் என்பழற்சி

**குருதிச்சோகையால் அதிகம் பாதிக்கப்படக் கூடியவர்கள்**

* பெண்கள்

குறிப்பாக வறிய போசாக்கின்மையால் பீடிக்கப்பட்ட அதிக பிள்ளைகளுக்கு தாயான பெண்கள்.

கர்ப்பவதிகள், வளரும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்
கர்ப்பம் தரிப்பதற்கு தகுதி வாய்ந்த பெண்கள்

**குருதிச்சோகையால் ஏற்படும் குணங்குறிகள்**

முகம், கண் மடல்களின் உட்புறம், நகங்கள் என்பன வெளிறி இருக்கும். பலவீனமான, விரைவான நாடித்துடிப்பு, களைப்பு , தலைவலி, தலைசுற்று, சாப்பாட்டில் வெறுப்பு, உடலுறவில் வெறுப்பு, மாதவிடாய் ஒழுங்கற்றிருத்தல், அதிக தூக்கம், angina என்னும் நெஞ்சுவலி, முகவீக்கம் கால்வீக்கம், மாதவிடாயின் போது வெளியேறும் குருதியின் அளவு அதிகரித்தல்.

**குருதிச் சோகையால் ஏற்படும் விளைவுகள்**

1. குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் உடல் உள ரீதியான விருத்தியை பின்னடையச்செய்யும்.
2. பேசும் திறன், கல்வி, விளயாட்டுத் திறன்கள் பாதிப்படையும்.
3. களைப்பை ஏற்படுத்தும், பாதுகாப்பற்ற நிலையை உண்டுபண்ணும்.
4. உடற்தொழிற்பாட்டைப் பின்டையச் செய்யும்.
5. நாட்டின் பொருளாதார நிலைமையிலும் பாதிப்பை உண்டுபண்ணும்.

கர்ப்பகால குருதிச் சோகையால், தாய் சேய் ஆரோக்கியம் பாதிக்கப்படும், குறைமாதப் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது, தாய் சேய் மரணவீதம் கூடும், நீர்ப்பீடன சக்தி குறைந்தவர்களாகக் காணப்படுவர், நிறை குறைந்த பிள்ளைகள் பிறக்கலாம்.

**குருதிச் சோகையைத் தடுத்தல்**

* குடும்ப உறுப்பினர்களுக்கான உணவைச் சமனாகப் பங்கிடல்
* இரும்புச் சத்து, விற்றமின் $B_{12}$ போலிக்கமிலம் விற்றமின் C நிறைந்த உணவுகளான தானியங்கள், கரும்பச்சை இலைக்கறிகள், புதிய பழங்கள், பால் போன்றவற்றை உணவில் ஒவ்வொரு நாளும் சேர்த்துக் கொள்ளல்.
* ஈரல் இறைச்சி போன்ற மாமிச உணவுகளை மாதத்துக்கு இரு முறையாவது உணவில் சேர்த்துக் கொள்ளல்.
* ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது கொழுக்கிப்புழு தொற்றுதலைத் தடுப்பதற்கு Mebantazole மருந்து பாவித்தல்.
* மலேரியா நோய்க்கான சிகிச்சையை முழுமையாக எடுத்தல்.
* கர்ப்பவதி தனது முழு இரும்புத் தேவையையும் சமாளிக்க முடியாத நிலையில் ஆறு மாதத்தில் இருந்து மூன்று மாதங்களுக்கு நாளாந்தம் ஒரு போலிக்கமிலம் வில்லையை உட் கொள்வது நல்லது.
* கர்ப்ப காலங்களிடையே போதிய இடைக்காலத்தை அனுசரிப்பதன் மூலம் தாய் இரத்தச் சோகையால் பீடிக்கப்படுவதைக் குறைக்கலாம்.


**குருதிச்சோகை நோயாளி எடுக்க வேண்டிய உணவுகள்**

முட்டை, ஈரல், இறைச்சி, பழங்கள், தானியங்கள், எண்ணெய், பச்சை இலைக்கறிவகை

-மருத்துவ பீட மாணவன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகை சூடவா




விமர்சனம்

1966 இல் அரச வேலை என்பது எட்டாக் கனியாக இருந்த காலகட்டத்தில் குழந்தைத் தொழிலாளர்களை மையமாக வைத்து ஒரு கிராமத்தில் இடம்பெறும் வாழ்க்கைச் சம்பவங்கள்தான் இப்படத்தின் கதையாகும். அரச உத்தியோகம் ஒன்றை எடுத்துவிட வேண்டும். அதற்கு முன் கிராமசேவக தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் ஏதோ ஒரு கிராமத்தில் தற்காலிக ஆசிரியர் வேலை செய்தால் ஒரு சான்றிதழ் கிடைக்கும். அந்தச் சான்றிதழைக் காட்டி அரச வேலை எடுப் பது இலகுவான காரியம் என்ற முடிவோடு ஒரு கிராமத்துக்கு ஆசிரியர் வேலை எடுத்துக் கொண்டு போகும் விமல் செங்கல் சூளையில் மண்ணோடு மண்ணாகக் கிடக்கும் மக்களின் வாரிசுகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க முயற்சிக்கிறார். அறியாமை இருளிலிருந்து அந்தக் கிராமத்துப் பிள்ளைகள் வெளிவராவிட்டாலும் படித்த பட்டணத்து இளைஞனான வாத்தியாரான விமலின் வெள்ளந்தித் தனத்தை தோலுரித்து விடுகிறார்கள். படித்த ஆசிரியர் எமது பிழைப்பைக் கெடுக்கப் போகிறார் என்ற நினைப்பில் ஆசிரியரின் கல்வியினையும், ஆசிரியரையும் விலக்கி வைக்க முயற்சிக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் கல்வி அறிவு இல்லாத ஓர் ஆண்டை எப்படியெல்லாம் எம்மை ஏமாற்றுகிறார் என்பதை உணர்ந்த அந்தக் கிராமத்து மக்கள் தமது பிள்ளைகள் கல்வியைக் கற்று வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறார்கள். கிராமத்தில் கல்வி அறிவில்லாமல் ஏனோ தானோ என்று வாழ்ந்த பிள்ளைகள் மெல்ல மெல்ல கல்வியின் தார்ப்பரியத்தை விளங்கிக்கொண்டு சிலேட்டில் கிறுக்க ஆரம்பிக்கின்றார்கள். ஆசிரியருக்கு உதவிசெய்ய வந்த அந்தக் கிராமத்தில் வளர்ந்த இனியா ஆசிரியர் குணத்தைப்பார்த்து விரும்புகிறாள். கொத்தடி மைக்களாக இருந்த மக்கள் கல்வி கற்க ஆரம்பித்துள்ள நிலையில் கல்வி தனக்கெதிராக புரட்சிக் கேள்வியாக மாறும் நாள் நெருங்குவதை உணர்ந்த ஆண்டகை ஆத்திரம் கொண்டு அந்த மக்களையே அழிக்க முயல்கிறான். அந்தக் கிராமத்து மக்களைக் காக்க வருகிறார் ஆசிரியரின் தந்தை. அவர் வரும்போது அரச வேலைக்கான உத்தரவுக் கடித்தினை எடுத்துக்கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுக்க உற்சாகத்தோடு வேலையில் சேரப் புறப்படுகிறார் ஆசிரியர். பாதி கலைந்த உறக்கத்தில் தவிப்பவர்களைப் போல அரை குறை கல்வியோடு கண்முன் நிற்கும் அந்த மழலைகளிடம் கண்ணீருடன் விடைபெறுகிறார் ஆசிரியர். அரச வேலையில் சேர்ந்தாரா? அந்த மழலைகளின் கல்வி என்ன ஆனது. இனியாவின் காதலை ஏற்றுக் கொண்டாரா? போன்ற காட்சிகள் ஒரு அழகிய நாவலின் நிறைவான புத்தகம் போல சொல்லப்பட்டுள்ளது. அரச வேலைக்காகத் தவிக்கும் இளைஞனாக நடித்திருக்கும் விமல் அந்தக் கதாபாத்திரத்தில் சரியாகப் பொருந்தியிருக்கிறார். பொன்வண்ணனின் ஆள்கள் இவரை அடிக்கும்போது விமலின் நடிப்பு பாராட்டும் வகையில் அமைந்திருக்கிறது. கிராமத்தில் சிறுவர்களின் விளையாட்டான விபரீதத்தில் மாட்டிக் கொண்டு முழிப்பதிலும் சரி, நாயகி இனியாவின் காதலைக் கண்டுகொள்ளாத காட்சிகளிலும் சரி விமல் தான் கடத்தப்பட்டதை, மாணவன் என்பதை நிரூபித்திருக்கிறார். அதாவது சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்தி இருக்கிறார். கேரளத்து வரவான இனியா இந்தப் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகி இருக்கிறார். ரீக் கடை வைத்திருக்கும் இனியா விமலை இங்கேயே சாப்பிடுமாறு அழைத்துவிட்டு சாப்பாட்டை சரியாக கொடுக்க முடியாமல் விமலிடம் பணத்தைக் கறந்து கொள்வதும், பின்பு விமல் மேல் காதல் கொண்டு விதவிதமாய் சமைத்துக் கொடுப்பதுமாக படத்தில் அசத்தியிருக்கிறார்.

கிராமத்து தோற்றத்தில் வரும் இனியா பாடல் காட்சிகளில் வரும்போது 1966 களில் இருந்த காலத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. விமலின் அப்பாவாக பாக்கியராஜ் வருகிறார். தனக்குத்தான் அரச வேலை கிடைக்கவில்லை, தனது மகனுக்காவது அரச வேலை எப்படியாவது கிடைக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் இருக்கிறார். இதற்கென கிராம சேவா சங்கம் என்னும் அமைப்பின் மூலமாகக் கிராமத்தில் ஆறுமாதம் தங்கி படிப்புச் சொல்லிக் கொடுத்தால் அரச வேலை கிடைக்கும் என்று மகனுக்கு ஆலோசனை சொல்லும் போது அறிவுரை சொல்லும் போதும் யதார்த்த வாழ்வில் வரும் தந்தையாக நின்று விட்டுப் போகிறார். கிராமத்தில் படிப்பறிவு இல்லாமல் இருக்கும் பிள்ளையை ஒரு தாய் தரதரவென இழுத்து வந்து ''ஆசிரியரிடம் ஒப்படைத்து, ஆசிரியரே உங்கட கையில என்ர மகனை ஒப்படைக்கிறேன். எதையாவது கற்றுக்கொடுங்க'' என அந்தத் தாய் கதறும் போதும் எமது கண்களிலும் கண்ணீர் வந்து விடுகிறது. பொட்டல் வெளி மழை ஆங்காங்கே தேங்கி நிற்க மண் நிறத்தில் இருக்கும் தண்ணீர் போன்றன அற்புத மாகப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்தக்காலத்தில் படிப்பறிவு இல்லாத மக்கள் எப்படி இருந்தார்கள். தமது குழந்தைகளை அவர்களை அறியாமல் தொழிலாளர் ஆக்குவது எனச் சமூகப் பிரச்சினைகளைக் கலந்து ஓர் அழகான காதல் கதையைப் புனைந்து தந்திருக்கிறார் இயக்குநர். கிராமத்து அழகையும் அந்த வாழ்வு முறையையும் செதுக்கி இருப்பது பாராட்டத்தக்கது. குடும்பமாகக் கட்டாயமாகப் பார்க்கக் கூடிய படமாகும்.

- குமார்.

# கருத்துரைப்பதில் பலனில்லை…

**09.10.2011 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் சோ.பத்மநாதனால் எழுதப்பட்டிருந்த 'புதுமை செய்ய முயற்சித்ததுண்டா' என்னும் கட்டுரைக்குக் கிடைத்துள்ள பதில்**

'புதுமை செய்ய முயற்சித்ததுண்டா' என்னும் தலைப்பிலான கட்டுரையில் காணப்பட்டிருந்த சில கருத்துக்களும் வினாக்களும் யாழ்ப்பாணத்தின் முதுகலைஞர்களையும் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்தையும் அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இவை அனைத்து இசைக் கலைஞர்களையும் வேதனை கொள்ளச் செய்துள்ளது.

இக்கட்டுரையானது செய்முறை இசையறிவு கொண்ட பார்வையில் எழுதப்பட வில்லை என்பதைப் பின்வரும் சொற்றொடர் களின் ஊடாகவும் அவற்றுக்கான சரியான விளக்கங்களின் ஊடாகவும் தெரிந்து கொள்ள லாம்.

பக்திப் பாடல்களை விளம்ப காலத்தில் பாடி ரசிகர்களைச் சொக்க வைப்பவர் - அவ்வாறு எமது இசை மரபில் எது வுமே இல்லை. அவர் பிரயோகித்த கமகம் - கமகத்தை எவரும் தனியாகப் பாடுவதில்லை. கமகங்களால் கோர்க்கப்பட்ட சங்கதி என்பதே சரியானது. ஸ்வரங்களை வைத்து விளையாடுகிறார் கிருஷ்ணா. இராகம், தாளம், நிரவல், கற்பனாஸ்வரம், கீர்த்தனை போன்ற அனைத்தும் ஸ்வரங்களால் அழகு செய்யப்படுபவை. இங்கே எது குறிப்படப்படுகிறது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. பாட்டை விஸ்தாரமாகப் பாடினார் - பாடலை எவரும் விஸ்தாரமாகப் பாடுவதில்லை. எடுப்பிடங்கள், சங்கதிகள், சாகித்யங்கள் போன்ற எவையும் மாற்றப்படாமலேயே பாடல் பாடப்பட வேண்டும் என்பது சங்கீத விதியாகும்.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் இது முக்கிய அம்சம் - கர்நாடக, ஹிந்துஸ்தானி இசைகள் இரண்டிலுமே இராக ஆலாபனைகள் தனித்துவமானவையாக விளங்குகின்றன.

அத்துடன் பிருந்தாவன சாரங்காவில் முடித்தார் என்று குறிப்பிடப்பட்ட பாடலின் இராகம் பிருந்தாவனி என்பதே சரியானதாகும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக வயலின் வாசித்த அக்கரை சுப்புலட்சுமி தனியாவர்த்தனத்தில் நாதமழை பொழிந்தார் என்பது வேடிக்கையிலும் வேடிக்கை. மிருதங்கம், கடம், கஞ்சிரா, முகர்சிங் போன்ற கருவிகளில் மட்டுமே இசையரங்குகளில் தனியாவர்த்தனம் வாசிக்கப்படும் என்பது சிறு பிள்ளைக்குக் கூடத் தெரியும்.

அத்துடன் யாழ்.பல்கலைக் கழக, இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறை மாணவர்கள் கச்சேரி கேட்பதில்லை, சான்றிதழுக்காகவும் அரச நியமனத்துக்காகவும் கற்று பல நூற்றுக் கணக்கில் பட்டதாரிகளாக மட்டுமே வெளியேறுகின்றனர் என்பதோடு நின்றுவிடாமல் இவர்களுள் எத்தனை பேரால் மேடையேறிப் பாட அல்லது வாசிக்க முடிகிறது என்று கேள்விக் கணைகளையும் தொடுத்திருந்தார்.

தற்காலத்தில் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் சாதனை படைத்து வரும் இளம் கலைஞர்கள் அனைவரையும் உருவாக்கியது இராமநாதன் நுண்கலைக்கழகமே என்பது தெரியாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். அத்துடன் எந்தவொரு கற்கை நெறியிலும் பட்டதாரிகளாக வெளியேறும் அனைவரும் துறைசார் நிபுணர்களாக இருப்பதில்லை என்பது உலக வழமை என்பதையும் புரிந்து கொள்ளத் தவறியமை கவலைக்குரியது.

எனினும் மேடையேறிப் பாடவும் வாசிக்கவும் எத்தனையோ இராமநாதன் நுண்கலைக்கழகப் பட்டதாரி இளவல்கள் தயாராகத் தான் இருக்கின்றனர். சரியான சந்தர்ப்பமோ தகுதி வாய்ந்த களமோ இவர்களுக்கு அமைத்துத் தரப்படவில்லை என்னும் உண்மையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கிட்டத்தட்டக் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் ஒழுங்கான இசைவிழா ஒழுங்கு செய்யப்பட்டதாக வரலாறே இல்லை. இசை மன்றங்கள், சபாக்கள், கலைத்துறை அமைப்புக்கள் அனைத்தும் செயலிழந்து போயுள்ளன. எஞ்சியிருக்கும் கலா மண்டபங்களும் கல்யாண மண்டபங்களாக மட்டுமே இயங்கி வருகின்றன.

சரியான திட்டமிடலோ நுட்பமான ஒலியமைப்போ கலைத்துவம் நிறைந்த மேடையமைப்போ தேவையான விளம்பரமோ இன்றித் தெரிந்தவர்களுக்கு மட்டும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட சில நாள் இசைவிழாக்களே யாழ்ப்பாணத்தில் சில வருடங்களாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில பிரமுகர்கள் அப்பாவி இசைக் கலைஞர்களை ஏமாற்றி லட்சக் கணக்கில் பணம் சம்பாதித்தும் வருவதாக மூத்த கலைஞர்கள் பலர் கூறுகின்றனர். இந்த ஆண்டு நல்லைக் கந்தன் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தைச் சற்றி முளைத்தெழுந்த தமது விளம்பரத்துக்கான திடீர் இசை விழாக்களும் அச்சிடப்பட்ட அழைப்பிதழ் முறையாக வழங்கப்படாமல் இருபத்தைந்து நாள்களாகப் பதினைந்து பார்வையாளர்களுடன் நடத்தப்பட்ட இசைவிழாக்களும் ஏனோ தானோ என்னும் போக்கில் நடத்தப்பட்டிருந்தன என்பதையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இதைவிடப் புதுமை செய்ய முயற்சித்த துண்டா என்னும் விசித்திரமான கேள்வி புதுமையாகவே உள்ளது.

ரி.எம்.கிருஷ்ணா அன்றையதினம் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டறியப்பட்ட இராகங்களையும் பாடல்களையுமே மரபுவழி தவறாமல் சுருதி, லயம் பிசகாமல் இனிமையாகப் பாடியிருந்தார். இதனை எப்படிப் புதுமை என்று கொள்ள முடியும். இசைக் கச்சேரிகளைப் பார்த்த அனுபவமில்லாதவர்களுக்கு இவை புதுமையாக இருந்திருக்கலாம். அதற்காக எத்தனையோ கலைஞர்களை உருவாக்கியும் மூத்த, இளம் கலைஞர்கள் பலருக்கு வாழ்வளித்தும் வருகின்ற வடபுலத்தின் ஒரேயொரு கலை நிறுவனத்தையும் எமது முது கலைஞர்களையும் முத்தமிழ் வளம் கொளிக்கும் யாழ்ப்பாண மண்ணையும் அவமதிக்கும் வகையிலான கருத்துக்களைக் கூற முற்படுவது நியாயமான ஒன்று அல்ல. எனவே கல்யாண மண்டபங்களாக நிரந்தரமாக மாறி நிற்கும் கலா மண்டபங்களை மீண்டும் உயிர் பெறச்செய்து தூய்மையான மனத்தோடும் அர்ப்பணிப்போடும் சிறந்த இசை விழாக்களை நடத்துவதற்கு எதிர்காலத்திலாவது அனைவரும் முன்வர வேண்டும். அதைவிடுத்து எங்கேயோ தவறு இருக்கின்றது என்று ஞானிகள் போன்று கருத்துரைப்பதில் எதுவித பலனும் ஏற்படப்போவதில்லை. ✸

இசைமாணி
ஏ.எஸ்.கரன்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏமாறுபவர்களாகப் பெண்கள் இருக்கக் கூடாது



இந்தக் காலத்து ஆண்கள் பெண்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கின்றார்கள். வாழ்க்கையைக் கடையில் விற்கும் பொருள்கள் போல் உணரவைக்கிறார்கள். கணவனே கண்கண்ட தெய்வம் என்று அன்பு, பாசம் மற்றும் அரவணைப்பைப் பகிர்ந்து வாழ நினைக்கின்ற மனைவி இருந்தும் பிற பெண்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இத்தகைய செயற் பாடுகளால் பெண்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

பத்து வரு டங்கள் ஆனாலும் ஆண் ஆணாகவே இருக்கின்றான். பத்து மாதத்துக்குப் பின் பெண்ணோ ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள். தாய்மைச் சின்னம் கட்டிக் கொடுக்கத் தெருவில் நின்று கண்ணீருடனும் வேதனையுடனும் வாழ்க்கையே வேண்டாம் என்ற முடிவுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் பெண்கள்.தற்போது கூடுதலாகக் கணவன் இல்லாத பெண்கள் ஆண்களிடம் சிக்கி மனநோய்க்குக் காரணமாகிக் கொண்டும் இருக்கிறார்கள். அன்பு, பாசம், அரவணைப்பு, நிம்மதி வேண்டும் என்று இன்னொரு ஆணிடம் தன்னை இழக்கிறாள். அவன் மீது அன்பும் பாசமும் உயிரும் வைத்து இருக்கிறாள். அவனும் அப்படித்தான் என்று நினைக்கிறாள் . ஆனால் காரியம் முடிந்த பின்னர் கால் செருப்பு மாதிரி கலட்டி விடுகின்றனர் ஆண்கள்.

இளமையில் இருந்து முதியோர் வரை இப்படியான வாழ்க்கையையே பெண்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். தங்களால் பெண்களின் வாழ்க்கை கேள்விக் குறியாக மாறிவிட்டதே என்று எந்த ஆணும் இரக்கப்படுவதில்லை. அவர்களது துன்பத்தில் பங்கு கொள்வதுமில்லை.

இந்தக் காலத்தில் நம்ப நடக்கலாம், யாரையும் நம்பி நடக்கக்கூடாது.

உலகமே சந்தர்ப் பத்துக்கு ஏற்ற காலமாக மாறிக் கொண்டிருக்கிறது. கடவுள் பக்தி குறைந்து, மோக பக்தி கூடுதலாகப் போய்க் கொண்டிருக்கிறமையால் இன்னும் எத்தனையோ விதமான சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொள்ளப் போகிறார்கள் பெண்கள். சீறுகிற பாம்பை நம்பலாம் நித்தம் சிரிக்கிற ஆண்களை நம்பக்கூடாது என்று தெரிந்திருந்தும் பெண்கள் ஏமாந்துகொண்டுதான் இருக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தில் ஏமாறுபவர்கள் இருக்கும் மட்டும் ஏமாற்றுபவர்களும் இருந்து கொண்டே தான் இருப்பார்கள் என்பதைப் பெண்கள் புரிந்து செயற்படுதல் வேண்டும்.

க.மேரி தனுஜா,
குருநகர்,
யாழ்ப்பாணம்..

# சுதந்திரம் எப்போது?



ஏன் என்னைப் பெண்ணாகப்
பெற்றாய்- என்னால்
சுதந்திரமாகத் திரிய முடியவில்லை
இந்த உலகில் ஆணாகப்
பிறந்த விட்டால்
கேட்பார் யாரும் இல்லை
பெண் திரிந்தாலே சொல்வார்கள்
வீட்டுக்கடங்காத
சொல்லுக்கடங்காத
அடங்காப்பிடாரி என்று
ஏன் இந்தப் பெயர்
எங்களுக்கு?
பெண்ணாய் பிறந்தது
எங்கள் தப்பா- இல்லை
போன ஜென்மத்துப் பாவமா?
தெரியவில்லை...
பாரதி பெண்ணுக்குச் சுதந்திரம்
வேண்டும் என்று போராடினார்
அந்தக் கவிஞர் போராடிக் கிடைக்காத
சுதந்திரம் இன்றுவரை
கிடைக்கவில்லை
பெண்ணுக்கு
இந்த உலகில்!
பெண்ணுக்குத் திருமண வயது
வந்தாலே போதும்
சீதனம்
என்ற பெயரில் வரும்
கொடிய நோய்
சீதனம் கொடுத்தால் சரி
பெண் எப்படி இருந்தாலும்
பரவாயில்லை..
பெண்ணுக்கு விடுதலை
எப்போது வரும்
சுதந்திரமாக
வீதியில் திரிவது
எப்போது?
பாரதியின் சுதந்திர
பெண்ணாவது எப்போது?

எஸ்.புவித்திரா,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# புரிந்துணர்வு இருந்தால் இனிய வாழ்வு வாழலாம்



-கோபி,
வட்டூர்.

இன்று காதல் திருமணம் ஆனாலும் சரி முறைப்படி நிச்சயிக்கப்பட்ட திருமணமானாலும் சரி எத்தனை குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றன?

எங்கு பார்த்தாலும் ஏதோவொரு பிரச்சினை. அதற்கு ஏதோவொரு காரணம். இவற்றுக்கெல்லாம் மூல காரணம் சரியான புரிந்துணர்வின்மையே. புரிந்துணர்வு என்பது இல்லையேல் அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது. இதில் ஆண், பெண் இருவரது பங்களிப்பும் அவசியமாகிறது. தனி ஒருவர் விட்டுக் கொடுத்து எந்தப் பலனுமில்லை. புரிதல் இல்லையேல் பிரிதல் என்ற நிலை உருவாகிவிடும்.

தற்போது எமது சமூகத்தில் இந்த நிலைமை அதிகரித்துவிட்டது. இதற்குக் காரணம் வெளிநாட்டுக் கலாசாரம் இங்கும் களைகட்டிவிட்டமையே. எப்படியும் வாழலாம் எனச் சில ஆண்கள் நினைப்பதால் பாவம் பெண் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதவளாய் உயிரை மாய்க்கும் அளவுக்கு விரக்தியில் இருக்கிறாள். யாரையும் யாரும் குற்றம் சொல்லிப் பயனில்லை. கணவன் - மனைவி உறவு என்பது உறவுகளைப் பகிர்ந்து கொள்ளும் இனிய பந்தம். அதனை சரியாகப் பயன்படுத்துபவர்களின் வாழ்வு சொர்க்கமாகவும் அதனை அனுபவிக்காதவர்கள் பரிதாபத்துக்குரியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

எனவே குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் பெண்ணின் உணர்வுகள், தேவைகளைப் புரிந்து நடக்க முயற்சி செய்யுங்கள். விட்டுக்கொடுத்து வாழ்ந்து பாருங்கள்; இனிய வாழ்வு வாழலாம்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

உனது கணவன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து வாழ்வதாகவும் அதனால் நீ தனிமையாக வாழ்வதாகவும் எழுதியிருந்தாய். எமது சமுதாயத்தைப் பற்றி உனக்குத் தெரியும் தானே? ஒரு பெண்ணைப் பற்றிக் குறை கதைப்பதற்கு எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருக்கிறது. அதுமட்டுமன்றி உன் வாழக்கையைப் பற்றியும் கொஞ்சம் சிந்தித்துப்பார். பெண்கள் தனியாக வாழ்வதென்பது கொடுமையான விசயம். மற்றவர்களுக்கு எள்ளிநகையாடவும் வசதியாக இருக்கும்.

அதற்காக நீ கவலைப்பட வேண்டாம்.உனது வாழ்வில் முடிவெடுக்க வேண்டிய நேரம் இது. கடந்த காலத்தை நினைத்து அழுவதாலோ கவலைப்படுவதாலோ எந்தப் பலனுமில்லை. எஞ்சியிருக்கும் வாழ்க்கையை, உனது எதிர்காலத்தை மகிழ்வாக வைத்திருக்க வேண்டும். அதற்கு உனக்குத் தேவை தன்னம் பிக்கையும் விடாமுயற்சியுமே. உன் நல்லதற்காகவே சொல்கிறேன். நடந்துமுடிந்ததை மறந்து இனி நடக்க இருப்பதை மகிழ்வாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்து நல்லதொரு முடிவை எடுப்பாய் என நம்புகிறேன். இனி நீ வாழும் வாழ்க்கை உன் எதிர்காலத்தை மகிழ்வாக வைத்திருக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்புமாகும். உனது இனிய வாழ்க்கைக்காக நானும் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்....
கங்கா.

# பெண்மையைப் பற்றி...



- ★ எனக்கு நீ உனக்கு நான் என்று வாழ்வதைவிட தன் கையே தனக்குதவி எனப் பெண்கள் வாழ்ந்தால் நிம்மதி.
- ★ பெண்ணின் வாழ்வு அன்பின் சரித்திரம்
- ★ பெண் இல்லாத வீடும், வீடில்லாத பெண்ணும் மதிப்பில்லாதவை.
- ★ காற்றை விட வேகம் கொண்டது பெண்ணின் எண்ணம்
- ★ சமுதாயத்தின் அடிப்படையும் ஆதாரமும் பெண்ணே.
- ★ ஒரு பெண்ணுக்கு கல்வி புகட்டுவதும், ஒரு சமுதாயத்துக்கு கல்வி புகட்டுவதும் ஒன்றே.
- ★ எவ்வளவு மென்மையானவளோ அவ்வளவு மனவலிமையும் தியாக மனமும் உள்ளவள் பெண்.
- ★ குடத்துள் குத்துவிளக்காகப் பெண் இருக்க வேண்டுமே தவிர பலர் கண்களில் படும் மின்சார விளக்காக இருக்கக்கூடாது.
- ★ பெண் தாய்மையடைவதால்தான் ஆண் தந்தை என்ற நிலையடைகிறான்.

ரவீந்திரகலா, லவ்லேன் [illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்





கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக கலை இலக்கிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், கலாநிதி த.கலாமணி ஆகியோர் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். (ம-236)





பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் முடமாவடி ஞானக்குழந்தை இல்லத்தின் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் மங்கள விளக்கேற்றுகிறார். மாணவர்கள் ஆசிரியர்களுடன் உள்ளனர். (ம)






கரவெட்டி ரவீன்ஸ் ஆங்கில மொழி கற்கை நிறுவனத்தில் தரம் - 11 மாணவர் களுக்கான ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர் களுடன் ஆசிரியர்கள் உள்ளனர். பரிசளிப்பு விழாவில் நிர்வாக, மாணவி ஒருவருக்குப் பரிசு வழங்குகிறார். (ம-236)



காரைநகர் அபிவிருத்திச் சபை நடத்திய தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வின் போது கலாநிதி ஆ.தியாகராச ம.ம.வித்தியாலய மாணவிகளின் செம்பு நடனம் இடம்பெறுகின்றது. (ம-250)



காரைநகர் கடற்படையினரின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைநகர் தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் கல்விபயிலும் 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நி[illegible] இடம்பெற்றது. கடற்படை அதிகாரி மற்றும் விருந்[illegible] அமர்ந்திருக்கின்றனர். (ம-250)



[illegible] வளர்மதி கல்விக் கழகம் விஜய தசமியை முன்னிட்டு அன்றைய தினம் இரவு வளர்மதி கல்விக்கழக வளாகத்தில் கலை நிகழ்வுகளை நடத்தியது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களும் கல்விக்கழக ஆசிரியர்களும். (ம-288)

# படங்கள் தரும் பதிவுகள்





வேலணை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களும், ஓய்வுபெற்றுச் சென்றவர்களுக்குமான பிரியா விடை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ஓய்வு பெற்றுச் செல்லும் நிர்வாக கிராம அலு வலர் எஸ். பஞ்சலிங்கத்துக்கு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் நினைவுப் பரிசில் வழங்குகிறார். (ம-163)







துணுக்காய் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் அண்மையில் பௌர்ணமி தின கலைவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன. (ம-500)




திருநெல்வேலி சிறுவர் முன்பள்ளியின் நவராத்திரி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண முன்பள்ளி கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவுக்கு இந்தச் சிறுவர் பூங்காப் பணிப்பாளர் பி.தனபாலன் நினைவுப் பரிசில் வழங்குகிறார். (ம)



கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தில் யாழ். இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு ஆசிரியர் க.இராசநாயகம் எழுதிய Queen's English நூல் வெளியீட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக பீடாதிபதி தலைமையுரை நிகழ்த்துகிறார். விருந்தினர் மேடையில் உள்ளனர். (ம)



சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி யாழ். படைகளின் கட்டளைத் தலைமையகத்தில் இடம்பெற்றசர்வதேச சிறுவர் தின விழாவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம். (ம-86)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தமிழ் விழாவில் கல்லூரி அதிபர் க.இ.இராஜசேகரம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-121)



வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச செயலர் பிரிவு கலைவிழாவில் கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளுடன் அமர்ந்துள்ளனர். (ம-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பராசக்தி கனகசபை

கோயில் வீதி, இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பராசக்தி கனகசபை கனடாவில் 14.10.2011 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, திருநாவுக்கரசு, தணிகாசலம், மனோன்மணி, தனஞ்செயசிங்கம் சிதம்பரநாதன், கனகலட்சுமி மற்றும் சிதம்பரேஸ்வரியின் சகோதரியும் தெய்வமணி, சிவலோகநாயகி (உஷா), கந்தசாமி, பரமானந்தர் ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் ராஜாதேவி, ராகினி ஆகியோரின் அன்பு மாமியும் பிரபாகரன், பிரேமாணந், சுஜாதா, முரளிதரன், கல்யாணி, பாஸ்கரன், நிலோஜினி, அனு அஜந்தன், பானு, பாரி கார்த்திக் ஆகியோரின் பாட்டியும் அனு ஜன், கெவின், டெய்னி, அஸ்வின், அஜன், தனுஸ், ஆகாஸ், அபிராம் ஜெய்டன் ஆகியோரின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.10.2011 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சிவலோகநாயகி (உஷா)
மகள்

கோயில் வீதி,
இணுவில் கிழக்கு,
இணுவில். T.P 0772182830
(9093)

## முருகேசு கணபதிப்பிள்ளை



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கணபதிப்பிள்ளை 11.10.2011 செவ்வாய்க்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - ஐயாத்தை தம்பதியரின் அன்பு மகனும் ருக்குமணியின் அன்புக் கணவரும் சதீஸ்குமார், குட்டி, துஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் அனுஷா, நோமி, கெயாறா ஆகியோரின் அன்பு மாமனும் தம்பையா, கணேஷ், காலஞ்சென்ற பரமானந்தம், சிவபாலன் (சுவிஸ்), நாகராஜா (இத்தாலி), தில்லை நடராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சொர்ணலட்சுமி, நாகேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் மணி (சுவிஸ்), லீலா (இத்தாலி), அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஸ்ரீமன், ஸ்ரீயா, அப்சாயா ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.10.2011) திங்கட்கிழமை இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முருகேசு தம்பையா
(அண்ணா)

இல.3, சிவன் புது வீதி,
திருநெல்வேலி, நல்லூர்.
(9085)

# பகிரங்க ஏல விற்பனை

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 04.02.2011 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 04.10.2010 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏலவிற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக் கிளை (யாழ்.கச்சேரி, யாழ்.பஸ்நிலையம், யாழ்.பிரதான வீதி, விரிவாக்கற் கிளைகள் உட்பட) | யாழ்ப்பாணம் அதி மேற்தரக்கிளை யாழ்ப்பாணம் 2011 நவம்பர் 5 ஆம்திகதி (சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு |
| யாழ். 2 ஆம் மேற்தரக் கிளை (கொக்குவில் விரிவாக்கற்கிளை உட்பட) | |
| திருநெல்வேலி | |
| காரைநகர் | |
| சுன்னாகம் | |
| மானிப்பாய் (சங்கானை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| காங்கேசன்துறை நெல்லியடி | |
| ஊர்காவற்றுறை (ஊர்காவற்றுறை, நெடுந்தீவு விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| பருத்தித்துறை (வல்வெட்டித்துறை விரிவாக்கற்கிளை உட்பட) | |
| சாவகச்சேரி (கைதடி, கொடிகாமம் விரிவாக்கற்கிளைகள் உட்பட) | |
| அச்சுவேலி | |
| கோப்பாய் | |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

செயற்பாட்டு முகாமையாளர்
இலங்கை வங்கி (வடபிராந்தியம்)
வடபிராந்திய காரியாலயம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3126, 021 222 3945

## தேவை

நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் வயல் காணிகள் மற்றும் உரும்பிராய் பகுதிகளில் தோட்டக் காணிகள் பெருமளவில் தேவை. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு- பெயர், காணி விவரம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

Chairman,
Hanna's Relief Swedish Mission.
19/1, Beach Road,
Mount-Lavinia
T.P:2724110

## வீடு. காணி விற்பனை

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 4 பரப்பு நிலத்துடன் வீடும் தனியாக 4 பரப்பு நிலமும் விற்பனைக்குண்டு. T.P:0112729855, 0777217132

## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கு
மடத்துப்பிள்ளையார் கோயிலுக்கு
அருகில், 3¼ பரப்புக் காணி
வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:0750413314

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984 உத்தராடம் முதலாம் பாதம் 8 இல் செவ்வாய் உயரம் 5' 4'' HNDA படித்த மணமகளுக்கு வெளிநாட்டில் PR உடைய பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு:0776139309

## புதிய கடைகள் விற்பனைக்கு/வாடகைக்கு

இல. 60 ஜும்மா பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைத்தொகுதி யில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- அ.தங்கராசா அன்சன்ல்
077 8995431, 0750434277.

## மணப்பெண் அலங்காரப் பொருள்கள்

மணப்பெண் அலங்காரத்தை மேலும் மெருகூட்டக் கூடிய வகையில் சகலவிதமான பொக்கே, சடைநாகம், முதலிய பூவேலைகள், அழகு சாதனப் பொருள்கள் என்பன சுவிஸ், கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பிரபலம் பெற்றவரால் தரமான முறையில் தயாரித்துக்கொடுக்கப்படும். தொடர்பு: 0777206829, 0112448743

## வீடு வாடகைக்கு

யாழ்.நகர் மத்தியில் மாட்டீன் றோட் லேனில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக உபயோகிக்கக்கூடிய 3 பரப்புக் காணியில் வரவேற்பறை, 4 அறைகள் (1 அறை A/C), 2 குளியலறைகள், சமையலறை, 10 வாகனத் தரிப்பிட வசதி, நீர்த்தாங்கி மற்றும் ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 ஆம் ஆண்டு பிறந்த B.Sc. பட்டதாரி அரச உத்தியோக மணமகனுக்கு பெற்றோர் அழகிய, படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு: T.P. No: 0757637490

## தட்டெழுத்தாளர் தேவை

அலுவலகம் ஒன்றுக்கு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வேலை செய்யக் கூடிய கணினித் தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை.
தொடர்பு:
0775440293, 0213215081

## புதிய வீடு விற்பனை

இருபாலைச் சந்தியில் புதிதாக சீரமைத்த வீடு மேல்மாடி கீழ் மாடியில் 5 அறைகள் 01 அலுவலக அறை, 02 சமையல் அறைகள் 02 வரவேற்பறைகள், குளியல் அறை, கிணறு தண்ணீர்த் தாங்கியும் உண்டு மேற்குப் பக்கம் பருத்தித்துறை வீதி, கிழக்குப் பக்கமும் வீதி, தெற்குப்பக்கமும் வீதி உள்ள வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.
0774427683
0776680890
0213219747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

சூராவத்தை சுன்னாகத்தில் புனித திரேசா ஆலயத்துக்கு கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு இலக்கம்: 0776032317

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 12.04.1932
உதிர்வு: 16.09.2011

## திருமதி சுந்தரம் தங்கப்பிள்ளை (பாக்கியம்)

கடந்த 16.09.2011 ஆம் திகதியன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்களது குடும்பத்தினருடன் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்துகொள்வதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லூரியடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
தொ.பே: 021 321 7785

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வ.து)

### பதவிவெற்றிடம்-வர்த்தக முகாமையாளர்

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வர்த்தக முகாமையாளர்
சம்பளத்திட்டம் : 106/09 = 10,950-13,650
(86/2006 இன்படி) 130 X10 ,140 X10
காலத்துக்குக் காலம் சுற்றுநிருபங்கள் மூலம் வழங்கப்படும் அனைத்துப் படிகளும் வழங்கப்படும்.
தகைமைகள்:
அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமைமட்ட அல்லது மேற்பார்வை மட்டப்பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத் திட்டத்தில் அப்படிப்பட்ட பதவியொன்றில் ஆறுவருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது,
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் விற்பனை/ பொருள்கள் வழங்குதல் மற்றும் விநியோகம் செய்தல்/ பொருள்கள் ஏற்றுமதி/ இறக்குமதி அலுவல்கள் ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்ட பதவியொன்றில் இரண்டு வருட காலங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது
இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த.(உ.த) சான்றிதழ் பரீட்சையில்மூன்று (3) பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் அல்லது பொருள்கள் வழங்குதலும், விநியோகம் செய்தலும் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் முகாமைமட்டப் பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாதஅனுபவம்.
02. விண்ணப்ப முடிவுத் திகதி: 2011.10.27
03. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
04. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை ரூபா 10 செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பத்தைச் சரிவர பூர்த்திசெய்து 2011.10.27 ஆம் திகதிக்கு முன் ''தலைவர், 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்'', எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் ''வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்

# கண்ணீர் அஞ்சலி



கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் டென்மார்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் இராஜேஸ்வரியின் பிரிவினால் நாம் துயரடைவதுடன் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அமரர்
## இராசரட்ணம் இராஜேஸ்வரி

செயற்கரிய செயலால் பெரியாராய் உயர்ந்தீர்
தெய்வம் என்பது ஏழைகளுக்கு கொடுப்பது தான் என்றீர்
காகத்தின் கூட்டிலே குயிலின் குஞ்சுகள் போல்- உமது
விட்டுக்கு வந்தாரை மகிழ்வுடனே வாழவைத்தீர்
ஆண்டவனைக் கோயிலில் காண்பதை விட
விழ்ந்தவனுக்குக் கைகொடுத்து ஆண்டவனைக் கண்டீர்
வாழ்தலில் அர்த்தத்தை எமக்குப் புரிய வைத்தீர்
சூழும் துன்பத்தால் விழி சொரிய இவ் வரிகளைத்
தூவுகின்றோம் உம் அடிக்கு
உம் ஆத்மா சாந்தியடைய

யாழ்ப்பாணம்.
இலங்கை வாழ் நண்பர்கள்

ஒக்ரோபர் 14 தரமான கல்விக்கான தினம்

# தரமாக கல்வியை வழங்க பாடசாலைக் கட்டமைப்பில் மாற்றங்கள் அவசியம்

இலங்கையின் அனைத்துக் கல்விச் சீர் திருத்த அறிக்கைகளிலும் தரமான கல்வி முக்கிய விடயமாக ஆராயப்பட்டு வந்துள்ளது. 1997 இல் வெளிவந்த பொதுக் கல்விச் சீர் திருத்த அறிக்கையிலும் ஐந்து விடயப் பரப்புக்களில் தரமான கல்வியும் ஒன்றாகும்.

தரமான கல்வி மூலம் எமது மாணவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அவர்களின் நிலை மாற்றத்தை உருவாக்க வேண்டும். அந்த வகையில் பாடசாலைகளில் தரமான கல்வியை வழங்குவதற்காக பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்விப் பணியாளர்கள், கற்றல் சாதனங்கள் அனைத்தும் உள்ளீடுகளாகும். அங்கு நடைபெறும் செயன்முறை கற்றல், கற்பித்தல் ஆகும். வெளியீடு தரமான மாணவர்கள் ஆகும்.

ஆனால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சை, உயர் தரப் பரீட்சை போன்ற தேசிய ரீதியான பெறுபேறுகளை நோக்கும்போது 50 வீதத்துக்குக் குறைவான மாணவர்களே 100 புள்ளிகளுக்கு மேல் பெறுகிறார்கள். சாதாரண தரப் பரீட்சையில் 50 வீதமான மாணவர்களே உயர்தரத்துக்குத் தகைமை பெறுகின்றார்கள். உயர்தரத்தில் 40 வீதமான மாணவர்களே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெறுகிறார்கள். ஒப்பீட்டு ரீதியாக நிபுணத்துவ வெளியீடு ஜப்பான்-60%, சிங்கப்பூர்-40%, இந்தியா-16%, இலங்கை-1.4%

இலங்கையில் 100 மாணவர்கள் பாடசாலையில் சேர்ந்ததால் 1.4 பேரே (ஒருவரே) நிபுணத்துவம் வாய்ந்தவராக வெளியேறுகின்றார் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இவை இலங்கையில் கல்வியின் தரமின்மையையே எடுத்துக் காட்டுகின்றது. இதனால் அன்றோ தரமான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக பாடசாலைகளுக்கு நிதி வழங்கப்படுகின்றது.

தரமான ஆசிரியர்களை உருவாக்குவதற்காகச் சேவைக்கால பயிற்சிகள், ஆசிரியரை அடிப்படையாகக் கொண்ட களம்சார் உயர்மட்ட பயிற்சிகள் என்பவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் உள்ளன. அதிபர்கள், பகுதித் தலைவர்கள், கல்விப் பணிப்பாளர்கள் என்போருக்கு கல்வி முகாமைத்துவம் என்பவற்றில் அவர்களின் கொள்ளளவுத் திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. ஆனால் இவை போதுமானவையாக, தன்னார்வ நிலையாக அமைவதில்லை.

பௌதீக வளங்களை வகைப்படுத்தும்போது வகுப்பறைகள் அடிப்படைக் கற்றல் வளங்கள் எனவும், நூலகம், ஆய்வு கூடம், கணினி வள நிலையம் என்பன உயர்மட்டக் கற்றல் வள நிலையங்களையும் தரப்படுத்தப்படுகின்றன. இவற்றில் உட்கட்டமைப்பு வசதிகள் பாடசாலைகளில் உயர்வடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் பிள்ளை மையம், செயற்பாட்டு அடிப்படை, தேர்ச்சி அடிப்படை என்பன முக்கிய கூறுகளாகவுள்ளன. வகுப்பறையில் மாணவர்களை குழுக்களாக்குதல், ஏதாவது ஒரு முறையியலைக் கல்வி நிலை என்பன நாளாந்தம் கடைப் பிடிக்க வேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

ஆனால் வகுப்பறைகளில் இவ்வாறான செயற்பாடுகள் குறைவாகவே உள்ளன. இதனால் வகுப்பறைகளில் பிரதான பாடங்களில் அதிகமான மாணவர்கள் 40% க்கு குறைவான புள்ளிகளையே பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இதனைச் சரி செய்வதெனின் புள்ளிப் பகுப்பாய்வு, வினாத்தாள் உருப்படிப் பகுப்பாய்வு என்பவற்றின் அடிப்படையில் மாணவர்களுக்கு உயர்மட்டப் பயிற்சிகளை வழங்க வேண்டும்.

வகுப்பறை மதிப்பீடுகளை செய்யும் போது அதிபர்கள், பகுதித் தவைர்கள் மறைந்து கிடக்கும் உயர்மட்ட பண்புக் குறிகளை நாளாந்தம் கண்டறிந்து ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் , தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் போன்ற பாடல்களை கற்க மாணவர்களைத் தூண்ட வேண்டும். அதற்கான வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இன்று தரமான கல்வியின் சுட்டிகளாக இந்தப்பாடங்களே உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தரமான கல்வியை வழங்குவதில் உள்வாங்கி மதிப்பீடு, வெளிவாரி மதிப்பீடு முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எட்டு வகையான மதிப்பீட்டுக் கூறுகளிலும் உள்ள தரங்கள், சுட்டிகள், நியமங்கள் தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் நன்றாக அறிந்து, அதனடிப்படையில் தமது நிறுவனத்தை தாமே மதிப்பீடு செய்ய வேண்டும். ஆனால் இவை தொடர்பில் அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வு போதாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட சில பாடசாலை அதிபர்கள் உள்ளக மதிப்பீட்டில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர்.

தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டுமாயின் பாடசாலை முகாமைத்துவக் கட்டமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். அந்த வகையில் பாடசாலை முகாமைத்துவ அணி, பாடசாலை அபிவிருத்திக் குழு என்பன முக்கியமானவை. பாடசாலை அபிவிருத்திக் குழுவில் பெற்றோர், பழைய மாணவர் எண்ணிக்கை அதிபர், ஆசிரியர் எண்ணிக்கையை விட அதிகமானதாகும். இதனால் தீர்மானம் மேற்கொள்ளல், திட்டமிடுதல் என்பனவற்றில் இவர்களின் பங்கு காத்திரமானதாகும். ஆனால் பாடசாலை அபிவிருத்திக் குழுவைக் கூட்டுதல், கலந்துரையாடல், திட்டமிடல் போன்ற செயன்முறைகள் குறைவாகவே உள்ளன.

இன்று 'யுனிசெவ்' அனுசரணையுடன் பிள்ளை நேயப் பாடசாலை முறைமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்த முறைமையில் ஆறு பரிமாணங்கள் உள்ளதை அதில் தரமான கல்வியும் ஒன்றாகும். மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குவதற்காக பல்வேறு செயற்பாடுகள் பாடசாலையில் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

இன்று ஒவ்வொரு பாடசாலையும் அமைந்துள்ள அதன் சமூகம் சீரழிந்து போயுள்ளது. குடும்பங்களில் தாய், தந்தை இறப்பு, வருமானம் போதாமை, குடும்பத்தில் பிரிவினை, கெட்ட பழக்க வழக்கங்கள் என்பனவற்றால் சமூகம் பாதிப்படைந்துள்ளது. இத்தகைய சமூகத்தைத் தரமான சமூகமாக மாற்றும் வலு பாடசாலைக்கு உண்டு. பாடசாலைக்கு சமூகம் என்ன செய்தது என்பதை விட, பாடசாலை, சமூகத்துக்குஎன்னசெய்தது என்பதே முக்கியமானதாகும்.

பாடசாலை வாண்மைக் கான ஆயுதம் பாடசாலை என்பது சிந்தனைத் தொட்டி அவ்வாறாயின் ஏழ்மையில் வாடும் இந்தக் குடும்பங்களைக் கரை சேர்க்கும், வழிகாட்டும் பொறுப்பு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு உண்டு. தரமான சமூகத்தை கட்டி எழுப்ப அன்றும், இன்றும், என்றும் தரமான கல்வியே முக்கியமானதாகும்.

பி.முத்துலிங்கம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி.

# முதியோரின் பித்து நிலை கவனிக்கப்பட வேண்டும்

முதியோரின் நடவடிக்கையில் மற்றும் மனநிலையில் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி ஆராயும் அறிவியல் துறையே முதியோர் உளவியல் ஆகும். முதியோரின் வயது அதிகரிக்க அதிகரிக்க, அத்தோடு நிகழும் உடல்நிலை மாற்றம், உணர்ச்சிகள் மாற்றம், சமூக சூழல் மாற்றம் போன்றவை அவர்களுக்கு உளவியல் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும்.

## மனச்சோர்வு

மனச்சோர்வு என்பது ஒரு உணர்வு பூர்வமான மன நிலை. அதன் வெளிப்பாடாக வருத்தம், வெறுப்புற்ற மனநிலை, நம்பிக்கை இழந்த நிலை ஆகியவை ஒருவரிடம் காணப்படும். இளைஞர்களோடு ஒப்பிடும்போது, பொதுவாக முதியோர்களிடம் மனச்சோர்வும் தற்கொலை மனப்பான்மையும் அதிக அளவில் காணப்படுகிறது. இதற்குக் காரணம், முதியோரின் வாழ்நாளின் பிற்பகுதியில் ஏற்படும் கடுமையான இழப்பே ஆகும். உதாரணமாக, உடல்நலம் குன்றுதல், உடல்நிலையில் மாற்றம், பணி ஓய்வுக்குப் பின் ஏற்படும் வருமான இழப்பு, உறவினர்கள் மற்றும் நண்பர்களை இழத்தல், வாழ்க்கைத் துணைவரை இழந்துவிடுதல், தற்காலிக இடமாற்றம் போன்றவற்றைச் சொல்லலாம்.

முதியோருக்கு ஏற்படும் மனச்சோர்வை குடும்பத்தினர் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். இல்லை என்றல் முதுமையின் இயல்பு என்று ஒதுக்கிவிடுகிறார்கள். ஆரம்ப நிலையிலேயே முதியோருக்கு ஏற்படும் மனச்சோர்வை இனங்கண்டு, உடனடியாகச் சிகிச்சை அளிக்கத் தவறினால் தேவையற்ற சிரமங்களை அவர்கள் எதிர் கொள்ள நேரிடும்.

மனநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள், தீயது ஏதோ நடக்கப்போகிறது என்ற பயம், எப்போதும் சோகமாகக் காணப்படுதல், உற்சாகமின்மை ஆகியவற்றை மனச்சோர்வின் பொதுவான அறிகுறிகளாகக் கூறலாம். ஒன்றில் கவனம் செலுத்த இயலாமை, சோம்பேறித்தனம், எதிலும் ஆர்வமின்மை, குற்ற உணர்வு, ஒழுங்கற்ற பசி மற்றும் தூக்கம் ஆகியவையும் மனச்சோர்வின் வெளிப்பாடுகள்தான். அத்தோடு வழக்கத்துக்கு மாறான மன உளைச்சல், உடல் கோளாறுகள் ஆகியவையும் மனச்சோர்வால் ஏற்படுகின்றன.

மனச்சோர்வால் பாதிக்கப்பட்ட முதியோர், சிறிய விடயத்துக்கும் அதீதமாகக் கவலைப்படுவார்கள். தொடர்ந்து உடலில் ஏதோ பிரச்சினை இருப்பதாகக் கூறுவார்கள். சில சமயம், மனச்சோர்வு ஞாபக சக்தியை குறைத்துவிடும்.

## பித்து நிலை

ஒருவரின் நடவடிக்கையில் ஏற்படும் திடீர் மாற்றம், எதிர்ப்புணர்வு, கவனமின்மை, ஞாபக சக்திக் குறைவு, ஒழுங்கற்ற சிந்தனை ஆகியவற்றைப் ''பித்து பிடித்த நிலை'' என்று கூறலாம். இந்த நிலை, ஒரு நாளின் பொழுதில் மாறிக்கொண்டே இருக்கும். பாதிக்கப்பட்டவர் ஏதோ குழப்ப நிலையில் இருப்பதாக குடும்பத்தினர் நினைப்பார்கள். உதாரணத்துக்கு சுதந்திரமாகவும், நல்ல உடல் நலத்தோடும் இருப்பவர் திடீரென்று குழம்பியவராகவும் அமைதியற்றும் காணப்படுவார்.

சிறிது நேரத்துக்குப் பிறகு இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவார். மீண்டும் பழைய நிலைக்குப் போய்விடுவார்.

சில சமயம் அரை மயக்கத்தில் இருப்பார். தூங்கும் வழக்கத்தில் மாற்றம் ஏற்படும். குறிப்பாக இரவு நேரத்தில் தூக்கமின்றித் தவித்து விட்டுப் பகலில் தூங்குவார். ஒட்டு மொத்தமாக, பித்து நிலையில் இருப்பவரின் நடவடிக்கையில் தாறுமாறான மாற்றங்கள் இருக்கும்.

இந்தப் பித்து நிலைக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். உடனடிக் கவனம் செலுத்தா விட்டால், அதுவே வேறு பல உடல் நலக் கோளாறுகள் வருவதற்குக் காரணமாகிவிடும்.

இதற்குக் காரணமாக நோய்த் தொற்று, பக்கவாதம், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றைச் சொல்லலாம். வேறு நோயைக் குணப்படுத்தச் சாப்பிடும் மருந்துகளின் பின்விளைவாகவும் பித்து நிலை முதியோருக்கு ஏற்படலாம். முதல் முறையாகப் பித்து நிலையால் பாதிக்கப்பட்ட வரை உடனடியாக மருத்துவமனையில் சேர்த்துச் சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயின் தன்மை சரியாகக் கண்டு பிடிக்கப்படுகிறது.

பெரும்பாலான நோயாளிகள் சிகிச்சைக்குப் பிறகு பூரணமாகக் குணமாகிவிடுகிறார்கள். அப்படி உரிய சிகிச்சை அளிக்காத பட்சத்தில், அதுவே டிமெனிஷயரிவுக்கு அல்லது இறப்புக்கோ வழிவகுத்துவிடும்.

## மனநலக் கோளாறுகள்

சிந்தனைத் திறனில் ஏற்படும் பாதிப்பை 'மனநலக் கோளாறு' என்று கூறலாம். சிந்திக்கும் திறன் பாதிக்கப்படும்போது, தர்க்கரீதியாக யோசிப்பதும் நிதர்சனத்தை அறிந்து கொள்வதும் பாதிக்கப்படுகிறது. மாயத்தோற்றம், பொய்யானவற்றை நம்புவது, கூர்ந்து ஆராயும் திறனை இழந்துவிடுவது ஆகியவற்றை மனநலக் கோளாறுகளுக்கான அறிகுறிகளாகக் கொள்ளலாம்.

கண்ணுக்கு முன் இல்லாத ஒன்று, இருப்பது போன்ற பிரமை ஏற்படும்போது மாயத்தோற்றம் உருவாகிறது. எந்த ஒலியும் உண்மையில் ஒலிக்காதபோது ஏதோ சத்தம் கேட்பதாக ஒருவர் நினைப்பதும் உடம்பில் ஏதோ பூச்சி ஊர்வதாக ஒருவர் நம்புவதும் மாயத் தோற்றத்துக்கு உதாரணமாகும்.

முதிர்ச்சி, காது கேளாமை, கண் பார்வை மங்குதல், சமூகத்தின் புறக்கணிப்பு போன்றவை முதியவர்களிடம் மனநலக் கோளாறுகள் வருவதற்குக் காரணமாக அமைகின்றன. எதிர்ப்புணர்வும் மனச்சோர்வும் முதியோரின் நிலையை மேலும் மோசமாக்கலாம். மனநலக் கோளாறுகளை நீக்க குறைந்த அளவு மாத்திரை தரும் மருத்துவ சிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது.

## முதியோர் உளவியல் சிகிச்சைத் திட்டம்

நோயாளியை முழுமையாகப் பரிசோதித்து மதிப்பீடு செய்த பின்னர், நோயாளிக்கு ஏற்ற சிகிச்சைத் திட்டம் வகுக்கப்படுகிறது. தேவைப்படும் போது நோயாளியின் குடும்பதினரையும் சிகிச்சையில் பங்கு பெறச் செய்கிறோம். நோயாளிக்கு இருக்கும் பலம், திறன் ஆகியவற்றைக் கொண்டே, அவருக்கு உகந்த சூழலை உருவாக்குவதே எங்கள் லட்சியம் ஆகும்.

மருத்துவமனையில் கிடைக்கும் சிகிச்சை முறைகளாகத் தனிப்பட்ட உளவியல் சிகிச்சை, குடும்ப ஆலோசனை, மருத்துவம் , திறமையை மேம்படுத்துதல், புலன்களைத் தூண்டிச்செயல்படவைத்தல் போன்றன உள்ளன. அமைதிக்கான மற்றும் உடற்பயிற்சி சிகிச்சை முதியோருக்கு ஏற்படும் பல மனநலக் கோளாறுகளை வெற்றிகரமாகக் குணப்படுத்திவிடலாம். உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதன் மூலம் நோயாளியின் மன அழுத்தத்தைக் குறைத்து, வாழ்க்கை நிலையை மேம்படுத்தலாம். ✸

N.B.A. நிக்சன்,
உளவளத் துணையாளர், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா சிவனேசன்**
(ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர்)

மலர்வு: 15.01.1948 உதிர்வு: 27.09.2010
திதி: சங்கடஹர சதுர்த்தி

நினைவுகள் கோடி பசுமையாய் இதயத்தில் பாசமாய் கூடி பிரியமாய் கதைபேசி
பாதிவழியில் எமை பரிதவிக்கவிட்டு விரைந்து சென்றீரே விண்ணோக்கி
மறைந்தீர் என்றே நினைக்கவில்லை மறைந்தும்... மறையாமல் என்றென்றும்
எம் நெஞ்சில் நிறைந்திருப்பீர் உமைக்காணத் துடிக்கிறது எம் மனம்
மறக்குமோ என்றென்றும் உம் முகம்...

பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்

(9099) குடும்பத்தினர்.

# மதுபாவனை, புகைபிடிப்புப் பழக்கத்தால் ஆண்டொன்றில் 44 ஆயிரம் பேர் மரணம்

கொழும்பு, ஒக.16

மதுபானப் பாவனை மற்றும் புகைபிடிப்பதன் காரணமாக இலங்கையில் ஆண்டொன்றில் 44 ஆயிரம் பேர் வரையில் மரணமடைகின்றனர்.

இலங்கை மதுத்தடுப்பு சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர் சிசிர கோதாகொட இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

மது அருந்துவதன் காரணமாக 25 ஆயிரம் பேரும் புகைபிடிப்பதன் காரணமாக 19 ஆயிரம் பேரும் இவ்வாறு ஆண்டொன்றில் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மதுபானம் மற்றும் சிகரெட் பாவனை ஏராளமான நோய்களுக்கு முக்கிய காரணியாக அமைகிறது.

இலங்கையில் மதுபானப் பாவனை அதிகரித்து வருவதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன எனவும் மருத்துவர் கோதாகொட மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

## அச்சிடும் இயந்திரம் மற்றும் மூலப்பொருள்கள்

அச்சுத்தொழில் இயந்திரங்கள் தொடக்கம் அதற்குரிய தாள், மை மற்றும் பி.எஸ்.பிளேட் போன்ற சகல மூலப்பொருள்களினதும் முன்னோடி விநியோகஸ்தர்களாக விளங்கும் 'பாதிய றேடிஸ்' கொம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்டின் விற்பனைக் குழுவினர் யாழ்.நகர் மற்றும்அதன் புறநகர்ப் பகுதிகளிலுள்ள அச்சிடுபவர்களைச் சந்திப்பதற்கு 19.10.2011 - 21.10.2011 வரையில் யாழ்ப்பாணத்தில் இருப்பார்கள்.

**தங்களது தேவைகளுக்கும் அத்துடன் சந்திப்பு ஏற்பாடுகளுக்கும் தயவுடன் பின்வரும் நபர்களுடன் தொடர்புகொள்ளவும்.**

திரு.கிறிசாந்துஸ் 0773867401
திரு.லக்மல் 0773861207
திரு. மாதங்கன் 0785366613

# யாழ்.கே.கே.எஸ். வீதியின் நிலையோ மோசம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். கே.கே. எஸ்.வீதியின் பல இடங்களில் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

தாவடி, கோண்டாவிலுக்கு அப்பால் வீதி அகலிப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுவரும் அதேவேளை தாவடிக்கும் யாழ்.நகருக்கும் இடையில் பல இடங்களில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது குறிப்பாக கொக்குவில் சந்தி, நாச்சிமார் கோயிலடி, தட்டாதெருச் சந்தி மற்றும் பன்றிக் கோட்டு பிள்ளையார் கோயிலடி மனோகராச்சந்தி, சிவன் கோயிலடி சத்திரச் சந்திப்பிரதேசங்களில் வீதி பழுதடைந்துள்ளதுடன் வடிகால் மூடிகளும் உடைந்து போயுள்ளன.

தொடரச்சியான மழை ஆரம்பித்தால் நிலமை மோசமாகும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று இந்த வீதியூடாக பயணிப்பவர்கள்சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ-160)

## கண்ணீர் அஞ்சலி

### முத்துராசா ஸ்ரீகாந்தன் (பாபு)



நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் வசித்து வந்தவருமான முத்துராசா ஸ்ரீகாந்தன் (பாபு) கடந்த (11.10.2011) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானதை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம்.

நாவற்குழி சனசமூக நிலையத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்து இன்றுவரை எமது நிலையத்தின் வளர்ச்சிக்குப் பல வகைகளிலும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கியதோடு, நாவற்குழி விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினராக இருந்து, கழகம் விளையாட்டுத் துறையில் பல வெற்றிகளை ஈட்டிப் புகழ்பெற உதவிய அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய அருளும் வண்ணம் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாவற்குழி,
கைதடி. (9092) நாவற்குழி சனசமூக நிலையத்தினர்.

# எழுது மட்டுவாழ் மக்களைக் குடியமர்த்த பிரதேச சபை நடவடிக்கை

தென்மராட்சி, ஒக்.16

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தும் பணியில் சாவகச்சேரி பிரதேச சபையினர் அக்கறை செலுத்தியுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் சி.தெய்வேந்திரம்பிள்ளையின் வேண்டுகோளின் பிரகாரம் பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா இந்தப் பகுதியில் உள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளை இறைப்பதற்கான நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கியதையடுத்து இதுவரை 50 இற்கு மேற்பட்ட கிணறுகள் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிக்கு சென்று பார்வையிட்ட பிரதேச சபைத் தலைவர் அந்த பகுதியில் உள்ள வீதிகளை துப்புரவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதுடன் பிரதேச சபை ஊழியர்களையும் அப்பகுதி மக்களையும் இணைத்து எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை வளாகத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து பொது [illegible] வழங்கியுள்ளனர். (ம-207)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்டீபராசா இராசலட்சுமி



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி காண்டீபராசா 14.10.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினம்-சிவலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் சிவராசா - நேசமணி தம்பதியரின் மருமகளும் சிவராசா காண்டீபராசாவின் அன்பு மனைவியும் கம்சியா, காணுஜன், கார்னி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,சகோதரர்கள்:
கு.குணபாலன், கு.சஞ்சேகாந்தன், இ.ராசகுமார், இ.சேகர்,இ.ஜெயகாந்தன்.

ஞானவைரவர் கோயிலடி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

### செல்லத்துரை சந்திரகுமார்
(ஐயக்கோன் சந்திரன்)
(மினி பஸ் நேரக் காப்பாளர்)

உடுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை சந்திரகுமார் 13.10.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (ஐயக் கோன்-சட்டத்தரணி) - தவமணி தம்பதியரின் புதல்வனும் புஷ்பாவின் அன்புக் கணவரும் ஜெயம், சிவம், அனுஷா(வைத்தியர்-யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையும், தாரணி, ஜெயந்தி, யோகநாதன் (விரிவுரையாளர்-யாழ். மருத்துவ பீடம்) ஆகியோரின் மாமனும் செல்வதேவி, செல்வலஷ்மி, செல்வகுமார் (தம்பர்) காலஞ்சென்ற தவக்குமார் மற்றும் ஆனந்தகுமார், இரட்ணகுமார், வசந்தகுமார், விஜயகுமார், செல்வரஞ்சினி, செல்வராணி, நந்தகுமார் ஆகியோரின் சகோதரனும் மைத்ரேயி, அக்ஷயன், கௌதம், கிஷான், ஆருஷன், அக்ஷயா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (17.10.2011) திங்கட்கிழமை ந.ப.12.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி திரவியசிங்கம்



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி திரவியசிங்கம் 13.10.2011 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாரி முத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - பறுவதம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற திரவியசிங்கம் தவமலரின் பாசமிகு அன்புக் கணவரும் ஜெ.திரவியமலர் (இராஜ சங்கர் - பிரான்ஸ்), சுதாகர் (ஜெயசீலன் - லண்டன்), சுஜீவன் (லண்டன்), தனரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனபாலசிங்கம், ஜெயச்சந்திரன், இ.துஷியந்தி, சு.சமந்தா, ஜெ.காயத்திரி, சு.ஜானுஜா, த.சாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜெ.நிரூபிகா, ஜெ.சுஜீவா, ஜெ.சோபிகா, இந்துஷன், தனுஷன், தனுசிகா நிசாரா, கர்சனா, யனுஷன், வினுஷன் (சஸ்வின் - லண்டன்), ரூபசாந், ராஜசாந், இலக்கியா ஆகியோரின் பாசமிகு பேரனும் கதிர்காமவேல், சரஸ்வதி, காலஞ்சென்ற தங்கவடிவேல் மற்றும் சந்தியநாதன் (கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்), சிவா னந்தன், சந்திரலேகா, முருகதாஸ், வரதராஜன் ஆகியோரின் பாசமிகு மைத் துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (16.10.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible] கொள்ளவும்.

[illegible]
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கின் வசந்தத்தின் மற்றுமொரு பாரிய அபிவிருத்தித் திட்டத்தின் முழுமையான நிறைவும் அதன் திறப்பு விழாவும்

மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிநடத்தலில் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைக்கேற்ப ''வடக்கின் வசந்தம்'' அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் தள்ளாடி அரிப்பு மறிச்சுக்கட்டி வீதியின் (B0403) 18வது Km இல் அருவி ஆற்றுக்குக் குறுக்காக அமைந்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 258.80 மீற்றர் நீளமும் 7.35 மீற்றர் அகலமுமான புதிய அரிப்புப் பாலத்தின் வேலைகள் அனைத்தும் ரூ.540 மில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இப் புதிய அரிப்புப் பாலம் கௌரவ றிசாட் பதியுதீன் வாணிப வர்த்தக அமைச்சர் அவர்களின் அழைப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதி செயலணிக்குழுவின் தலைவருமான கௌரவ பஸில் ராஜபக்ஷ அவர்களினால் 16ஆம் நாள் ஐப்பசி மாதம் 2011ஆம் ஆண்டு (16.10.2011) வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

இதில் கௌரவ அமைச்சர்கள், கௌரவ பிரதி அமைச்சர்கள், கௌரவ ஆளுநர் (வடக்கு), கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான R.W.R.பேமசிறி உட்பட மற்றும் பல அரச உத்தியோகத்தர்கள் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த வேலைகள் அனைத்தும் பெருந்தெருக்கள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சின் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் எக்சஸ் எஞ்ஜினியறிங் கம்பனியினால் நிர்மாணிக்கப்பட்டது. இந்த வேலைத்திட்டம் மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கான பிரதம பொறியியலாளர் G.J.D.குரூஸ் அவர்களின் மேற்பார்வையின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பகுதி மக்களின் பல ஆண்டு கால வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டுள்ளமை ஒரு மகிழ்ச்சிகரமான விடயம் ஆகும்.

இந்தப் புதிய பாலத்தின் வாயிலாக வன்னி, மன்னார், புத்தளம் மாவட்ட மக்கள் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக அமையும்.

1. மன்னாருக்கும் புத்தளத்துக்கும் இடையே போக்குவரத்துத் தூரம் (80 Km இனால்) கணிசமான அளவு குறைந்துள்ளதுடன் பயணிகளின் போக்குவரத்து நேரம் ஒன்றரை மணித்தியாலத்தால் குறைவடைந்துள்ளது.
2. மன்னார் மாவட்ட மக்கள் குறைந்தளவு நேரத்தில் தென்பகுதி நகரங்களைச் சென்றடையும் வாய்ப்பு ஏற்படும்.
3. முசலி பிரதேசவாழ் மக்களுக்கான சகல செயற்பாடுகளும் மன்னார் தீவில் மேற்கொள்ளப்படுவதால் அவர்கள் குறைந்த நேரத்தில் மன்னார் தீவுக்கான போக்குவரத்தை மேற்கொள்ளமுடியும்.

முசலி பிரதேசத்தில் உள்ள மக்களின் அன்றாடத் தேவைகளுக்கும் மருத்துவ வசதிகளுக்கும் படகு மூலம் சென்று வந்த மக்களுக்கு இந்தப் பாலத்தை அமைப்பதன் மூலம் அவர்களின் போக்குவரத்து கஷ்டங்கள் வெகுவாக க் குறைவடைந்துள்ளதுடன் நோயாளர்களை எந்த நேரத்திலும் மன்னார் தீவுக்குக் கொண்டுசெல்லக்கூடிய வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரிப்பு பாலத்தின் மூலம் மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகள் விரைவாக முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இங்கு வசிக்கும் மீனவக் குடும்பங்கள் மற்றும் விவசாயிகளின் பொருளாதார மற்றும் வாழ்வியலின் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும்.

புதிய முதலீட்டாளர்கள் முசலிப் பிரதேசத்தினை நோக்கி நகர்வதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்தப் பிரதேசத்தில் அதிகரித்துப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

விவசாய, கடற்றொழில் மற்றும் இதர பொருள்களை இலகுவில் நகரங்களுக்கு கொண்டு சென்று சந்தைப்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

கரையோரப் பிரதேசங்களை இணைக்கும் அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகப் புதிய மன்னார் பாலம், சங்குப்பிட்டி பாலங்களின் அமைப்புக்கு அடுத்ததாக இந்தப் புதிய அரிப்புப் பாலம் மன்னார் பிரதேசத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளமையானது வடக்கு மக்களுக்கான மற்றுமொரு வரப்பிரசாதமாகும்.

**''அபிவிருத்திப் பணியில் ஒன்றிணைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்''**

*தகவல்:*

**எந்திரி.மோசஸ் மரியதாசன், மாகாணப் பணிப்பாளர் (வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.**

**அனைவரும் ஒன்று திரள்வோம்**
**அபிவிருத்தியில் ஒன்றிணைவோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றியரசர் கல்லூரியுடன் போராடி வென்றது மானிப்பாய் இந்து அணி

வலி.வடக்கு,ஒக்.16

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற 18 வயது துப்பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி பெரும் போராட்டத்தின் பின்னர் கோட்டச் சம்பியனாகியது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் அபாரமாக மோதிக்கொண்டமை பார்வையாளர்களைக் கவர்ந்தது. இந்த நிலையில் முதல் பகுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் ரசிகர்களின் ஆர்ப்பரிப்புக்கு மத்தியில் களமிறங்கி மோதிக்கொண்டன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றிக்காக இறுதி வரை போராடியது. ஹென்றியரசர் கல்லூரி அணியும் சளைக்காமல் மோதிக்கொண்டது.

ஆட்டம் முடிவடைய இறுதி ஐந்து நிமிடங்கள் இருந்த வேளை மானிப்பாய் இந்துக்கல்லூரி தனது போராட்டத்தின் மூலம் ஒரு கோலைப் பெற்று ஆட்டத்தைச் சமநிலைப்படுத்திக்கொண்டது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் 03:2 என்ற கோல்கள் அடிப்படையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வெற்றி பெற்று கோட்ட சம்பியனாகியது. (த-86)

# அரச அதிபர் கிண்ணத்துக்கான வலைப்பந்து இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஒக்.16

யாழ்ப்பாணம் செயலக நலன் புரி சங்கம் முதல் தடவையாக அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் வலைப் பந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றையதினம் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

✱தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.

✱கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து யாழ்ப்பாணம் செயலக அணி மோதவுள்ளது. (த-86)

# வெற்றி பெற்ற அணிகளின் விவரம்

யாழ். மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டத்தில் 14,16, 18,20 வயது துப்பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு

14 வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

20 வயதுப்பிரிவு அணிகளுக்கான இறுதி ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# 3 பிரிவுகளில் சென்.ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.16

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 14, 16, 18, 20 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

14 வயதுப் பிரிவுக்கான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

14 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

16 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

20 வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)



வடமாகாணத்தைச் சேர்ந்த 23 நவோதயப் பாடசாலைகளின் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியும் மோதிக்கொள்ளும் காட்சி. (த-23)

# திஹாரிய யூத் வெற்றி

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படுகின்ற பிறீமியர் லீக் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் 1ஆம் சுற்று போற்றி கடந்த 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ராஜகிரிய மொரகஸ் முல்ல விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் திஹாரிய யூத் விளையாட்டு கழகமும் ராஜகிரிய மொரகஸ்முல்ல பிரமில் விளையாட்டுக் கழகமும் மோதிகொண்டன. இப்போட்டியின் முதல் பாதியில் திஹாரிய யூத் விளையாட்டுக்கழகம் 1:0 என போட்டியை நிறைவு செய்தது. ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களை பெற்றுக் கொண்டனர். இறுதியில் போட்டியில் 3:2 என்ற புள்ளி வித்தியாசத்தில் திஹாரிய யூத் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

திஹாரிய யூத் சார்பாக அனஸ், ருக்ஸான், யாஸர் ஆகியோர் தலா ஒரு கோல் வீதம் போட்டனர். இச்சுற்றுத் தொடரில் திஹாரிய யூத் விளையாட்டுக் கழகம் கலந்து கொள்ளும் இரண்டாம் சுற்றுப் போட்டி நேற்று இடம் பெற்றது.

# சிசிலியா சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக்.16

திருகோணமலை புனித மேரி பெண்கள் கல்லூரிக்கும், மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரிக்கும் இடையில் வருடா வருடம் நடை பெறும் மரியன் செசில் வலைபந்தாட்டப் போட்டியில் புனித சிசிலியா பெண்கள் கல்லூரி சம்பியன் ஆனது.

# மைலோ வெற்றிக் கிண்ணம்; தேசிய மட்டத்துக்கு பற்றிக்ஸ்

மைலோ வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றது.

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரிக்கும் இடையே ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி இடம் பெற்றது. போட்டி ஆரம்பமாகியது முதல், இரு அணியினரும் ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக்கொண்டன. ஆட்ட முடிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# அரையிறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.16

படையினர் - பொதுமக்கள் நல்லுறவு வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ்.மாவட்டக் கழகங்களுக்கு இடையே நடை பெறும் 20/20 கிரிக்கெற் சுற்றுப்போட்டித் தொடரில் அரையிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை கட்டுவனில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினரின் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தை ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

# உருத்திரபுரம் வி.கவின் உதைபந்தாட்டம் சந்திரஉதயா, திருநகர், நாச்சிக்குடா வெற்றி

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகள்வருமாறு:

புதிய பாரதி விளையாட்டுக் கழக அணிக்கும், பரந்தன் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பரந்தன் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

உருத்திரபுரம் சந்திர உதயா விளையாட்டுக்கழக அணிக்கும் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்ட நேரத்தில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதுவும் சமநிலையில் முடிவடைந்தது.

மேலும் ஒரு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதுவும் சமநிலையில் முடிவடைந்தமையால் மேலும் ஒரு தண்டனை உதை வழங்கப்பட்டது. அதனை உருத்திரபுரம் சந்திர உதயா விளையாட்டுக்கழகம் கோல் ஆக்கிக் கொண்டது.

வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியினருக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை அந்த அணி தவறவிட்டது.


இதனால் உருத்திரபுரம் சந்திர உதயா விளையாட்டுக்கழகம் 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

திருநகர் விளையாட்டுக் கழக அணிக்கும் பரந்தன் மத்திய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், முல்லைத்தீவு இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவனே எங்களைக் காப்பாற்று...



இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடருக்கு முன் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அணித் தலைவர்.

# பங்களாதேஷ் பரிதாபம் தீவுகளின் கையில் தொடர்



பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று 3 ஆட் டங்கள் கொண்ட தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. இதில் முதலாவது ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டிருந்தது. இந்த நிலையிலேயே இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் மிர்பூரில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

பங்களாதேஷின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றிய போதும் மத்தியவரிசையில் அணித் தலைவர் ரஹிம் மற்றும் பின்வரிசையில் நமீம் இஸ்லாம், நாஸர் ஹொஸைன், அப்துர் ரஷாக் ஆகியோரது ஆட்டத்தின் மூலம் கௌரவமான இலக்கை எட்டியது. 48.5 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 220 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ரஹிம் 69 ஓட்டங்களையும், நாஸர் ஹொஸைன் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் ரோச் 3 இலக்குகளையும், ராம்போல், சமி தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி சிம்மன்ஸ், சாமுவேல்ஸ் ஆகியோரது சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 42.4 பந்து வீச்சுக்களில் 2 இலக்குகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றியைப் பெற்றுக்கொண்டது. ஆரம்பத் துடுப் பாட்ட வீரரான சிம்மன்ஸ் 80 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். சாமுவேல்ஸ் 88 ஓட்டங்களை ஆட் டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார். ஆட்டநாயகனாக சாமுவேல்ஸ் தெரிவானார். (15)

# சுருண்டது சிம்பாப்வே வென்றது நியூஸிலாந்து





சிம்பாப்வே, நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பிரன்டன் மக்கலத்தின் அதிரடி ஆட்டத்தின் மூலம் அபார வெற்றியை நியூஸிலாந்து அணி பதிவு செய்துகொண்டது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள நியூஸிலாந்து அணி முதலில் 'ரி-20' ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. ஹராரேயில் நேற்று நடைபெற்ற முதலாவது 'ரி-20' ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி, நியூஸிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ரெயிலர் மாத்திரம் ஆட்டமிழக்காமல் 46 பந்து வீச்சுகளில் 50 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு குப்தில், மக்கலம் ஜோடி அதிரடியான ஆட்டத்தை வழங்கியது. அதிரடியாக ஆடிய நியூஸிலாந்து அணி 13.3 பந்து வீச்சுக்களில் எந்தவித இல்க்கு இழப்பும் இன்றி 127 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. குப்தில் 36 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களைப் பெற்றார். மக்கலம் 46 பந்து வீச்சுக்களில் 6 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 81 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்ட நாயகனாக மக்கலம் தேர்வானார். (15)

## ரூனேக்குத் தடை

2012 இல் நடக்கவுள்ள யுரோ கிண்ண தொடருக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணி, மான்டினிகிரோ அணிக்கு எதிராக சமநிலை செய்தது.

இந்தப் போட்டியில் 'பவுல்' செய்த இங்கிலாந்து நட்சத்திர வீரர் ரூனேவுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது.

இதையடுத்து எதிர்வரும் யுரோ கிண்ணத் தொடரில் இங்கிலாந்து அணி பங்கேற்கும் மூன்று லீக் போட்டிகளிலும் ரூனே விளையாட த் தடை விதிக்கப்பட்டது.

இது இங்கிலாந்து ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (15)

# அடுத்த ஐ.பி.எல். ஏப்ரலில்

ஐந்தாவது ஐ.பி.எல். தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் மே 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இதன் தொடக்க விழா சென்னையில் நடைபெறும் என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் ஆண்டுதோறும் உள்ளூர் 'ரி-20' தொடர் நடத்தப்படுகிறது. ஐந்தாவது தொடருக்கான திகதி, தொடக்க விழா நடக்கும் இடம் ஆகியவை நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. ஹைதராபாத்தில் ஐ.பி.எல். நிர்வாக கவுன்சில் கூட்டம், அதன் தலைவர் ராஜீவ் சுக்லா தலைமையில் நடந்தது.

இந்தக் கூட்டத்திற்கு பின் ராஜீவ் சுக்லா கூறியதாவது:

ஒப்பந்த விதிமுறைகளை மீறியதாக ஐ.பி.எல். அமைப்பில் இருந்து கொச்சி டஸ்கர்ஸ் அணி நீக்கப்பட்டது. இதில் விளையாடிய வீரர்களுக்கு உரிய தீர்வு காணப்படும். இவர்கள் மீண்டும் கொச்சி அணியிலோ அல்லது வேறு அணியில் விளையாடுவார்களா என்ற முடிவு அடுத்த கூட்டத்தில் எடுக்கப்படும். மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் பாகிஸ்தான் வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கவில்லை. மீண்டும் அவர்களை எடுப்பது பற்றி விவாதிக்கவில்லை. அடுத்த முறை இதுபற்றி விவாதிப்போம்.

ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கும் வீரர்கள் களைப்படைகின்றனர் என்று கூறுவதை ஏற்று கொள்ள முடியாது. வீரர்களின் சோர்வினை தடுக்க, அணியின் பயிற்சியாளர் மற்றும் மருத்துவர்கள் இணைந்து செயல்பட வேண்டும். மேலும் வீரர்கள் போட்டி முடிந்த பின்பு களியாட்ட விருந்துகளில் கலந்து கொள்வதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று ஐ.பி.எல், அணி உரிமையாளர்களிடம் பேச உள்ளோம் - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவில் ஆயுள்வேத வைத்தியசாலை சுதேச வைத்திய அமைச்சர் அடிக்கல் நடுகை

## மூலிகைச் செய்கை குறித்தும் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.16

சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாளித்த திஸநாயக்காவினால் நேற்றுக் காலை நயினாதீவில் ஆயுள்வேத வைத்தியசாலைக்கான அடிக்கல் நடப்பட்டது.

25 லட்சம் ரூபா செலவில் நயினாதீவில் இந்த ஆயுள்வேத வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட சுதேச வைத்தியத்துறை அமைச்சர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று மூலிகை வளர்ப்பின் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

நேற்று நெடுந்தீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று மூலிகைச் செய்கையின் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

நெடுந்தீவிலுள்ள மக்களை அங்குள்ள ப.நோ.கூ. சங்க கட்டடத்தில் சந்தித்து இது தொடர்பாகக் கருத்துக்களை அமைச்சர் கேட்டறிந்துள்ளார்.

(ஓ-14)

# உடையில் தீப்பற்றி சிறுமிக்கு உடல் முழுவதும் எரிகாயங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.16

மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பு மூட்டியபோது உடையில் பட்டு தீப்பற்றியதால் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் சிறுமி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாங்குளம், ஒலுமடு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் பாலசுமித்திரா (வயது-12) என்ற சிறுமியே எரிகாயங்களுக்குள்ளானார்.

மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

(ஓ-4)

# வியாபாரியை வழிமறித்து 10 ஆயிரம் ரூபா அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வியாபாரியை மூன்று பேர் கொண்ட குழுவினர் வழி மறித்து மதுப் போத்தலால் தாக்கிவிட்டு அவரிடமிருந்த பத்தாயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றனர்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியாசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மூளாய், வட்டுக்கோட்டையில் கடந்த வியாழன் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தொல்புரம் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த வீ.தயாபரன்(வயது-38) என்பவரே தலையில் காயமடைந்தார்.

பணம் இருப்பதை அவர்கள் ஏற்கனவே அவதானித்து விட்டனர் என்றும் தாம் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது வழிமறித்து தாக்கிவிட்டு பணத்தைப் பறித்துச் சென்றுவிட்டனர் என்றும் வியாபாரி தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ-4)

## மரண அறிவித்தல்

### அருளானந்தம் செபரட்ணம்



உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த அருளானந்தம் செபரட்ணம் நேற்று (15.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பலீலாவதியின் அன்புக் கணவரும், ஜெய்சன், குயின்டஸ், மிர்ஜானா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள சிரேஷ்ட உதவி பொறியியலாளர் தி.சிவானந்தன் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி மங்கையர்க்கரசி தில்லையம்பலம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஊழியர்களும், தலைவரும், அனைத்து விவசாய சம்மேளனங்களும்
கமநல சேவைகள் நிலையம், உரும்பிராய்.

## புதிய கடைகள் விற்பனைக்கு/ வாடகைக்கு

இல.60, ஜும்மாப் பள்ளிவாசல் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு- அ.தங்கராசா அன்சன்ஸ்
0778995431, 0750434277

## "NITS INSTITUTE"

NO 70, Clock TOWER ROAD, JAFFNA.

வங்கியியல்/நிதியியல் டிப்ளோமா (DBF) ஆங்கில மற்றும் தமிழ் விரிவுரைகள் பின்வரும் பாடநெறிகளுக்கு பிரபல ஆசிரியர் திரு. நரேந்திரன் அவர்களால் 22.10.2011 பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

*கணக்கீடு ஆய்வு மற்றும் திட்டமிடல்
*இடர் நிதியிடலும் முகாமைத்துவமும்
*வியாபார கடன் வழங்கல்
*நாணய மற்றும் நிதிமுறைமை
*சர்வதேச வியாபார நிதி

மாணவர் நலன்கருதி, நேர அட்டவணை கலந்தாலோசித்து நடைமுறைப்படுத்தவுள்ளதால், ஆர்வமுள்ளோர் கீழ் குறிப்பிடப்படும் T.P ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

T.P:0778889398.

## வேலை வாய்ப்பு

திருநெல்வேலிச் சந்தையில் இயங்கும் பிரபல பலசரக்குக் கடை ஒன்றுக்கு வேலை ஆள்கள் தேவை.

01. சமையல் ஆள் (Cooks)
02. உதவியாளர்கள் (Sales men)

தொடர்பு-
கண்ணன் ஸ்ரோர்ஸ்
தொ.பே- 0777769231, 0773867712

## வீடு வாடகைக்கு

கடற்கரை வீதி (BEACH ROAD) யாழ்ப்பாணத்தில் HOLY CROSS HEALTH CENTRE அருகில் மாடிவீடு சிறு திருத்த வேலைகளுடன் வாடகைக்குண்டு. லொட்ஜ் அல்லது RESTAURANT நடத்த உகந்தது.

தொடர்பு: 021 222 7893

## கடை வாடகைக்கு

யாழ். மணிக்கூட்டு கோபுர வீதியும் ஸ்ராலி வீதியும் சந்திக்கும் இடத்தில் வெலிங்டன் படமாளிகைக்கு முன்பாக சிறிய கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு : 021 2227893

## தேவை

கல்வி நிலையம் ஒன்றுக்கு ஆங்கில ஆசிரியர் தேவை.

தொடர்பு-
0771518354, 0779595765

## நாய்கள், நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் இரண்டு வயது நிரம்பிய பெண், ஜேர்மன் செப்பேட் எட்டு மாதம் நிரம் பிய ஆண், குக்கஸ் பேனியன் குட்டிகள் பொம னேரியன் குட்டிகள் மற்றும் டெல்மனேஸன் குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-
0779185723, 0779395578,021 490 3565

## ENGLISH, SINHALA & COMPUTER CLASSES

IELTS, SPOKEN ENGLISH வகுப்புக்கள்

வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

சிங்கள வகுப்புக்கள்

பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

கணனி வகுப்புக்கள்

MS Office, DTP, Internet & E-mail, Web & Graphic Designing, Hardware & Networking, Kids Programe, ICT, GIT, C,C#, Java, VB.Net etc... பூரண தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படும்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## விற்பனைக்குண்டு

ஹயஸ் டொல்பின் வான் 59-XXXX மெனுவல் கியர் டுவல் ஏசி New Face உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0778864383

## தேவை

பண்ணை ஒன்றுக்கு ஆடு, மாடு என்பன தேவை

தொடர்பு-
771518354, 0779595765

## VACANCY

PART TIME ELECTRONIC TECHNICIANS

இலத்திரனியல் பொருட்கள் பழுது பார்க்கும் துறையில் குறைந்தது 3 வருட அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

NORTH LEAD
COMPUTER SALES & SERVICE CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 021-222 4459, 0772533390, Fax : 021-222 4460.

## கடை வாடகைக்கு

யாழ். மாநகரசபைக்குட்பட்ட பஸ்ரியன் சந்திக்கும் யாழ். சிறைச்சாலைக்கும் இடையில் பிரதான வீதியில் 85அடி நீளமும் 26அடி அகலமும் கொண்ட சகல வசதிகளுடன் அமைந்த ஹொட்டல் ... கடை ஒன்று ...

தொடர்புகளுக்கு- 0779471069

## SPECIAL BATCH!

வங்கிகளில் பணிபுரியும் எமது பட்டதாரி மாணவர்கள் எமது Degree Certificate மூலம் பதவிநிலைகளில் தரமுயர்த்தப்பட்டுள்ளதை முன்னிட்டு ஆரம்பமாகியுள்ள விசேட பிரிவு!

**B.Sc. in Computer Science**
Duration: 3 Years(O/L) or 2 Years(A/L) or 01 Year(HND|Adv. Dip.)

**B.Com. with Computer Application**
Duration: 3 Years(O/L) or 2 Years(A/L) or 01 Year(HNDA|Adv. Dip.)

**Post Graduate Diploma in Comp. Sc. >> M.Sc.**
Duration: 01 Year (Any Degree)



வங்கிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கான அரிய சந்தர்ப்பம்!

உடனடியாக கற்கைநெறியில் இணைந்து பட்டதாரியாகுங்கள்! பதவிநிலைகளில் உயருங்கள்!!



Isles International University இனது Next Convocation 2012 Januaryல் UK Campus இல்

எமது மண்ணிலேயே பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்து Degree Certificateயை வழங்கிவரும் தன்னிகரற்ற தனித்துவமான நிறுவனமாக எப்போதும் விளங்கிவரும்

NORTH LANKA IIT
#113, NAVALAR ROAD, JAFFNA. Phone: 021 567 7774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ புலனாய்வாளர்கள் எனக் கூறிவிட்டு நகைகளைக் கொள்ளையிட்ட மூவர் மடக்கிப்பிடிப்பு

## விழிப்புக் குழுவினர் சாமர்த்தியம்; உசனில் சம்பவம்

தென்மராட்சி, ஒக் 16

இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திய சிங்கள மொழியில்பேசியவாறு வீட்டாரை மிரட்டி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட குழு ஒன்று அப்பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவிடம் மாட்டிக்கொண்டது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமைஇரவு 9.30 மணிக்கு உசன் விடத்தற்பளை வீதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆறுபேர் கொண்ட குழுவினர் தாம் புனர்வாழ்வளிக்கப்பட்டு அண்மையில் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளை விசாரணை செய்ய வந்துள்ளதாகச் சிங்களத்தில் பேசி வீட்டாரை மிரட்டியுள்ளனர்.

துரைசிங்கம் உதயதர்சினி எனும் பெண்ணொருவரின் வீட்டினுள் புகுந்த இவர்கள் அங்கிருந்தவர்களை அழைத்து பிரதேசத்திலுள்ள புலி ஆதரவாளர்கள் மற்றும் படையினரிடம் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ளோர் தொடர்பான தகவல்களைத் திரட்டவந்துள்ளதாகக் கூறி அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்களை கேட்டுள்ளனர்.

நிலைமையை அறியாத வீட்டார் பயம் காரணமாக ஆவணங்களைக் கொடுக்க சிறிது நேரத்தில் தாம் கொண்டுவந்த பையிலிருந்த கூரிய கத்தியொன்றை எடுத்த நபர் ஒருவர் வீட்டிலிருந்த அனைவரையும் கத்தி முனையில் மிரட்டி வைத்திருக்க ஏனையோர் வீட்டிலிருந்த தங்கச் சங்கிலி, மோதிரம் மற்றும் கைத்தொலைபேசி ஆகியவற்றை அபகரித்துக் கொண்டு ஓடியுள்ளனர்.

அப்போதுதான் வந்தவர்கள் கொள்ளையர்கள் என்று உணர்ந்த வீட்டார் கூக் குரல் இட ஆரம்பித்தனர் .அத்தடன் தமது பகுதி கிராம அலுவ லருக்கும் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தனர்.

கிராம அலுவலர் இரவு கடமையில் இருந்த சிவில் பாதுகாப்புக் குழுவுக்குத் தகவல் கொடுக்க கொள்ளைக் கும்பலின் வரவுக்காக அவர்கள் காத்திருந்தனர்.

அப்போது அந்த வழியாக சந்தேகத்துக்கு இடமாக வந்த ஓட்டோவை மறித்து விசாரித்தபோது அப்பகுதி முகாமில் பணியாற்றும் இராணுவ சிப்பாய்க்கு காய்ச்சல் என்றும் அவரை அவசரமாக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்வதாகவும் சிங்களத்தில் கூறியுள்ளனர் ஓட்டோவில் சென்றவர்கள்.

இவர்களின் பதிலில் சந்தேகம் ஏற்பட சம்பந்தப்பட்ட வீட்டாருடன் தொடர்புகொண்டு அவர்களை வரவழைத்தபோது கொள்ளையர்கள் வசமாக மாட்டிக்கொண்டனர்.

உடனே கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அங்குவந்த பொலிஸார் பிடிபட்ட மூவரையும் ஓட்டோவையும் கொண்டுசென்றனர்.

மற்றையமூவரும் மோட்டார் சைக்கிளில் தப்பியோடிவிட்டனர்.

சம்பவத்தில் மாட்டிக்கொண்ட மூவரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்றும் சரளமாக சிங்களம் பேசக்கூடியவர்கள் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகள்மூலம் தெரியவந்தது.

இதேவேளை கொள்ளையர்களில் ஒருவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலியைச் சேர்ந்த சிங்கள மாணவர் என்று கூறப்படுகிறது. (ஓ-10- 207)

---

## 25 பவுண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணுவில் கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த திருமணமான சுமார் 30 வயதுடைய பெண்ணும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த ஆண் ஒருவரும் நெடுந்தீவு நோக்கிச் சென்றுள்ளனர் இவர்களை நெடுந்தீவைச் சேர்ந்த நபர் ஒருவரே படகில் ஏற்றிச் சென்றுள்ளார்.

கடலில் படகு பயணித்துக் கொண்டிருந்தவேளை பிரஸ்தாப பெண்ணின் 25 பவுண் நகைகளையும் அபகரித்துக் கொண்டு அவரைக் கடலில் தள்ளி வீழ்த்திவிட்டு தப்பிச் சென்றனர் படகோட்டியும் மற்றைய நபரும்.

கடலில் நீந்தியபடி பிரஸ்தாப பெண் நீண்டநேரம் தத்தளித்துள்ளார். இதனைக் கண்ட கடற்றொழிலாளர்கள் கடற்படைக்குத் தகவல் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து பெண் மீட்கப்பட்டு நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவுப் பொலிஸாருக்கு அந்தப் பெண் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் 25 பவுண் நகையை அபகரித்துச் சென்ற நபரும் படகு செலுத்திச் சென்ற நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ-14)

---

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினரும் அறிவித்திருந்தனர். ஆனால் அது நடைபெறவில்லை. கொழும்பு உட்பட 23 உள்ளூராட்சி சபைகளுக்கு நடந்த தேர்தலில் அமைச் சர்கள் முழுக் கவனத்தையும் செலுத்தியதால் பேச்சைப் பிற்போட்டுள்ளதாக அரச தரப்பு அறிவித்தது.

ஒத்தி வைக்கப்பட்ட அந்தப் பேச்சு இன்று (ஒக்ரோபர் 16) நடைபெறும் என்று அரச தரப்பில் ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்று பேச்சு நடப்பது குறித்து எந்த அறிவித்தலும் அரச தரப்பால் தமக்குத் தரப்படவில்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

''மாதத்துக்கு ஒரு தடவை என்ற ரீதியில் இல்லாமல் இந்தத் தடவை, தொடர்ச்சியாக மூன்று தினங்கள் பேசி தீர்வுக்கான அடித்தளம் ஒன்றை ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று அரச தரப்பிடம் நாம் கேட்டுள்ளோம். அதற்கான திகதிகளைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தோம். ஆனால், அரசு அதற்கு நேற்று வரை பதிலளிக்கவில்லை'' என்று தெரிவித்தார் சுரேஷ். (உ-15)

---

## ஆஸியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்வதில் கனேடியப் பிரதமர் உறுதியாக இருக்கிறார். அரசின் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி தராது போனால் 2013ல் சிறிலங்காவில் நடைபெறவுள்ள கொமன் வெல்த் தலைவர்களின் மாநாட்டைப் புறக்கணிக்கப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டில், இது தொடர்பாகக் கலந்துரையாடப்படும் என்று தாம் எதிர்பார்க்கிறார் எனவும், பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் தனது நிலைப்பாட்டை அங்கு தெளிவுபடுத்துவார் என்றும் கனேடியப் பிரதமரின் தொடர்பாடல்களுக்கான இணைப் பணிப்பாளர் அன்ரூ மக் டௌகல் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்துக்கு முன்னர் நடத்தப்பட்ட வட்டமேசைக் கலந்துரையாடல் ஒன்றில், பிரதமர் ஸ்ரீபன் ஹாபர் இந்த விவகாரம் தொடர்பாக வெளிப்படுத்திய நிலைப்பாட்டில் இருந்து தடுமாறவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்திருந்த கனேடியப் பிரதமர், மனிதஉரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்துலக விசாரணைகளுக்கு சிறிலங்கா இடமளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

ஆனால் இந்த விவகாரம் குறித்து கொமன்வெல்த்தில் கலந்துரையாடத் தேவையில்லை என்று தமது நாடு கருதுவதாக கனடாவுக்கான இலங்கையின் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா கூறியுள்ளார்.

பேர்த்தில் பிளவுகளை உருவாக்க தாம் விரும்பவில்லை என்றும், கனடாவும் அதையே விரும்பும் என்று கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற கொமன்வெல்த் மாநாட்டிலேயே 2013ல் சிறிலங்காவில் கொமன்வெல்த் தலைவர்கள் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டு விட்ட நிலையில், மீண்டும் இந்த விவகாரத்தை கையில் எடுப்பதை இலங்கை விரும்பவில்லை என்றும் அவர் மேலும் தெளிவுபடுத்தினார். (உ)

---

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத் தொடரில் இலங்கை நெருக்கடிகளை - போர்க் குற்றச்சாட்டுக்களுக்கான சர்வதேச விசாரணையை ஏற்குமாறு வலியுறுத்தப்படக்கூடிய நிலையை - எதிர்கொள்ளும் ஆபத்தை முகம் கொடுத்துள்ள அரசு அதற்கு முன்பதாகத் தேர்தலை நடத்தி தமிழ் மக்களுக்குப் பிரச்சினை ஏதும் இல்லை என்று காட்ட முற்படுகிறது அரசு - என்று தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர். (உ-15)

---

## மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளன. இவற்றின் மீது பிறப்பிக்கப்படும் அழைப்பாணை எதையும் மஹிந்தவோ இலங்கை அரச தரப்பினரோ பெற்றுக் கொள்ளாமல் திருப்பியனுப்புவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த வழக்குகளுக்கு தமிழர்கள் சார்பில் ஆஜராகும் புரூஸ் பெஃபயின் யோசனையின்படி புதிய உத்தரவொன்றை அமெரிக்காவின் கொலம் பியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி கோ்டெல்லி பிறப்பித்துள்ளார். (ஒ-10)

---

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளையும் அமைச்சர் நிமல் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் போருக்குப் பின்னரான இலங்கை அரசியல் முரண்நிலை, ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அரசியல் தீர்வு முயற்சி என்பன குறித்து ஆராயப்பட்டதாக அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச அரங்கில் இலங்கை எதிர்கொண்டு வரும் போர்க்குற்றச் சாட்டுக்களைச் சமாளிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவக் கோரியே அமைச்சர் சிறிபால, எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசினார் என்று மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (உ-10)


### விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண்,பெண் நாயும்,6 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண்,பெண் நாயும்,45 நாள் பூர்த்தியான காலிக்குயின் ஆண் ,பெண் குட்டிகளும்,45நாள் பூர்த்தியான பொக்கட்ஸ்வெனியர் ஆண்,பெண் நாய்க்குட்டிகளும், வண்டம்,சில்கிவான் கோழி,மணிதரா,4மாதசினையுடைய யமுனாபாறி ஆடும் விற்பனைக்கு. தொடர்பு:லி.மயூரன் , இல209,பலாலிறோட் , ராஜவீதி முன்பாக, கோண்டாவில்.

# VACANCY Join us and make a difference

Our company is involved in educational services, promoting international qualifications and we are an Approved Training Centre, Examination Centre and the Implementation Partner of City & Guilds UK, for public & private sector projects.

With the current growth of business, our company requires the services of dynamic individuals with career aspirations in below fields. This is an ideal opportunity for you to become a member of the leading technical education provider.

**Lecturers** [Part-Time]

We are looking for dynamic individuals who can drive our mission forward by assisting us to effectively deliver our Diplomas, Adv – Diplomas and Graduate programmes. The candidate should be passionate about teaching and guiding the fresh minds of the students to enhance their skills.

**Vacancies exist for below programmes:**

Civil Engineering
Quantity Surveying
Motor Vehicle Engineering
Mechanical Engineering
Electrical Engineering
Electronics Engineering
Telecommunication Engineering
Refrigeration & Air Conditioning

- Applicants should have appropriate qualifications in the subject area.
- Previous experience in higher education and relevant industry experience will be an added advantage.
- Importantly, applicants should possess a good command of communication & presentation skills, especially in English language.
- All chosen applicants will be expected to demonstrate their presentation skills as part of the recruitment process.

**Receptionist cum Customer Relations Executive**

Applicants should have studied up to A' Levels, possess excellent communication skills and have commitment towards the tasks assigned.

**Facilitators for an International English Examination** [Part-Time]

The facilitator will be responsible for conducting an International English examination. She/he must have a good command of English and be able to use the language to a high degree of skill in order to elicit language at an appropriate level from the candidate.

**The Ideal Candidate**

- appropriate English language teaching qualifications
- proven professional competence
- ability to work on an On – Call Basis
- willing to travel

All chosen applicants will be expected to take part in a training program as part of the recruitment process.

A competitive remuneration package in line with the applicants' qualifications, experience and skills will be offered.
If interested, please email or forward your curriculum vitae to the following address within 7 days time of this advertisement.

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
No. 207, Navalar Road, Jaffna.
Email : jaffna@skillsinternational.lk

City & Guilds
Implementation Partners

The Leader in Technical Education
Colombo | Kandy | Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

Elephant houseஇல் ஐஸ்பழ வியாபாரம் செய்வதற்கு முச்சக்கர வண்டி சாரதிகள் தேவைப்படுகின்றனர். மேற்படி தகுதியுடையோர் தொடர்புகொள்ளவும். சாரதி அனுமதிப்பத்திரம் தேசிய அடையாள அட்டை அவசியமானது.

இல.56 நீராவியடி, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0777708861, 0779910154, 0214918407

## பிரத்தியேக வகுப்பு

A/L இணைந்த கணிதம் , O/L Maths (Paper Class) வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். T.P: 0771651621

## வீடு விற்பனைக்கு

கல்வியங்காட்டுச் சந்திக்கும் 3 ஆம் கட்டைக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0778048410

## Land for Sale

A plot of commercial property extent of 13.65 perches facing Colombo- Puttalam Main road, at the heart of wattala town is available for sale.
For further details please contact
0773487468
jerseytex.srilanka@gmail.com

## உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரி.வி என்ரர்பிரைஸ்ஸ் (பிறைவேற்) லிமிட்.
DHL முகவர்
11Kg இற்கு அதிகமான பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849

## ரூபா 50,000/- க்கு

மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

### ஐஸ் கிறீம் இயந்திரம்

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பாமசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

BRAND NEW

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்லேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன். Price Rs.99,000/- upwards
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

## கார் விற்பனைக்கு

19-XXXX என்னும் தொடர் இலக்க TO-YOTA TERCEL SILVER நிறமுடைய கார் உடன் விற்பனைக்கு உண்டு.
T.P: 0776447001

## தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

MOBILE NET MCS COMPUTER SERVICES

BIT
வித்துவானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo School of Computing

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Thu 4.30-5.30 PM

MCS
Supported By UNDP/JRRP

324, Palaly Road, Parameswara Junction
விண்ணப்பப்படிவங்களிற்கும் பதிவுகளுக்கும் 17.10.2011 க்கு முன் நேரில்

Course fee Free
Diploma courses, BCS-UK, IELTS, TOEFL, CCNA, Oracle Java, Engineering-USA

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிர்ங்கள்

## உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS

### திருமுருகன் கொம் நெற்

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

## உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering Qualifications

Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

### City & Guilds Progression Path

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
Professional Engineer (Equivalent to BEng-UK)
Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING | SCOT

SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 .10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரீச்சம் பழம்

தினமும் இரவில் படுக்க செல்லும் முன்னர் ஒரு டம்ளர் காய்ச்சிய பசும்பாலையும், இரண்டு பேரீச்சம் பழத்தையும் உண்டு வந்தால் உடல் நல்ல பலம்பெறும். புதிய இரத்தமும் உண்டாகும். தோல் பகுதிகள் மிருதுவாகவும், வழுவழுப்பாகவும் இருக்கும். கண்சம்மந்தமான கோளாறுகளும், நரம்பு சம்மந்தமான கோளாறுகளும் நீங்கும். தொற்று நோய் கிருமிகள் நம்மை அணுகாது. பல்சம்மந்தமான வியாதிகளும் குணமடைந்து, பல் கெட்டியாகும்.

30 ஆண்டுகளுக்கு மேல் நாட்டின் அனைத்து அலுவலகங்களினதும் மாணவர்களினதும் அபார செயற்பாட்டிற்கு உறுதுணையாக நின்ற எம்மிடமிருந்து ஒரு விசேட சலுகை.



அவலொன்
70 & 80 gsm
100 பைக்கற்றுகளுக்கு
5 பைக்கற்றுகள்
இலவசம்.

30 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை

ஐப்பசி 17-31 வரை



| | | | | |
|---|---|---|---|---|
| 80 A4 | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 455/- |
| 70 A4 | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 400/- |
| 80 A3 | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 990/- |
| 70 A3 | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 880/- |
| 80 Legal | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 650/- |
| 70 Legal | 100 | பைக்கற்றுகள் தலா | ரூபா | 570/- |

AVALON
PHOTO COPY PAPER

AWARDED Superbrands SRI LANKA

**ஆசீர் வணிக நிலையம்**
202A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:021 2225485

**பேப்பர் ஹவுஸ்**
300, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:021 2222783 / 021 2225343

**ஜெயராம் களஞ்சியம்**
92, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021- 2226452

**A P Enterprises** 39, மலிபன் வீதி, கொழும்பு 11.
தொ.பே:2334656-8, 2328047, 2329736, 2449855, 2439137 பெக்ஸ்:2447576, 2439094 மின்னஞ்சல்:sales@avalon.lk

அவலொன் - அனைத்துப் பொறிகளுக்கும் உகந்த ஒரேயொரு கடதாசி.

GARADS

ORIFLAME

Face of The Year COMPETITION



WP/GT/3406



Prizes

முதலாவது வெற்றியாளருக்கும் ஒப்பனைக் கலைஞர்/ நண்பருக்கும் இரண்டு நாள் பாங்கொக் சவாரி

வெற்றியாளருக்கு ஒறிபிளேம் சஞ்சிகையின் முழுமையான ஒரு தனிப் பக்கத்தில் பேட்டி

இறுதி 10 பேருக்கு 60 வினாடிகளுக்குள் வேண்டியளவு ஒறிபிளேம் தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் Warehouse Race இல் பங்குபற்றும் வாய்ப்பு.

ORIFLAME SWEDEN

**Face of the Year விண்ணப்பம**

- இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து ஒப்பனை செய்ய முன்னரும், ஒப்பனைக்குப் பின்னரும் புகைப்படம் ஒன்றை இணைத்து அருகிலுள்ள ஒறிபிளேம் கிளையில் கையளிக்கவும். அல்லது இல.77, தர்மபால மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
- செப்டம்பர் 26 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஒறிபிளேம் அழகுசாதன நிபுணர்களினால் 20 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், அவர்களது புகைப்படங்களை எமது பேஸ் புக இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.
- அதன்பின் ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை பேஸ் புக் மூலம் அப்புகைப்படங்களுக்கு ரசிகர்களின் விருப்பம் கணிக்கப்படும்.
- டிசம்பர் மாதம் நடைபெறும் நேரடி நிகழ்வில் இறுதி பத்து பேரில் முதலாவது வெற்றியாளர் தெரிவுசெய்யப்படுவார்.

**விண்ணப்பம்**
முழுப் பெயர்:.......................................
.......................................
ஆலோசகர் இல:.......................................
தே.அ.அ.இல:.......................................
கையடக்கத் தொலைபேசி இல:.......................................

**விண்ணப்பம்**
முழுப் பெயர்:.......................................
.......................................
ஆலோசகர் இல:.......................................
தே.அ.அ.இல:.......................................
கையடக்கத் தொலைபேசி இல:.......................................

ORIFLAME SWEDEN

மேலதிக விபரங்களுக்கு 072 7980649, www.oriflame.lk அல்லது www.facebook.com/oriflamelk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.peoplesbank.lk

# மக்கள் மனமறிந்த மக்கள் சேவையால்

# வடக்கிற்கு தந்திடும் மறுமலர்ச்சி

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்மைதங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனையின்படி மக்கள் வங்கியின் பொன்விழாவையொட்டி சமூகநலன் கருத்திட்டமாக, மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்புடனும் மீள் குடியேற்ற அமைச்சினாலும பொருளாதார அபிவிருத்தி அமைச்சினாலும் வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடனும் இலங்கை இராணுவப்படை உட்பட அரச நிறுவனங்களின் உதவியுடனும் மதவாச்சி - மன்னார் பாதையில் மடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மக்கள் வங்கியின் பொன்விழா வீடமைப்புக் கருத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பெசில் ராஜபக்ஷ அவர்களால் 2011 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி வைபவரீதியாக திறந்து வைக்கப்படும்.**

வங்கித்துறையின் வசதிகளை வடக்கு கிழக்கு மக்களுக்கு எடுத்துச் சென்ற மக்கள் வங்கிக்கு அப்பிரதேசங்களில் உள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் எண்ணிக்கை 100 இலும் அதிகமாகும். யுத்தம் உச்சக்கட்டத்தில் நடைபெற்ற காலஎல்லையிலும் மக்கள் வங்கியானது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவையை வழங்கியதுடன், குறித்த பிரதேச மக்களுடனான உறவினையும் பேணி வந்தது. வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், கைஉதவி, விதாதா போன்று பல்வேறு திட்டங்கள் ஊடாக வடக்கு கிழக்கு பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதிச் சலுகையின் மொத்த பெறுமதி ரூபா 4,134 மில்லியன் ஆகும்.

முழு இலங்கைவாழ் மக்களுக்கும் பூர்ணமான நிதி வசதியினை வழங்கவும் சிறப்பான வங்கிச் சேவை அனுபவத்தினை வழங்கவும் மக்கள் வங்கி அர்ப்பணிப்புடன் திடசங்கற்பம் கொண்டுள்ளது.



**அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ**
**இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் சனாதிபதி**

மக்கள் வங்கி பொன்விழா வீடமைப்பு கருத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வை முன்விட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தேசத்தின் ஒரு முதன்மை அரச வங்கி என்ற வகையில் கடந்த ஐந்து தசாப்த காலமாக மக்கள் வங்கி இலங்கையின் வங்கித் தொழிற்துறையில் முன்னணியில் இருந்து வருகின்றது. சமூகத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் சேவையை வழங்கி வரும் இவ்வங்கி பல்வேறு வகையான வங்கிச் சேவைகள் உற்பத்திகளின் ஊடாக எல்லா சமூகத் தளங்களுக்கும் ஊடுருவி ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது. அந்த வகையில் அது நாட்டின் மிகவுமே நம்பிக்கையான ஒரு வங்கியான இருந்து. பல இலட்சக் கணக்கான மக்களின் மனங்களை வென்று வங்கித் தொழிற்துறையில் பல புதிய வழிகளைத் திறந்துள்ளது.

தற்போதைய மோதலுக்கு பிந்திய சூழ்நிலையில் தேசத்தை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் பணிகளுக்கு இவ்வங்கியின் பங்களிப்பு ஈன்று குறிப்பிடத்தக்கதாகும். பயங்கரவாதம் ஒழித்துக் கட்டப்பட்டதன் பின்னர் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தனது சேவைகளை முதல் முதலில் விரிவுப்படுத்திய நிதி நிறுவனம் மக்கள் வங்கியாகும். அதன் மூலம் நீண்டகாலமாக அப்பகுதிகளில் தமது வாழ்வாதாரங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு தனது சேவைகளைப் பெற்றுக் கொடுத்தது.

மக்கள் வங்கி தனது பொன்விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக வடபகுதி மக்களுக்கு தனது சேவைகளை மேலும் விரிவுப்படுத்தும் வகையில் வங்கியின் பிரதான சமூகப் பொறுப்பு, கருத்திட்டமாக வீடமைப்பு கருத்திட்டத்தை முன்னெடுத்தமை காலத்திற்கு ஏற்றதும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

இந்த அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய மீளக்குடியேற்ற அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, இலங்கை இராணுவம், ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கி ஊழியர்களை நான் பாராட்டுகிறேன். இத்தேசிய கருத்திட்டம் வடபகுதி மக்களின் வாழ்க்கையை புத்துயிரளிக்கவும், புதிதாக கிடைத்துள்ள சுதந்திரத்தை அர்த்தமுள்ள வகையில் அனுபவிக்கவும் உதவும் என நான் நம்புகிறேன்.

மக்கள் வங்கியின் பொன் விழா வீடமைப்புக் கருத்திட்ட முன்னெடுப்புக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதன் அங்குரார்ப்பண நிகழ்வு முழுமையாக வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.



**கௌரவ பசில் ராஜபக்ஸ**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்**

மக்கள் வங்கியின் பொன்விழா கொண்டாட்டங்களின் பிரதானமானது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களால் வழங்கப்பட்ட பொது வசதிகள் மற்றும் நன்கொடைகள் ஊடாக வடக்கு கிழக்கு மக்களுக்கு 50 வீடுகளை நிர்மாணிப்பதே.

கடந்த 50 ஆண்டுகளாக மக்கள் வங்கி கிராமபுரமக்களுக்கு, விவசாயிகளுக்கு, சிறிய மற்றும் நடுத்தர தொழிதுறையாளர்களுக்கு மற்றும் சாதாரண வர்த்தக வங்கிச் சேவைகளுக்கு அளப்பரிய பங்களிப்பு செய்து வருவதுடன் தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியிற்கும் அளப்பரிய ஒத்துழைப்பினை வழங்கி வருகிறது.

கடந்த 50 ஆண்டுகால செயற்பாடுகள் மூலம் மக்கள் வங்கி உண்மையான மக்களின் வங்கி என்பதை நிரூபித்துள்ளது.

வடக்கு மக்களின் வாழ்க்கைதரத்தை உயர்த்த மக்கள் வங்கி எடுத்துள்ள செயற்திட்டத்திற்கு நான் வாழ்த்து தெரிவிப்பதுடன் இவ்வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து செயல்பாடுகளும் வெற்றியளிக்க வாழ்த்துகிறேன்.



**கௌரவ எம்.எச் குணரத்ன வீரகோன்**
**மீளக்குடியேற்ற அமைச்சர்**

மூன்று சகாப்த காலமாக நிலவிய பயங்கரவாத கொடுமைகளிலிருந்து நாட்டை மீட்டெடுத்த அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழ் இலங்கைக்கு எழிலையும் செழிப்பையும் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக இதனை மக்களுக்கு கையளிக்கக் கிடைத்துள்ளது.

மீள் எழுச்சி பெறும் வடக்கின் சுபீட்சத்திற்குப் பொறுப்பாகச் செயல்படும் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலில் எமது அமைச்சின் அனுசரணையுடன் மக்கள் வங்கி தனது 50 வது ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடும் இந் நாளிலே சமூகப் பணியைக் கருவாகக் கொண்டு பயங்கரவாதிகளிடம் துயரங்களை அனுபவித்து வந்த 50 குடும்பங்களின் விடிவிற்காக மடுவில் 50 வீடுகளை நிர்மாணித்துள்ளமைக்காக மக்கள் வங்கியின் கௌரவ தலைவர் உற்பட அனைத்து ஒழியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீள்குடியேற்றம் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் அரசு மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு அதன் மூலம் நாட்டின் அபிவிருத்திற்கும், அம்மக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள அரசின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. அவ் எதிர்பார்ப்பை அடைந்து கொள்ளும் பணியில் சகல சமூகப்பணிப்பாளர்களையும் கைகோர்த்து இணைந்து கொள்ளுமாறு இச்சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுப்பதுடன், இருளில் இருந்து ஒரு ஒளிமயமான வாழ்க்கைக்கு திரும்பியுள்ள இவ்வீடுகளைப் பெற்றுக் கொள்கின்ற பயனாளிகள் சகலரினதும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற வேண்டுமென மனப்பூர்வமாக இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்தனை செய்கிறேன்.



**கௌரவ ரிசாட் பதியூதீன்**
**கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்**

இலங்கையில் மக்களின் மனதை பெரிதும் வென்ற நிதி நிறுவனமான மக்கள் வங்கி தமது பொன்விழாவினை முன்னிட்டு மடு பிரதேசத்தில் யுத்தத்தால் நிர்கதியான 50 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து வழங்குவதை மிகவும் உயர்ந்த தரத்தில் பாராட்ட வேண்டியதொரு விடயமாக நான் கருதுகிறேன். மக்கள் வங்கியின் தலைவர் உட்பட ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும். இதனூடாக இத்தேச மக்களின் அபிவிருத்திக்காக மக்கள் வங்கி எடுக்கும் நடவடிக்கைகள் தெளிவாக விளங்குகிறது



**கௌரவ விநாயகமூர்த்தி முரளீதரன்**
**மீளக்குடியேற்ற பிரதி அமைச்சர்**

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் நிர்கதியான அனைத்து மக்களுக்கும் வீடுகளை பெற்றுக் கொடுக்க மீளக்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முதல் கட்டமான மதவாச்சி மன்னார் வீதியில் மடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 50 புதிய இல்லங்கள் மக்களுக்கு இன்று வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு பூர்ண அனுசரணை வழங்கிய மக்கள் வங்கி தலைவர் உட்பட ஊழியர்களுக்கும் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கிய அரச நிறுவனங்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.



**சியம்பளகஸ்வேவா விமலசர பிக்குகள் -**
**பிரதான மத குரு, வடக்கு மற்றும் கிழக்கு**

மக்கள் வங்கியின் 50வது வருட நிறைவையொட்டி நாடுபூராகவும் சமுக நலன் கருதி பல நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றது. அவற்றுள் மிகவும் விஷேடமானது வவுனியாவின் மடு பிரதேசத்தில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள மக்களுக்கு 50 வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கும் விஷேட திட்டம் ஒன்று மக்கள் வங்கியின் தலைவர் உட்பட பிரதான அதிகாரிகளின் தலைமைத்துவத்தில் நடாத்தப்பட்டது. இரண்டு வருடங்களுக்கும் அதிகமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவ முன்வந்ததற்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம். தமிழ், சிங்கள மக்கள் என இரு பிரிவினர்களினதும் நலனுக்காக பொதுவாக இத்திட்டத்தை நடாத்தியது இத் தேசத்தின் ஒற்றுமையைத் தூண்டும் ஒரு செயற்திட்டமாகும். இது போன்ற திட்டங்களை எதிர்வரும் காலங்களில் மக்கள் வங்கி முன்நின்று நடாத்த அக் குழுவினருக்கு இறைவன் பலத்தையும், சக்தியையும் வழங்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.



**அருட்தந்தை. ராசப்பு ஜோசப் ஹிமி பானே**
**கிறிஸ்த்தவ பிரதான மத குரு**

மக்கள் வங்கியின் 50 வருட பூர்த்தியினை கொண்டாடும் இந் நிகழ்வில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் மன்னாரிலே வங்கிக்கிளை ஒன்றிருப்பதையிட்டும் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வங்கின் நற்பணியை பாராட்டும் வகையில் கடந்த 4 வருடங்களாக தொடர்ந்து மக்களின் விருப்பத்திற்குரிய வங்கியாக தெரியப்பட்டுள்ளது. இதற்கு நான் வங்கியின் தலைவர் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். யுத்தத்தின் பின் மடுரோட் எனும் இடத்தில் தலா ரு. 1,000,000 செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த 50 வீடுகளானது தமிழ் சிங்கள மக்கள் இருவருமே ஒற்றுமையாக வாழ வழிவகுத்துள்ளது. அதுமட்டுமல்லாது புந்தளத்தில் வைத்தியசாலையொன்றின் மேம்பாட்டிற்கும் கிளிநொச்சியில் பாடசாலை ஒன்றிற்கான உதவிகளையும் வழங்கியுள்ளதற்கு நன்றிகளை தெரிவிக்கின்றோம். இத்திட்டத்திற்கான முதல் மக்கள் வங்கியினது ஊழியர்களிடமிருந்தே வந்தது என்பது தனித்துவமான விடயமொன்றாகும். இவ்வங்கியிற்கு எனது மனமார்ந்த நன்றிகளுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



**சிவ ஸ்ரீ. வைத்தியநாத குருக்கள்-**
**இந்து பிரதான குருக்கள் வவுனியா**

வவுனியாவிலே மக்கள் வங்கியின் சேவையினால் பல மக்கள் பாரிய பயனைப் பெற்றுள்ளார்கள். அவர்களின் சேவைகளிலே நானும் பங்காற்றியுள்ளேன் என்பதில் பெருமிதம் அடைகின்றேன். மக்கள் வங்கி தற்பொழுது இடம்பெயர்ந்த மக்களுக்காக மடுவில் வீடுகளை நிர்மாணித்து கொடுக்கவுள்ளது இந்த உதவி அம்மக்களுக்கு மறுவாழ்வளிப்பதைப் போலாகும், அவர்கள் செய்த முற்கால புண்ணியத்தின் பயனே அவர்களுக்கு இவ்வாறான வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு இந்த உதவி ஊன்றுகோலாக அமையும். மக்கள் வங்கி செய்துள்ள இச் சேவை மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்தத் திட்டத்தை ஒழுங்குபடுத்திய சகல அதிகாரிகளுக்கும் நீண்ட ஆயுளும் நல் வாழ்வும் கிட்ட வேண்டும் என பல கோடி முறைகள் இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.



**மௌலவி மொஹமட் அசீம்**
**சோனகத் தெரு - மன்னார்**

மன்னார் மாவட்டமானது யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட ஓர் பிரதேசமாகும். இது போன்ற பிரதேசங்களுக்கு இவ்வாறான உதவிகளை செய்த மக்கள் வங்கியிற்கு எனது ஆசிர்வாதங்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டடு இருந்த வேளையிலே இவ்வாறான ஒரு உதவி மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டது மிகவும் பாராட்டுவதற்குரிய ஒரு விடயமாகும். தமது ஊழியர்களின் பங்களிப்பில் இந்த 50 வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்து இம் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளது என்பதை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இதைப்போலவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல மக்கள் இந் நாட்டிலே உள்ளனர், அவர்கள் அனைவருக்கும் இது போன்ற உதவிகள் கிடைக்கப் பெற வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். இது போன்ற உதவிகள் மீண்டும் எமக்கு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.



**திரு. பீ.எச். பஸ்சபெரும**
**மீளக்குடியேற்ற அதிகார சபை தலைவர்**

மடு பிரதேசத்தில் மீளக்குடியேறும் மக்களுக்காக மக்கள் வங்கி மற்றும் அதன் அனைத்து ஊழியர்களின் பங்களிப்பில் செயற்படுத்தப்பட்ட மடு வீடமைப்பு திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் இச்செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சனாதிபதி செயற்திட்ட படையணி, தேசிய நீர் மற்றும் வடிகாலமைப்பு சபை, இலங்கை மின்சார சபை, மன்னார் அரச அதிபர் மற்றும் அதிகாரிகள் மற்றும் மன்னார் பிரதேச படையினர் ஆகியோரின் உதவியுடன் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்குடியேற்ற அதிகார சபை செய்துக் கொடுத்தது.

மேன்மைதகு சனாதிபதி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மீளக்குடியேற்ற அமைச்சா எமக்கு எமது கடமைகளை செய்ய பூர்ண ஒத்துழைப்பு வழங்கியதுடன் மீளக்குடியேறுவோர் வீடுகளை பெற வசதிகளை ஏற்படுத்த உதவினர். வடக்கு யுத்ததால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 வீடுகளை அமைத்து கொடுக்க முன்வந்து அதற்கான நன்கொடைகளை செய்த தனது 50 ஆண்டு நிறைவை கொண்டாடும் மக்கள் வங்கிக்கும் அதன் ஊழியர்களுக்கும் எனது நன்மதிப்புகளை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திரு. ஏ. வேதநாயகம்,**
**மாவட்ட செயலாளர் - மன்னார்**

எமது மன்னார் மாவட்டத்திலே மக்கள் வங்கியினாலே 50 வீடுகள் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது நிறைவுபெற்றுள்ளது. இத்திட்டமானது மக்கள் வங்கியின் தலைவர் திரு. கருணாஜீவ அவர்களினாலே ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது, இத்திட்டத்திற்கான நிதிகள் மக்கள் வங்கியின் ஊழியர்களின் பங்களிப்பினால் திரட்டப்பட்டு இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எமது மாவட்டத்திலுள்ள மடு உதவி அரசாங்கப்பிரிவிலுள்ள மடு சந்திக் கருகாமையிலேயே இந்த 50 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகள் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதியே அமைக்கப்பட்டுள்ளன. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த தமிழ் சிங்கள மக்கள் இருவருக்குமே இந்த 50 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளது. இவ் வீடுவழங்கும் திட்டமானது மிகவும் பாரட்டத்தக்கதொன்றாகும், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டதற்கு மக்கள் வங்கியின் தலைவர் திரு. கருணஜீவ அவர்களுக்கும் மக்கள் வங்கியின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



**என். வசந்தகுமார அவர்கள்**
**மக்கள் வங்கியீன் பிரதான நிறைவேற்று அதிகாரி – பொது முகாமையாளர்**

இலங்கை வாழ் மக்களுக்கும் அனைவருக்கும் உரித்தான மக்கள் வங்கி ஆரம்பம் தொட்டே வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் தொடர்ச்சியான நிதிச்சேவையினை வழங்கி வருகிறது. யுத்தச் சூழலிலும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து சேவையினை வழங்கிய மக்கள் வங்கி சகல மக்களினதும் பொருளாதாரத்தை வளப்படுத்த தேவையான வசதிகளை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டது. இத்திட்டத்திற்கு மக்கள் வங்கி ஊழியாகள் தந்த ஒத்துழைப்பினை அவசியம் இங்கு நினைவு கூறவேண்டும் என்பதுடன் இவ்வீடமைப்பு திட்டத்திற்கு அவாகள் வழங்கிய பங்களிப்பை கௌரவிக்கின்றேன்.



**டப்ள்யூ. கருணாஜீவ அவர்கள்.**
**மக்கள் வங்கி தலைவர்**

இப்புனித செயலுக்கு தேவையான நன்கொடையினை வழங்கிய தந்த மக்கள் வங்கி குடும்பத்தின் அனைத்து ஊழியாகளுக்கும், ஒத்துழைப்பு தந்த அனைத்து அமைச்சர்கள், அலங்கை இராணுவம், மாவட்ட செயலாளர் மற்றும் அனைத்து அரச அதிகாரிகளுக்கும், அரச நிறுவனங்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே இப்பிரதேச மக்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



மக்கள் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேங்காயில் உள்ள சத்துக்கள் என்ன?



புரதச் சத்து, மாச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு உள்ளிட்ட தாதுப் பொருள்கள், விட்டமின் சி, நார்ச்சத்து என உடல் இயக்கத்துக்குத் தேவைப்படும் அனைத்துச் சத்துகளும் தேங்காயில் உள்ளன.

தேங்காய் உள்பட தென்னை மரத்தின் வெவ்வேறு பாகங்களின் மருத்துவக் குணங்கள் என்ன என்று எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா.

தேங்காய்ப் பால் உடல் வன்மைக்கு நல்லது. தேங்காய் எண்ணெய் சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் தீப்புண்கள் விரைவில் குணமாகும். கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்தது. தேமல், படை, சிரங்கு போன்ற நோய்களுக்குத் தயாரிக்கப்படும் மருந்துகளில் பெருமளவு தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுகி றது.

மாதவிடாயின் போது ஏற்படும் அதிக உதிரப் போக்குக்கு, தென்னை மரத்தின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு நல்ல மருந்து. பெண்களுக்குத் தென்னம் பூவும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தயாரிக்கும்போது கிடைக்கும் புண்ணாக்கோடு கருஞ்சீரகத் தையும் சேர்த்து தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தேங்காய் சிரட்டையில் (வெளிப்புற ஓடு) இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண் ணெய் தோல் வியாதிகளைக் குணப்படுத்து கிறது.

மூல முளை, ரத்த மூலம் போன்றவற்றுக்கு தென்னங் குருத்திலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. தேங்காய்ப் பால் நஞ்சு முறிவாகப் பயன்படுத்தப்படுகிறது.

தேங்காய் எண்ணெய் எளிதில் ஜீரணமாகும். குழந்தைகளுக்குத் தேவையான எல்லாச் சத்துகளும் தேங்காய்ப் பாலில் உள்ளன. தேங்காய் பாலில் கசகச, பால், தேன் கலந்து கொடுத்தால் வறட்டு இருமல் மட்டுப்படும்.

தேங்காய்ப் பாலில் காரத்தன்மை உள்ளதால், அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்றுப் புண்களுக்கு தேங்காய்ப் பால் மிகவும் சிறந்தது. உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளன. இவை உடலின் வளர்ச்சிதை மாற்றத்துக்குப் பெரிதும் உதவுகிறது.

# வெற்றிலை



மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே வெற்றிலை பயன் பாட்டில் இருந்து வருகிறது. வெற்றிலையில் கால்சியம், இரும் புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது. இது தவிர வெற்றிலை யைப் பயன்படுத்தி பல நோய்களையும் குணப்படுத்தலாம். அரை டம்ளர் தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலையை போட்டு கொதிக்க விடவும். இலை நன்கு சிவந்ததும் வடிகட்டி வைத்துக் கொண்டு சொறி, சிரங்கு, படைக்கு தடவி வந்தால் நல்ல குணம் கிடைக்கும்.

வயிற்றுவலி: இரண்டு தேக்கரண்டியளவு சீரகத்தை மைபோல் அரைத்து மூன்று தேக்கரண்டி வெண்ணெயில் போட்டு கலக்கி 5 வெற்றிலையை எடுத்து அதன் பின் புறத்தில் இந்தக் கலவையை கனமாக தடவி, மருந்து தடவிய பாகத்தை சட்டியில் படும்படி வைத்து வதக்க வேண்டும். ஒவ்வொரு வெற்றிலையையும் வதக்கிய பின் ஒரு டம்ளர் தண்ணீரை விட்டு நன்றாக கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டி அந்த கசாயத்தை ஒரு வேளை மட்டும் சாப்பிட்டால் வயிற்றுவலி நீங்கிவிடும்.

தலைவலி: வெற்றிலையைக் கசக்கிக் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் வலியுள்ள இடத்தில் தடவினால் தலை வலி உடனே குணமாகும்.

தேள் விஷம்: இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிட்டால் தேள் விஷம் உடனே முறியும்.

சர்க்கரை வியாதி: சர்க்கரை வியாதி உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் வேப்பிலை ஒரு கைப்பிடியளவும் அருகம் புல் ஒரு கைப் பிடியளவும் ஒரு சட்டியில் போட்டு 500 மில்லி லீற்றர் தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க விடவும். தண்ணீரின் அளவு 150 மில்லி லீற்றர் ஆக குறையும்வரை கொதிக்க விட்டு, பின்பு வடிகட்டி ஆற வைத்து வேளைக்கு 50 மிலி வீதம் மூன்று வேளை உணவுக்கு முன்பு சாப்பிடலாம்.

அல்சர்: அல்சர் உள்ளவர்கள் இரண்டு வெற்றிலையுடன் அத்தி இலை ஒரு கைப்படி வேப்பிலை 5 ஆகியவற்றை மேலே உள்ள முறைப்படி கசாயம் தயாரித்து மூன்று வேளை அருந்தி வரவும். முற்றின வெற்றிலையைச் சாறு பிழிந்து அதில் இரண்டு அவுன்ஸ் சாற்றுடன் 3 மிளகு அதே அளவு சுக்கு ஆகியவற்றை ஒரு தேக்கரண்டி தேனுடன் கொடுத்தால் இரைப்பு மூச்சுத் திணறல் குணமாகும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலர் கலராய் தீபாவளி!

கண்கவர் வர்ணங்களில்
கச்சிதமான டிசைன்களில்
எமரல்ட் தீபாவளி ஸ்பெஷல்
சேர்ட்கள் இப்பொழுது
சந்தையில் கிடைக்கின்றன.

எமரல்ட் அணியுங்கள்
தீபாவளிக்கு அசத்துங்கள்!

ரூபா.25,000 பெறுமதியான எமரல்ட் சேர்ட் அலுமாரியை வெல்லும் பரிசிழுப்பிற்கு உங்களைப் பதிவு செய்யுங்கள்.

பெயர் :..............................

முகவரி :..............................

தொ.பே :..............................

இவ் வவுச்சரை அனுப்பவேண்டிய முகவரி: எமரல்ட் இன்டர்நெஷனல், சேர்ட் அலுமாரி பரிசிழுப்பு, இல.104/4, தெஹிவளை வீதி,

Promo No: 809524

Emerald®
சேர்ட் என்றால் எமரல்ட் மட்டுமே

முடிவுத் திகதி: 2011 ஒக்டோபர் 26
பரிசிழுப்புத் திகதி: 2011 நவம்பர் 9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org